காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

மரம்
நடுவோம்



சுடர்: 29 கதிர்: 346 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 21, வெள்ளி 07.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily




**இலங்கைக்கு அமெரிக்கா எச்சரிக்கை!**

பக்கம் 03



தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் காணொலி வடிவத்தை 'உதயன்' இணையத் தளத்தில் பார்க்கலாம்.
www.onlineuthayan.com

# தீர்வைப் பெற இருக்கும் ஒரே வழி மென்தீவிரமே!

## சாவகச்சேரியில் நேற்று அடித்துக் கூறினார் சுமந்திரன்



தென்மராட்சி, நவம்பர் 7
தமிழர்களின் முன்னால் உள்ள அரசியல் சூழ்நிலையில் அவர்கள் ஒரு தீர்வைப் பெறுவதற்கு – உரிமைகளை மீளப்பெறுவதற்கு – அவர்கள் முன்பாக உள்ள ஒரே தெரிவு மென்தீவிரம்தான். 2009 ஆம் ஆண்டின் பின்னர் தமிழர்கள் தம்மிடம் இருந்த வன்தீவிரத்தை – ஆயுத பலத்தை, பண பலத்தை – இழந்துவிட்டார்கள். இப்போது அது இல்லை. இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து, தார்மீக ரீதியாக மற்றவர்களையும் ஒன்றிணைக்கக்கூடிய மென்தீவிரம் மட்டுமே தமிழர்கள் முன்னுள்ள ஒரே தெரிவு.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜின் நினைவு தினம் நேற்றுச் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்புரையாற்றிய போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகிலேயே விசேடமாக அரசிய

❖22 ஆம் பக்கம் பார்க்க

# கருத்துச் சுதந்திரத்தை ஒழிப்பதற்கே உயர்நீதிமன்றை நாடினார் மஹிந்த

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.7
பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏன் உயர்நீதிமன்றத்திடம் அவசரமாக விளக்கம் கோரியுள்ளார் எனக் கேள்வி எழுப்பிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், ஏனையோரின் கருத்துச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் வகையிலேயே இந்தச் செயல் அமைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.
அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளதன் அவசரத்தையும் – அவசியத்தையும் தம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.
18 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அமைய மேலுமொரு தவணைப் பதவிக் காலத்திற்காகத் தேர்தலில் போட்டியிடத் தடை உள்ளதா? என்

❖22 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளிக்குளம் படைமுகாம் எப்போதும் அகற்றப்படாது

## மக்களுக்கு மாற்றுக் காணிகளே
## கோத்தபாய திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7
முள்ளிக்குளம் படை முகாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அகற்றப்படாது என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்றுக் காணியில் நிரந்தர வீடு அமைத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கும் இடையில் கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்திப்பு நடைபெற்றது.
அந்தச் சந்திப்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த 2012 ஆம் ஆண்டு கர்தினால் மல்கம் ரஞ்சித்துடன் மன்னாருக்கு வருகை தந்தபோது 21 வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அந்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படவில்லை என்பதை ஆயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

❖22 ஆம் பக்கம் பார்க்க



**'நெல்சிப்' முறைகேடு**

# ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு கலைப்பு

## வடக்கு முதலமைச்சர் மேற்பார்வையில் புதிய விசாரணைக் குழு விரைவில்

யாழ்ப்பாணம், நவ.7
'நெல்சிப்' திட்டத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு இடைநிறுத்தப்பட்டுள்ளது.
அந்த மோசடியை விசாரணை செய்வதற்கான புதிய விசாரணைக்குழு, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தலைமையில் முதலமைச்சரின் மேற்பார்வையில் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பணியாற்றும் சகல ஊழியர்களையும் அழைத்து வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட 'நெல்சிப்' திட்டத்தில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான வே.சிவயோகன் மற்றும் ச.சுகிர்தன் ஆகியோர் மாகாண சபையின் கடந்த அமர்வில் சுட்டிக்காட்டியிருந்தனர். அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற

❖19 ஆம் பக்கம் பார்க்க

# ஆளுநரின் அனுமதிக்காக சிவாஜி, அனந்தி காத்திருப்பு

## அவர்கள் வெளிநாடு செல்ல அவைத் தலைவர் பரிந்துரை கேட்கிறார் சந்திரசிறி

யாழ்ப்பாணம், நவ. 7
வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், வெளிநாடுகளுக்கு தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பயணம் மேற்கொள்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றனர். இருப்பினும் சுகாதார அமைச்சருக்கு மாத்திரம் வெளிநாடு செல்வதற்கான அனுமதி ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள், ஆகியோர் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு வடக்கு மாகாண ஆளுநரின் அனு

❖22 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரமே மலையகத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 7
வடக்கு மாகாணசபையால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரத்தின் இறுதியிலேயே, மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு நிவாரணப் பொருள்கள் கொண்டு வர வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளமையினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.
பதுளை கொஸ்லந்தைப் பகுதியில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வடக்கு மாகாண சபை நிவாரணப் பொருள்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை கடந்த வாரம் முன்னெடுத்தது. வடக்

❖19 ஆம் பக்கம் பார்க்க

**சீனாவின் நீர்மூழ்கிகளால் ஆபத்து இல்லை!**
சரத் அமுனுகம கூறுகின்றார்

பக்கம் 02

"என் மனதில் ஆழப் பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை."
-சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

# சீன நீர்மூழ்கிகளால் அச்சுறுத்தல் இல்லை

## புதுடில்லியில் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, நவ.7
சீனா நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்பது அச்சுறுத்தலான நிலைமையல்ல என்று தெரிவித்துள்ள அமைச்சர் சரத் அமுனுகம ஆபிரிக்காவிலிருந்து வரும் வழியிலேயே அவை இலங்கையில் தங்கியிருந்தன என்றும் தெரிவித்தார்.
புதுடில்லியில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர்இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.
"அம்பாந்தோட்டை துறைமுகத்தினூடாக செல்லும் நூற்றுக்கணக்கான கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதிகளை வழங்குவதற்காக சீனாவின் உதவியுடன் பெரும் எரிபொருள் தாங்கிகளை அமைக்கும் நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டுள்ளது.
இதேவேளை தமிழக மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கையில் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படுவதில்லை"- என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற)



## மார்பகங்களைச் சிறியதாக்கியவர் இப்போது ஆபத்தான நிலையில்

கொழும்பு, நவ.7
தனது மார்பகங்களை சிறியதாக்கிக் கொள்வதற்காக 50 ஆயிரம் ரூபா கொடுத்து சத்திர சிகிச்சையொன்றை மேற்கொண்ட பெண்ணொருவர், உயிருக்கு ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
குறித்த சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக வைத்தியரொருவர் 2 இலட்சம் ரூபா கேட்டார் என்றும், குறித்த பெண்ணிடம் அவ்வளவு பணம் இல்லாமையினால் 50 ஆயிரம் ரூபாவுக்கு, குறித்த வைத்தியரின் களனியில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சத்திர சிகிச்சையின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அந்தப் பெண் பாதிக்கப்பட்ட நிலையிலேயே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்ட வைத்தியரின் வீட்டில், சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
பெரிய மார்பகங்களை சிறிதாக்குவதாக வெளியான விளம்பரமொன்றைப் பார்த்தே, 41 வயதான மேற்படி பெண், கடந்த ஒக்ரோபர் 17ஆம் திகதி அந்த வைத்தியரை நாடி இந்தச் சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## 17 கிலோமீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்ட உடல்

### இரத்தக்கறையை வைத்து கண்டுபிடித்த பொலிஸார்



கொழும்பு, நவ.7
வாகன விபத்தொன்றில் உயிரிழந்தவரின் சடலம், நாவலப்பிட்டி பிரதேசத்தில் இருந்து கம்பளை நகரம் வரை 17 கிலோமீற்றர் தூரம் இழுத்துச் செல்லப் பட்ட நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் நேற்று முற்பகல் இடம் பெற்றுள்ளது.
நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் குழு, நாவலப்பிட்டி முதல் கம்பளை வரையுள்ள வீதியில் காணப்பட்ட இரத்த கறையை பின்தொடர்ந்து சென்ற போது இந்த சடலம் கிடப்பதை கண்டுள்ளனர். அதையடுத்து சடலத்தை மீட்ட பொலிசார் அதனை கம்பளை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## இலங்கைக்கு கடத்தப்பட்ட பொருள்கள் பல பறிமுதல்

### சுங்க அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை



கொழும்பு, நவ.7
டுபாயிலிருந்து வரி கட்டாமல் ஏய்க்கும் நோக்கில் இலங்கைக்கு கடத்தப்பட்ட சுமார் ஒரு கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்கள், காலணிகளை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
பயணிகளுடைய பொருள்கள் எனக் குறிப்பிடப்பட்டு இந்த நான்கு பெட்டிகளும் டுபாயில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன எனவும் இவை கிண்ணியா, அரநாயக்க மற்றும் வத்தளை பிரதேசங்களின் முகவரிகளுக்கு அனுப்பப்படவிருந்தன எனவும் சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.
இவற்றை கடந்த திங்கட்கிழமை திறந்தபோது மூன்று லட்சத்து 47 ஆயிரத்து 200 சிகரெட்களும், 832 சோடி ஆண்களுக்கான காலணிகளும், இரண்டாயிரத்து 80 சோடி சிறுவர்களுக்கான காலணிகளும் இருந்தன எனவும் லெஸ்லி காமினி தெரிவித் தார்.
பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 40 லட்சம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது. அதனால் அரசு சுமார் இரண்டு கோடியே 10 லட்சம் ரூபா வரியை இழக்க நேரிட்டது எனச் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (ற)

## விபத்துகள்



### பள்ளத்தில் கவிழ்ந்தது லொறி; சாரதி காயம்

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓடு மற்றும் செங்கற்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறி வவுனியாவில் விபத்துக்குள்ளாகியுள்ளது. மூன்றுமுறிப்பு பகுதியில் எதிரே வந்த பஸ்ஸுக்கு வழிவிட முற்பட்ட போது அருகிலிருந்த பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது. இச்சம்பவத்தின் போது லொறியில் ஏற்றி வந்த ஓடு மற்றும் செங்கற்கள் சேதமடைந்ததுடன் லொறியும் சிறு சேதத்துக்கு உள்ளாகியதுடன் லொறியின் சாரதியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ற-421)

### மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

அகங்கம மகா விகாரை மாவத்தையில் மோட்டார் சைக்கிளொன்று மற்றுமொரு வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

### தொட்டிக்குள் விழுந்து குழந்தை சாவு

கலேவல கடுவலந்த பிரதேசத்தில் 1 வருடம் 4 மாதங்கள் நிரம்பிய குழந்தையொன்று தண்ணீர் தொட்டியில் விழுந்து, நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது என்று கலேவல பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசைத் தோற்கடிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ரணில் விக்கிரம சிங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.7
பதவியிலுள்ள அரசைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண் டும் என்பதில் மாற்றுக் கருத்துகிடையாது என்ற போதிலும் அனைத்து தரப்பினரும் நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமாயின் ராஜபக்ஷ அரசை தோற்கடிக்க வேண்டியது அவசிய மானது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

பிள்ளையார் இன் றெஸ்ட்றோறன்ட்
காலை, மதியம், இரவு நேர சாப்பாடுகள் உங்கள் சுவைக்கேற்ப சைவ, அசைவ உணவுகள் எம்மால் சமைத்துத் தரப்படும்
காலையில் சப்பாத்தி, பூரி, பிட்டு, இடியப்பம்
இரவில் இடியப்பம், பிட்டு, சப்பாத்தி, பூரி, சிக்கின் புரியாணி, மரக்கறிப் புரியாணி ஆகியன சைவ, அசைவ உணவுகளுடன் கிடைக்கும்
காலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை றெஸ்ட் றோறன்ட் திறந்திருக்கும்
தேவையான அளவு உங்கள் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்
விலை ரூபா 300/= மட்டுமே (ஒருவருக்கு)
நேரம் மாலை - 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
300/= ஒருவருக்கு
மதியம் குத்தரிசி, சம்பா இத்துடன் யாழ். மரக்கறிகளுடனும், கோழிக்கறி, மரக்கறிகளுடனும் சமைத்து வழங்கப்படும்.
* பிறந்தநாள், திருமணம், நிச்சயதார்த்தம், பூப்புனித நீராட்டுவிழா, வியாபாரக்கூட்டங்கள் மற்றும் உங்கள் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு A/C மண்டபவசதியுடன் ஒரேநேரத்தில் 250 பேர் அமரக் கூடிய மண்டபம் உண்டு.
தொடர்புகளுக்கு:
பிள்ளையார் இன், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 282,
Fax 021 222 4449
Emill: Pillaiyar. In @ g mail.com.
Web: www. PillaiyarInn. com.
(63831)(45.6.3)

## அமைச்சர் ஜகத் பாலசூரியவை சந்தித்தார் பிரான்ஸ் தூதுவர்

### கலாசார உரிமைகள் பற்றி பேசினர்



கொழும்பு, நவ.7
தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய மற்றும் பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜீன் போல் மோன்வாக் ஆகியோர் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.
செத்சிறிபாயவில் உள்ள தேசிய மரபுரிமைகள் அமைச்சில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.
இதன் போது இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார உரிமைகளை பாதுகாப்பது, அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் மரபுரிமைகளை பாதுகாப்பதில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் நட்புறவாக பணியாற்றுவது எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 21 வெள்ளி (07.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 346

# சாட்சிகளை அச்சுறுத்துவது ஐ.நாவை தாக்குவதற்கு சமம்

## இலங்கைக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை

நியூயோர்க், நவம்பர் 7

**பேரவைக்கான அமெரிக்க தூதர் கீத் ஹாப்பர், சமூக ஊடகத்தளமான டுவிட்டர் மூலமாக, ஐ.நாவுடன் ஒத்துழைப்போரை மௌனிக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் பிரயத்தனங்கள் ஐ.நாவின் மீது மேற்கொள் ளப்படும் தாக்குதலுக்கு நிகரானவை என்பதை இலங்கை புரிந்து கொள்ளவேண்டும் என்ற கடுந்தொனியிலான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.**



ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினால் இலங்கை மீது நடத்தப் படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு எதிராக இலங்கை அதிகாரிகள் நெருக்குவாரங்களைத் தீவிரப்படுத்தியுள்ள தான தகவல்கள் தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் கரிசனைகள் வெளியிடப்பட்டுவந்த நிலையிலேயே அமெரிக்கா இவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் கருத்துவெளியிட்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா. விசாரணையாளர்கள் தாங்கள் அடைய விரும்பும் முடிவுக்கு அவசியமான தகவல்களை மாத்திரம் பெற முயலும் பக்கச்சார்பான அணுகு முறையைப் பின்பற்றுவதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

விசாரணையின்போது பக்கச்சார் பின்மை மற்றும் நேர்மையுடன் தொடர்புட்ட சில கொள்கைகளாவது பின்பற்றப்படவேண்டுமெனவும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். குறிப்பிட்ட சில தரப்பினர் ஐ.நா. விசாரணையை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது என ஏமாற்று வதைய்ும் அவர்களது துயரங்களை பயன்படுத்தி தகவல்களை சேகரித்து ஐ.நா. விசாரணைக்குழுவிற்கு போலியான விவரங்களைச் சேகரிப்பதும் தெரியவந்துள்ளது. இவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நெருங்கிய தொடர்புள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார். இந் நிலையில் அமெரிக்க அதிகாரி மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

## உயர்நீதிமன்ற விளக்கத்தின் பின்னரே அடுத்தகட்ட நகர்வு

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐ.தே.க. அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறை போட்டியிட முடியுமா என்பது தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்துக்காக ஐ.தே.க. காத்திருக்கிறது எனத் தெரிவித்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான விஜேதாஸ ராஜபக்ஷ, இதையடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஐ.தே.க. தீர்மானிக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் அரசமைப் புக்கமைய ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ மூன்றாவது முறை போட்டியிட முடியாது என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டி வருகின்றபோதும், உயர்நீ திமன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க அமர்வில் விவாதம் நடத்துக

### சட்டப்படி மூன்றாவது முறையாக மஹிந்த போட்டியிட முடியாது என்கிறார் சுமந்திரன்

கொழும்பு, நவ.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சட்டப்படி மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் சட்டபூர்வமாக நிறைவேற்றப்படவில்லை என்றும் சிரேஷ்ட சட்டத்தரணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்திடம் கேட்டுள்ள விளக்கம் தொடர்பில் நீதிமன்றப் பகிரங்க அமர்வில் விவாதிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

18ஆவது அரசமைப்புத் திருத்தத் திற்கமைய மேலுமொரு தவணைப் பதவிக்காலத்திற்காகத் தேர்தலில் போட்டியிட தடை உள்ளதா என்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தாயை காணவில்லை

தென்மராட்சி, நவ.7

மருத்துவமனையில்சிகிச்சை பெற வந்த 25 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் கடந்த நான்கு நாள்களாக வீடு திரும்பவில்லையெனச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை மத்தியைச்சேர்ந்த நித்தியகுமார் சுபிதா என்பவர் கடந்த திங்கள்கிழமை சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெறவென வீட்டிலிருந்து புறப்பட்டார் எனவும் அவர் இதுவரை வீடு திரும்பாததால் அனைத்து இடங்களிலும் தேடிவருவதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சி

### இந்தியாவில் இது நடக்காத விடயம் என்கிறார் இந்தியப் பிரதித் தூதுவர்

வடமராட்சி,நவ.7

பருத்தித்துறை நகரில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து எல்லாவற்றையும் செயற்படுத்துவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் ஊரில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுத்துவது நடக்காத விடயமாகும். இங்கு நிலவும் ஒருமித்த நட்பு அரசியல் பணி தொடரவேண்டும் என யாழ்ப்பாணத்துக்கான இந்தியாவின் பிரதித் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் திருமண மண்டபத்தில் பருத்தித்துறை நகர சபையின் உள்ளூராட்சி வார தினமும், தேசிய வாசிப்பு மாதப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் சபைத் தலைவர் சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பதில் இந்தியத் தூதுவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பருத்தித்துறை நகரம் கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஒரு வணிக நகரமாக முற்காலத்தில் இருந்து வந்துள்ளது. குறிப்பாகப் பருத்தித்துறையில் இருந்து பர்மாவுக்கு பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதை அறியும்போது மிகவும் பெருமையளிக்கின்றது. பழைய வணிகப் பெருமை பருத்தித்துறை நகரத்துக்கு மீண்டும் வரவேண்டும் அந்த நிலைக்கு நகரம் உயரவேண்டும்.

காந்தி ஜெயந்தி தினத்தன்று பருத்தித்துறையில் தான் மஹாத்மா காந்தி சிலை திறக்கப்பட்டது. இந்தியாவில் புதிதாகச் சிலைகள் ஏதும் திறக்கப்படவில்லை. பருத்தித்துறையில் காந்தி சிலை திறக்கப்பட்டதை இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து பிரமாதமாகச்

(22ஆம் பக்கம் பார்க்க)

## விடுதிகளில் சட்டவிரோத செயற்பாடு; ஐவர் கைது

தென்மராட்சி, நவ.7

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரு விடுதிகளில் பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்ட ஐந்து பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த திங்கள்கிழமை இரவு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியை அண்மித்த பகுதியில் ஆபாசமாக நடமாடிய பெண்ணைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது அந்தப் பெண் கொடுத்த தகவலையடுத்து மேற்படி இரண்டு விடுதிகளிலும் சாவகச்சேரி நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இடுப்பில் மறைத்து 100 பைக்கெற் கஞ்சா கடத்தியோர் கைது

யாழ்ப்பாணம், நவ.7

100 பைக்கெற் கேரளாக் கஞ்சாவை இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டு ஓட்டோவில் பயணித்த இரண்டு பேரும் ஓட்டோ சாரதியும் நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடைய தென் பகுதியைச் சேர்ந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் விசேட கொடுப்பனவு வேண்டும்

### ஆசிரிய சேவைச் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 7

தொழிற்தகைமைகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர் தரத்தினர் அரசின் விசேட படிக் கொடுப்பனவில் உள்ளடக்கப்படவில்லை. அது நியாயமற்ற செயல் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்க செயலாளர் மஹிந்த ஜயசிங்க அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனையில் 57/2 பிரிவின் கீழ் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா விசேட படியாக வழங்குவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரச ஊழியர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உள்ளடக்கப்படவில்லை.

அரச ஊழியர்களில் அதிகூடிய பொறுப்பு மிக்க மற்றும் கிரமமான தொழில் தகுதியைப் பெறவேண்டிய தரப்பினர்களில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களே முதலிடம் வகிக்கின்றனர்.

ஏனைய உத்தியோகத்தர்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பகிரங்கக் கருத்தாடல்

மாற்றுக் கருத்தாடலுக்கான அமையத்தின் ஏற்பாட்டில் "மேல் மாகாண கல்வித்துறையில் தமிழ்மொழி அமுலாக்கல் பிரச்சினைகளும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் நாளை சனிக்கிழமை பகிரங்க கருத்தாடலொன்று நடைபெறவுள்ளது.

இலக்கம் 58, தர்மராம மாவத்தை, கொழும்பு-6 என்ற முகவரியில் உள்ள பெண்களுக்கான கல்வி ஆய்வு நிலையத்தில் நடைபெறும் பகிரங்கக் கருத்தாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் பகிரங்கக் கருத்தாடலில் சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்து கலந்துரையாடலாம் மற்றும் எழுத்து மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் தலைவர் சி.சரவணபவானந்தன் அறிவித்துள்ளார். (வ-11)

## பாரதி கலைவிழா

வவுனியா, நவ.7

பாரதி முன்பள்ளியின் 'பாரதி கலைவிழா' நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெயராஜா சந்திரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி க.சுவர்ணராஜா, விரிவுரையாளர் தி.ஜெயக்காண்டீபன், வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராஜ், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா, வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன், வவுனியா முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.தர்மபாலன், சைவப்பிரகாச ஆரம்பப்பிரிவு பாடசாலை அதிபர் கி.நந்தபாலன், சைவப்பிரகாச ஆரம்பப்பிரிவு பாடசாலை உப அதிபர் சி.கிருஸ்ணானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக வைரவபுளியங்குளம் கிராம சேவையாளர் தி.கனகலிங்கம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜோ.ஜெயகெனடி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாடல், நடனம், பேச்சு உட்படபல்வேறுகலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-402)

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம் நவ.7

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர தலைவர்களில் ஒருவரும், சிரேஷ்ட உறுப்பினருமான சி.நவரத்தினத்தின் 10ஆவது வருட நினைவுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் குறித்த சனசமூக நிலையத்தின் செயலாளர் வி.மகாலிங்கத்தின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பொதுவுடமை இயக்கத்தின் உறுப்பினர்கள் சிலரின் நினைவுரைகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி)

## ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி,நவ.7

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் இன்று இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த ஆசிரியர் வே.ஞானசம்பந்தன் 'மனிதனும் மதமும்' என்ற தலைப்பில் ஆன்மிக சொற்பொழிவொன்று நிகழ்த்துவார் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பாக்கியம் ஆனந்தராசா



சங்கானை, பிளைக் வீதியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டிச் சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் ஆனந்தராசா நேற்றுமுன்தினம் (05.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆனந்தராசாவின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், தேசிய வீடமைப்புத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், நாகநந்தினி விக்கினராஜா (லண்டன்), விமலராஜா (பிரதி அதிபர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), பிரேமினி, வித்தியா (ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரலிங்கம் (தொழில் பயிற்சி அதிகாரசபை, கைதடி), சுதாஜினி (லண்டன்), ரதினி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்.2ஆம் கிளை), சிவகுமாரன், பகீரதன் (ஆசிரியர், கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், புவனேஸ்வரியின் அன்புச் சகோதரியும், திலிபன், உஷா, பகிரதன், கோகுலன் ஆகியோரின் பெரிய தாயும், தர்சனா, வாகீஸ்வரன், விமேஷ், ரவீஸ், சகானா, சங்கீத், வினேஷ், ஜயகுலன், ஜயனுகா, சாருஜா, வேணுஜா, திவ்வியா, மோனிஷா, சுவஸ்திகன், பிரியங்கா, கீர்த்தி, கார்த்திகன், ஆர்த்திகன் ஆகியோரின் நேசமிகு அம்மம்மாவும், மேனுஜனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை அன்னாரின் உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(51993)
(12.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 667 3371

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 - 01 - 1950

மறைவு 07 - 11 - 2012

### சவரிமுத்து தோமஸ்

நிஜமாக நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன்.

## முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வைரமுத்து சரவணமுத்து

(இ.போ.ச.ஊழியர், சமாதான நீதிவான் (J.P)

திதி:பிரதமை 07.11.2014

தோற்றம் 24.03.1938

மறைவு 09.11.1984

பாசமுள்ள தந்தையாய் நற்பண்புகளுடன்
எம்மை வழிநடத்திய எமக்காகவே வாழ்ந்த
எங்கள் அன்பான அப்பாவே! நாம்
உயிருடன் இருக்கும் வரை உங்கள்
வழி காட்டலுடன் வாழ்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியுடைய
இறைவனை வேண்டுகிறோம்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி.

(53787)(12.3)

உங்கள் நினைவுகளுடன்.....
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# கைவிடப்பட்ட நிலையில் கட்டுமானப் பணிகள்

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் வரணிப் பிரதேசத்தில் சிட்டிபுரம் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் கட்டுமான வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. கடந்த 2 வருடங்களுக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையிலுள்ள இந்தக் கட்டட நிர்மாண வேலை கள் குறித்து தென்மராட்சி பிரதேச செயலர் கவனம் செலுத்தி கலாசார மண்டப வேலை யைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-122)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



கு.நிஸ்மிகன்
170 புள்ளிகள்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த 170 புள்ளிகள் பெற்ற செல்வன் கு.நிஸ்மிகன், 159 புள்ளிகளைப் பெற்ற செல்வி வி.பானுஜா ஆகியோரையும்



வி.பானுஜா
159 புள்ளிகள்

மேலும் 152 புள்ளிகளைப்பெற்ற செல்வன் சு. திவ்வியன்றோய் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

| | | |
|---|---|---|
| ந. தமிழினியன் - 145 | ஜெ. லகீசன் - 134 | பி.மேனிலவன் - 100 |
| ஜெ. சாருண்ஜா - 144 | ம.டேனிஸ்ரன் - 131 | த.நிஷாந் - 100 |
| ச. மிதுஷா - 141 | சி.விதுஷணன் - 120 | |

ஆகியோரையும் 70 புள்ளிகளுக்கு மேல்பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை சாவகச்சேரி.

(f.17561) (15.6.5)


# 'புயல் மழைக்குப் பின்' நூல் வெளியீடு நாளை

கவிஞர் த.ஜெயசீலனின் 'புயல் மழைக்கு பின்னான பொழுது' கவிதை நூல்வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லைநாவலர் கலாசார மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபரும் யாழ். தமிழ்ச்சங்க செயலாளருமான ச.லலீசன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் என்.சண் முகலிங்கம் நிகழ்த்துவார். நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் நூல் நயப்புரைகளை யாழ். பல்கலைக் கழக முன் னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா மற்றும் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (வ-108)

## இலக்கண நூல்கள் வெளியீடு

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களமும் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பண் டித மாணவரும் இணைந்து நடத்தும் கடம் பேசுவரனின் இலக்கண மரபு, தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடு என்ற இரு நூல்களினதும் வெளியீட்டு விழா இணுவில் இந்துக்கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும்.

இலக்கண மரபு என்ற நூலுக்கான வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு.கௌரிகாந்தனும் தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் என்ற நூலுக்கான வெளியீட்டுரையை யாழ் பல் கலைக் கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் க.ஸ்ரீகணேசனும் நிகழ்த்துவார்கள். (வ)

# பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.7

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய (ஆரம்பப் பிரிவு) உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வைத்தியர் லியோன் புஷ்பராணியும் கலந்து கொள்வர். (வ-9)

♦♦♦

தென்மராட்சி,நவ.7

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம் பெறும்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடை பெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர்.

பரிசில்களை யாழ்.பல்கலைக் கழக மொழியியல், ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி சிவராணி சிறிசற்குணராஜா வழங்குவார்.

கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்

2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரும்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும்






பா.கவிப்பிரியன்
புள்ளி - 182



செ.எழில்மேனன்
புள்ளி - 180



ஜெ.ஜெயராமன்
புள்ளி - 176



ச.சஞ்சீவன்
புள்ளி - 173



க.ஆர்த்திகன்
புள்ளி - 171



த.தனுசிகா
புள்ளி - 170



தே.டன்சிகா
புள்ளி - 168



த.தேம்பாஜினி
புள்ளி - 163



வி.நதிமகள்
புள்ளி - 157



நா.வானதி
புள்ளி - 118

Congratulation

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| 01.யோ.பிரசாந் - 153 | 17.சி.பிரியந்தினி - 124 |
| 02.ர.மதுமிதன் - 138 | 18.இ.சஞ்சிகா - 147 |
| 03.வி.தமிழ்த்திழகன் - 118 | 19.சு.தேனுஜா - 117 |
| 04.இ.புவிநீதன் - 143 | 20.அ.செரீன் - 149 |
| 05.ப.தழிழ்வாணன் - 108 | 21.தி.தீக்சிகா - 135 |
| 06.வி.அபர்ணா - 144 | 22.இ.கேதீஸ்வரி - 134 |
| 07.வே.கிருசிகா - 142 | 23.ஜீ.சஜீனா - 138 |
| 08.ச.டக்சிகா - 119 | 24.ம.சேராளன் - 143 |
| 09.ந.சாருண்யா - 114 | 25.ச.சஞ்சீவன் - 109 |
| 10.க.ஒளிச்சுடர் - 120 | 26.உ.அர்ச்சுதன் - 149 |
| 11.ஜெ.பிரபாளினி - 116 | 27.ர.விதுசன் - 111 |
| 12.அ.கனிஸ்ரா - 131 | 28.சு.யோகிதாஸ் - 125 |
| 13.கே.விஜேகா - 128 | 29.ர.கலையரசன் - 116 |
| 14.மோ.தட்சிகா - 117 | 30.வி.கிருஷாந் - 126 |
| 15.பா.பரநிதா - 121 | 31.ந.என்றுசன் - 116 |
| 16.ஆ.சுமித்தா - 134 | |

எமது பாடசாலையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் வித்தியாலய அதிபர், வெற்றிக்கு வழிகாட்டிய ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"கல்வியின் சிறப்பு உம்மை வளர்த்திற்று
பள்ளியின் சிறப்பு உம்மால் உயர்ந்திற்று
வாழ்க வளமுடன்
தொடரட்டும் உம் கல்வியின் சிறப்பு"

வாழ்த்துவோர்:

Best Wishes

பாடசாலைச் சமூகம்

மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்

(51666) (7.3)

## ஹையஸ் வாகனத்தில் வந்தோர் நாவற்குழிப் பாலத்தில் அட்டகாசம்

*பஸ் சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்*

யாழ்ப்பாணம், நவ.7
பலர் பார்த்திருக்கத் தனியார் பஸ் சாரதியையும் நடத்துநரையும் ஹயஸ் வாகனத்தில் வந்தோர் மிகக் கடுமையாகத் தாக்கிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நாவற்குழி பாலத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
அன்றைய தினம் மதிய வேலை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாலத்தின் ஒரு பக்கத்தில் திருத்த வேலை செய்த வண்ணம் இருந்தனர். இதனால் மறு பக்கத்தினாலேயே போக்கு வரத்தை மேற்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. யாழ். நகரில் இருந்து வந்த தனியார் பஸ் ஒன்றில் சாரதியும் நடத்துநரும் மட்டும் வந்து கொண்டிருக்க வீதி அதிகார சபையினர் அந்த பஸ்ஸை முன் செல்ல அனுமதித்தனர். அந்த பஸ் வந்து கொண்டிருந்தவேளை திடீரென எதிர்ப் பக்கமாக அனுமதி இன்றி வந்த ஹையஸ் வாகனம் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டன. இடம் போதாத நிலையில் ஹையஸ் வாகனத்தில் வந்தவர்கள் எதிரே வந்த தனியார் பஸ் சாரதியோடு வாக்குவாதப் பட்டுவிட்டு திடீரென பஸ்ஸின் முன் கண்ணாடியையும், யன்னல் கண்ணாடியையும் உடைத்ததுடன் பஸ்ஸில் வந்த இருவரையும் சரமாரியாக தாக்கினர். அத்துடன் வீதியில் அட்டகாசமும் புரிந்தனர். பொதுமக்கள் பயம் காரணமாக அசையாது நின்றனர். இதன் பின்னர் இந்தக் கும்பல் பெரும் ஆரவாரத்துடன் அங்கிருந்து செம்மணி வீதியூடாக சென்றது. இவர்களது வாகனத்தில் வாள், கொட்டன்கள் என்பன இருந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

(த-288)

## தீவகத்தில் ஆசிரியர் வெற்றிடத்தை உடனடியாக நிரப்புமாறு கோரிக்கை


யாழ்ப்பாணம், நவ.7
வரலாறு, புவியியல், தமிழ், மனையியல் கணக்கியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுக்கு நீண்டகாலமாகத் தீவுப்பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதால் தீவகப் பாடசாலை மாணவர்களின் கல்வி பெரிதும் பின்னடைந்து வருவதாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரி.குருகுலராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.
தீவக கல்வி வலயத்தில் ஆசிரியர் ஆளணி வெற்றிடத்தை நிரப்புமாறும், ஆசிரியர் இடமாற்றம் குறித்தும் அவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.
தீவக வலய பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் ஆளணி 648 ஆக இருக்கும் நிலையில் 587 ஆசிரியர்களே தொடர்ச்சியாகச் சேவையாற்றி வருகின்றனர். இவர்களில் 35 பதில் அதிபர்களும் அடங்குவர். நீண்டகாலமாக 96 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் தீவக வலயப் பாடசாலைகளில் உள்ளன.
தற்போது சேவையில் உள்ள மேற் குறித்த ஆசிரியர் தொகையில் முன்பு கட்டாய 10 வருட சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களில் 76 பேர் பணியாற்றி வருகின்றனர். அத்தோடு மூன்று வருட ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 65 ஆசிரியர்களும் மூன்று வருடத்தைப் பூர்த்தி செய்தமையால் விடுவிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.
எனவே சேவைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களை விடுவித்தும், வெற்றிடமாக உள்ள ஆசிரியர் ஆளணிக்குமாக மொத்தம் 161 பேரை உடனடியாக நியமிக்குமாறும் வெளிமாவட்டத்தில் சேவை செய்யாத யாழ்ப்பாணத்தில் அதிபர் சேவையில் உள்ளவர்களையும் தீவக வலயப் பாடசாலைகளில் நியமித்து அந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுமாறும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

(த-7)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.07
கவிஞர் த.ஜெயசீலனின் "புயல்மழைக்குப் பின்னான பொழுது" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல்3.00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.
வரவேற்புரையினை நயினை கி.கிருபானந்தாவும் வாழ்த்துரையினை சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கனும், வெளியீட்டுரையினை பேராசிரியர் தி. வேல்நம்பியும், நூல் நயப்புரையினை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் கவிஞர் சோ.,பத்மநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.
நூலின் முதற் பிரதியை கவிஞர் இயக்கச்சி சி. கருணாகரனும் கௌரவப் பிரதியை கலாபூசணம் செ.குமாரசாமியும்பெற்றுக் கொள்வர். (த)

## 35 மதுவரி உத்தியோகத்தர்கள் பயிற்சி முடித்து வெளியேறினர்



கொழும்புத்துறை, நவ.7
இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகத்திலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான பரிசளிப்பு மற்றும் அணி வகுப்பு நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.
அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சியை முடித்துக்கொண்ட 35 பேர் வெளியேறினர்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்ச்சியும் சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், விசேட அதிதியாக மதுவரி ஆணையாளர் (குற்றப்பிரிவு) மல்லவ, மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்) விதானகே பிரதி மதுவரி ஆணையாளர் (குற்றப்பிரிவு) வசந்த திசநாயக்க, வட பிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் கிறிஸ்ரியோசப் ஆகியோர் கலந்துகொண்டனர்.
பிற மாவட்டங்களைச் சேர்ந்த மதுவரி அதிகாரிகள், பயிற்சியை முடித்துக்கொண்டோரின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.
போர் முடிவடைந்த நிலையில் சட்டவிரோத மது உற்பத்தி, பாவனை என்பன அதிகரித்துள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த வட பிராந்தியத்தில் ஆளணிப் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவியதையடுத்து புதிய மதுவரி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
இதனால் சட்டவிரோத மது உற்பத்தி, பாவனை, மதுவால் ஏற்படும் சமூக தாக்கங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியுமென உரையாற்றியோரால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. (த-135)

## கழிவுகளைத் தரம் பிரிக்க மக்களே ஒத்துழையுங்கள்

கழிவுப் பொருள்களை தரம் பிரித்துப் பொதியாக்கி வீதியோரங்களில் குறிப்பிட்ட இடங் களில் சேர்க்கும் திட்டத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு தரவேண்டும் என மாநகர கழிவகற்றும் பிரிவினர் கேட்டுள்ளனர்.
கழிவுப் பொருள்களை மக்கள் உக்கும், உக்காத பொருள்களாகத் தரம் பிரித்துப் பொதிகளாக்கி வீதியோரங்களில் வைக்கவேண்டும். உக்கும் கழிவுகளைக்கொண்டு மாநகர சேதனப் பசளைத் திட்டத்தின் மூலம் பசளையாக்கும் செயற்பாட்டுக்குப் பயன்படுத்த முடியும். மாநகராட்சி மன்றத்தின் சேத னைப் பசளைத் திட்டம் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது.
இந்த நடைமுறையை மக்கள் சரியாகப் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் கழிவகற்றும் பிரிவினர் கேட் டுள்ளனர். (த-17)


### மணிவிழா வாழ்த்துக்கள்



அதிபர் பணியில் அரும்பணியாற்றி
அகவை அறுபதில் ஓய்வுபெறும்
ஆருயிர் நண்பன் Best wishes
சேதுவுக்கு - எனது
Congratulations அகம் மகிழ்ந்த வாழ்த்துக்கள்.
(C/17564)(12.3.6)
நட்புடன்: சு.தர்மலிங்கம்,
ஓய்வுநிலை அதிபர் - மந்துவில்.

### கிறிஸ்துமஸ்க்கான விசேட கழிவுகள் ஆரம்பம்

டோகா 25% off
மதுரை 12% off
விசேட தொடர்புகளுக்கு 0773083820
அனைத்து பயண ஒழுங்கமைப்புகளுக்கும், வீட்டிலிருந்தவாறே உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய இடம்
(C/17295)(6.3)

NATION POPULAR TRAVELS & TOURS

Colombo 0114378117 Jaffna 0214920920 Vavuniya 0244930830

### யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களில் வெற்றிபெற்ற இலக்கங்கள்

முதலாம் பரிசு - 20702 2ஆம் பரிசு - 9219 3ஆம் பரிசு - 4441
4ஆம் பரிசு (10 ஆறுதல் பரிசுகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 188 | 02) 13356 | 03) 2761 | 04) 21611 | 05) 4323 |
| 06) 12355 | 07) 4756 | 08) 2149 | 09) 10602 | 10) 1378 |

5ஆம் பரிசு (20 ஆறுதல் பரிசுகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 19594 | 02) 24533 | 03) 12756 | 04) 260 | 05) 14157 |
| 06) 6553 | 07) 8319 | 08) 23279 | 09) 12142 | 10) 28717 |
| 11) 29073 | 12) 18013 | 13) 11620 | 14) 14158 | 15) 2904 |
| 16) 25173 | 17) 10909 | 18) 25190 | 19) 20761 | 20) 1662 |

குறிப்பு : பரிசுப் பொருள்களை பாடசாலையில் பி.ப. 2 மணிக்கு பின் ஒரு மாத கால இடைவெளிக்குள் பெற்றுக்கொள்ளவும்.
அதிபர். (C/17293)(7.6.3)

### மதுரா அழகுகலை பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

ஏயார் பிரஷனர் மேக்கப், கிறியேற்றிவ் மேக்கப், ஸ்ரிக் & கேக், டே, ஒயிலி, ஈவினிங், ஸ்பிறே ஆகிய மேக்கப் பிரைடல் டிரெஸ்ஸிங், 4 முறை பார்ட்லி மேக்கப், கென்வக்கேஷன் மேக்கப்,பேசியல் 20 வகை ஸ்கின்அனலைஸ் (மெசினறிட்றீட்மென்ட் 5 முறை) ஐ ட்றீட்மென்ட், றீபொண்டிங், அயனிங், பேளிங் டே, பேமனற், பேமிங் 10 முறை, பேமிங் டே, ஹெயர் கட்டிங் 5 பின்றப், ஸ்பாட் றீட்மென்ட், நெயில் ஆர்ட், பேமனற் டே, ஹெயார் செற்றிங் பெடிகியூர், மெனிகியூர், நச்சுரல் மேக்கப், ஸ்கிரபிங், கிளினப், சாறி டிரெஸ்ஸிங் 30 முறை, ஹெயார் ஸ்ரைல், ஹெயார் கலரிங், மசாஜ் வகை (4), வக்சிங், திரெட்டிங், ஹொட் ஒயில் மசாஜ்-டான்ஸ் மேக்கப்.
புரொபஷனல் கோர்ஸ் 20,000/= டிப்ளோமா கோர்ஸ் 8,000/= (பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்)
கென்வக்கேஷன் மேக்கப் 1500/=, பயிற்சி பற்றிய விவரம் நேரில்.
மகளிர் மட்டும்
பயிற்சியில் இணைய விரும்புவோர் பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.
சாரி வேர்க், தையல், ஹான்ட் வேர்க், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகளும் நடைபெறுகின்றன. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
077 9362642 (53827)(10.6.3) பழைய வீதி, கோப்பாய்.

### சேவை
புதிதாக அமைக்கவிருக்கும் அல்லது ஏற்கனவே அமைந்துள்ள கட்டடங்கள்/வீடுகளுக்குரிய வரைபடங்கள் மற்றும் அவைகளுக்குரிய மொத்த செலவீனம் (Estimate) போன்றவை எங்களினால் செய்து கொடுக்கப்படும். (53884)(6.3)
தொடர்பிலக்கம்: 0778610223

### இடமாற்றம்
டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்
(C/17542)(7.6.3)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

### கார் விற்பனைக்குண்டு
வவுனியாவில் Suzuki wagon R கார், 2008 Model, KG- - -, 1061CC, 51000km, Doctor இன் தனிப்பாவனை, Silver Colour விற்பனைக்குண்டு.
விலை : 15/75
(பேசித் தீர்மானிக்கலாம்)
தொடர்பு : 077 904 8123 (53807)(7.3)

### CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
அர்ஜுனின் ஜெய்ஹிந்த் 2
Platinum 10.30am, 2.30pm, 6.30pm
ஒரு ஊர்ல ரெண்டு ராஜா
Silver 10.15am, 2.15pm, 6.15pm
Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☏ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## மலையகத்தில் பாதிப்பட்டோருக்கு கூட்டுறவுத் துறையினரும் உதவி

யாழ்ப்பாணம், நவ 7

மலையகத்தில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடாநாட்டில் உள்ள கூட்டுறவுத் துறையினரும் உதவுவதற்கு முன்வரவேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில சங்கங்கள் மட்டும் உதவிப் பொருள்களைச் சேகரித்து ஒப்படைத்தன. இந்தப் பொருள்கள் யாவும் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும் பொருட்டு அங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 40 ஆயிரம் பெறுமதி வாய்ந்த பிஸ்கட்டுக்களை தந்து உதவியுள்ளது. அதனை விட மற்றும் சில சங்கங்களும் தம்மாலான உதவிகளை வழங்கியுள்ளன. இயற்கை இடரினால் இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்குச் சங்கங்கள் முன்வர வேண்டும். சகல கூட்டுறவுத் துறையினருக்கும் உதவிப் பொருள்களை வழங்குமாறு அறிவித்தும் அவர்கள் இதற்கு முழுமையான ஒததுழைப்பு வழங்காதமை வேதனையளிக்கிறது-என்றார். (த-17)

# இன்சுலின் ஏற்றுவோருக்கு தனியான சிகிச்சைப் பிரிவு

### சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, நவ.7

சாவகச்சேரி மருத்துவமனை நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோரில் நோயின் தாக்கத்துக்கு இறுதியாகப் பயன்படுத்தும் இன்சுலின்'ஊசி மருந்து ஏற்றுவோருக்கென தனியான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

நோயின் இறுதிக் கட்டடத்தில் உள்ள நோயாளர்களுக்கே இன்சுலின் மருந்து ஏற்றப்படுவதாகவும், இன்சுலின் மருந்து ஏற்றுபவர்களுக்குச் சிறுநீரகம், கண், இதயம் ஆகியவை விரைவில் பழுதடையும் அபாயம் உள்ளதாலும் இவர்களுக்கு அவயங்கள் வெட்டியெடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

அண்மைக் காலமாகச் சிறு வயதினருக்கும் இன்சுலின் மருந்து ஏற்றும் நிலை காணப்படுவதால் இவர்களை மருத்துவர்கள் நேரடிக் கண்காணிப்பில் பரிசோதிப்பதற்காகத் தனியான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.


ஏனைய நீரிழிவு நோயாளர்களுடன் இன்சுலின் மருந்து பாவிப்போருக்குச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிப்பதால் போதிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதையடுத்து மருத்துவமனை நிர்வாகம் இன்சுலின் மருந்து பாவிப்பவர்களுக்கென தனியான சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் உள்ள நீரிழிவுச் சிகிச்சை நிலையம் மாதாந்தம் கிராமங்கள் தோறும் நடத்தி வரும் நீரிழிவு மருத்துவப் பரிசோதனை முகாம்களில் புதிதாக இனங் காண்போருக்கும் மருத்துவமனை நீரழிவுச் சிகிச்சை முகாமில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைப் புள்ளி விவரங்களின் பிரகாரம் கடந்த வருடம் இன்சுலின் பாவித்த நோயாளர்களில் 8 பேர் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாகவும், இந்த வருடம் மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர்களின் தொடர் கண்காணிப்பினால் இதுவரை மரணம் இடம்பெறவில்லையெனவும் அறியமுடிகிறது.

இன்சுலின் பயன்படுத்தும் நோயாளர்களைத் தொடர்ச்சியான கண்காணிப்பில் வைத்திருந்தால் இவ்வாறான அசம்பாவிதம் ஏற்பட வாய்ப்பில்லையென்பதால் புதிய சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த முட்டு நோயாளர்களுக்கென தனியான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெருமளவு நோயாளர்கள் முட்டு ஏற்படும்போது ஆவி' பிடிப்பது 70 வீதம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று இன்சுலின் மருந்து பாவிப்போருக்கெனத் தனியான சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் இந்நோயின் தாக்கத்திலிருந்து பலநோயாளர்களை விடுவிக்க முடியுமென நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (த-9)



யாழ்ப்பாணம் நாக விகாரையில் நேற்று முன் தினம் கட்டிய புண்ணிய உற்சவம் இடம்பெற்றது. இவ் உற்சவம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி பல்வேறு ஆடல் கலைகளுடன் யாழ்ப்பாணம் நாக விகாரையை வந்தடைந்தது. இவ்விழாவுக்கு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா மற்றும் மத குருமார்கள் கலந்துகொண்டனர். (த-21)

# நல்லூர் மந்திரிமனைக்குச் சவால்

### 2 பேர் உரிமை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்ப்பாண பாரம்பரியமான மந்திரிமனை இன்று சவாலை எதிர்கொண்டுள்ளது. அது தொடர்பான பல தகவல்கள் நீதிமன்றம் மூலமாக மக்களுக்குச் சென்றடையும் என்று எதிர்பார்க்கலாம் என்று யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எஸ். கிருஸ்ணராஜா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக வர லாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்எழுதியவட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும் என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்.பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. அதில் தலைமை தாங்கி உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதனை தென்பகுதியில் உள்ள ஒருவர் தன்னுடையது என்று கூறி வழக்குத் தாக் கல் செய்துள்ளார். லண்டனில் உள்ள மற்றொருவர் மந்திரிமனை தனது பூர்வீகச் சொத்து என்றும் அதனைத் தனக்கு தரும் படியும் யாழ்ப்பாண புத்திஜீவிகளிடம் கேட்டுள்ளார். அதற்குஉங்கள்பதில்என்னஎன்றும் கேட்டுள்ளார். அது தொடர்பில் ஆராயவேண்டியுள்ளது. தற்போது மந்திரி மனை தொடர்பான பல தகவல்களுடன் வெளி யிடப்படும் நூல் எமது பாரம்பரியத்துக்கு எதனைச் செய்யவேண்டுமோ அதனைச் செய்ய வேண்டும்- என்றார்.



யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் எழுதிய வட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும் என்னும் நூலை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வெளியிட்டு வைக்க பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கே.அருள்வேல் பெற்றுக் கொள்கிறார். அருகில் நூலாசிரியர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் உள்ளார். (த-4)

அங்கு உரையாற்றிய கலைப்பீடாதி பேரா சிரியர் வி.பி.சிவநாதன் தெரிவிக்கையில், இந்தப் புத்தகம் வரலாற்று ஆய்வுக்காக மட்டுமன்றி இலங்கைக்கு வருவாயைப் பெற்றுத்தரக் கூடியதாகவும் உள்ளது. அதாவது முதல் இல்லாத வருவாய்க்கு இது உதவுகிறது. பௌதீக வரலாறுகளை அழிய விடாது பாதுகாக்கும் நூலாகவும் உள் ளது-என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உரையாற்றுகையில், யாழ்ப்பாண வாழ்வியல் சார்ந்த அனைவரும்சமுதாயத்துக்குத் தேவையான புத்தகங்களை உருவாக்கிச் சமுதாயத்துக் குப் பெருமை சேர்க்கவேண்டும். எமது மாணவர்கள் பழையனவற்றை மறக்காது இருக்க ஆவனசெய்ய வேண்டும்.

பேராசிரியர் புஸ்பரட்ணம் நிர்வாகத்துக்கு உதவுவதோடு தனது ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறார். அவரது நூல் ஒரு பொக் கிசம். 2002 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட கால வாழ்க்கையைக் காணமுடிகிறது. நல்லநூல்களை வெளியிடவேண்டும். பெயருக் காகப் பட்டங்களை எடுக்காது நல்ல விடயங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்-என்றார். (த-4)

## புதிய வற்றாளை இனம் இன்று திருநெல்வேலியில் அறிமுகம்



யாழ்ப்பாணம், நவ.7

யாழ். குடாநாட்டின் உவர் நிலப் பிரதேசங்களில் வளரக் கூடிய புதியவற்றாளை இனத்தை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் இன்று வெள் ளிக்கிழமை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கவுள் ளது.

பேராதனை ஆராய்ச்சி நிலை யத்தில் ஆராய்ச்சிக்கு உட்படுத் தப்பட்ட பின்னர் இந்தப் புதிய இன வற்றாளை திருநெல் வேலி நிலையத்தில் பரீட்சார்த் தமாகச் செய்கைக்கு உட்படுத் தப்பட்டது.

இந்தப் பரீட்சார்த்த செய்கை பெரிதும் வெற்றியளித்திருப்பதாகவும், இந்த புதிய இன வற் றாளை இன்று அறுவடை செய்யப்படும் என்றும் நிலையத் தின் பொறுப்பதிகாரி ரி.கருணைநாதன் தெரிவித்தார்.

அறுவடை செய்யப்படும் இந்த வற்றாளைத் துண்டங்கள் விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்கப்படும். உவர் நிலப் பிரதேசத்திலும் வளரக் கூடிய இந்தப் புதிய வற்றாளை இனத்தை விவசாயிகள் பயி ரிட்டு அதிக விளைச்சலை பெற முடியும். இது மூன்று மாதங் களைக் கொண்டது -என்றார் கருணாகரன்.

(த-17)

# கழிவகற்றும் வாகனங்கள் காக்கைதீவில் புதைந்தன

### தற்காலிகப் பாதை அமைத்து கழிவகற்றும் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ.7

கழிவுப்பொருள்களுடன் சென்ற கனரக வாகனங்கள் காக்கைதீவில் புதையுண்டதால் மாநகரப் பகுதியின் கழிவகற்றும் பணிகள் தாமதமடைந்தன.

தற்போது கழிவுப்பொருள் கொட்டும் பகுதிக்குத் தற்காலிக பாதை அமைக்கப்பட்டதை அடுத்து கனரக வாகனங்களைத் தவிர்த்து உழவு இயந்திரங்களின் மூலம் கழிவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாநகரக் கழிவகற்றும் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மழை காலம் ஆகையால் மாநகரப் பகுதியில் கழிவுப் பொருள்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தக் கழிவுகளை அகற்றும் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் விரிவுபடுத்தப்படும். இதற்காக மாநகர கழிவ கற்றும் வாகனங்களுடன் தனியாரிடம் இருந்தும் ஏழு உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தி கழிவுகளை விரைவாக அகற்றவும் நடவடிக்கை மேற்கொள் ளப்ப டவுள்ளது.

மாநகரப் பகுதியில் கழிவுப் பொருள்கள் அகற்றுவதில் ஏற்பட்ட தாமத்தால் அவை வீதிக்கு வீதிக் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு காணப்படுகின்றது. அநேகமாக இடங்களில் கொட்டப்பட்ட கழிவுப் பொருள்களை விலங்குகள், பறவைகள் எடுத்துச் செல்வதால் துர்நாற்றமும் வீசுகின்றன. தற்பொழுது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இப்படிப்பட்ட கழிவுகள் தேங்குவதால் தொற்றுநோய்கள் ஏற்படலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. அதனைவிட காக்கைதீவிலும் கழிவுகள் கொட்டப்பட்டுத் தேங்கிக் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே மாநகராட்சி மன்றப் பகுதியில் அகற்றப்படும் இந்தக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனைவிட வேறு சிலர் வாகனங்களில் கொண்டுவரும் கழிவுகளை வீதியோரம் கொட்டி விட்டுச் செல்கின்றனர். இந்த நிலையில் காக்கைதீவுப் பிரதேசத்தில் கண்ட கண்ட இடத்தில் கொட்டப்படும் கழிவுகளினால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படலாம் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (த-17)

# பின் தங்கிய பிரதேசங்களில் விசேட மருத்துவ முகாம்கள்

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், நவ. 7

வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத தூர இடங்களில், பின்தங்கிய பிதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மேலதிக மருத்துவ சேவைகள் வழங்கும் நோக்குடன் விசேட மருத்தவ முகாம்களை நடத்த தீர்மானித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் விசேட நடமாடும் மருத்துவ முகாம் நேற்று மன்னார் இரணை இலுப்பைக்குளத்தில் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வட மாகாண முதலமைச்சரின் சிந்தனைக்கிணங்க மக்களை நோக்கிய சேவை என்பதன் அடிப்படையில் சேவைகளை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த மாதம் வவுனியா புளியங்குளத்தில் மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவையொன்றை நடத்தியிருந்தோம். விசேட வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்ளமுடியாத தூர இடங்களில் வாழுகின்ற மக்களுக்கு மேலதிக மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்குடன் பின் தங்கிய பிதேசங்களில் இவ்வாறு மருத்தவ முகாம்களை நடத்த தீர்மானித்துள்ளோம்.



இவ்வாறான விசேட மருத்துவ முகாம்களில் பல்துறை சார் வைத்திய நிபுணர்களின் சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக மகப்பேறு, சத்திரசிகிச்சை, என்புமுறிவு, கண் சிகிச்சை, பல்மருத்தவம், காது, மூக்கு, தொண்டை, பொது மருத்துவம், குழந்தை நல மருத்துவம், செயற்கை அவயவம் பொருத்துதல் மற்றும் மருத்துவ ஆய்வுகூடச் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறான மருத்துவ முகாமொன்றை இம்மாத இறுதியில் முல்லைத்தீவு மல்லாவி, துணுக்காய் பிரதேசத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.

அண்மையில் இரணையிலுப்பைக்குளத்துக்கு பயணம் செய்த வடமாகாண சுகாதார அமைச்சரிடம் மக்கள் முறையிட்டதற்கிணங்க இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. பல்துறைசார் வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்ட இந்த மருத்துவ முகாமில் ஏராளமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

(த-402)

## சிதைவுற்ற நீர்த் தாங்கியை அகற்றுவதற்கு நடவடிக்கை



மன்னார், நவ.7

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள சுமார் 60 வருடங்கள் பழைமை வாய்ந்த சிதைவடைந்த நிலையில் காணப்படும் நீர்த்தாங்கியை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மன்னார் நகரசபை முன்னெடுத்துள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

குறித்த நீர்த்தாங்கியை அகற்றுவது தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்;

மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த - மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் சிதைவடைந்து காணப்படும் நீர்த்தாங்கியை மக்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகளைத் தொடர்ந்து உடனடியாக அந்த இடத்திலிருந்து அகற்றுவது குறித்து மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றது.

நீர்த்தாங்கியை அகற்றும் பணிக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மன்னார் நகர சபையுடன் இணைந்து ஒப்பந்தகாரர்களை நியமித்து நடவடிக்கைகளை மேற்கொள் வது என முடிவாகியது.

எதிர்வரும் 11 ஆம் திகதி குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலத்தினுள் முடிவடையவுள்ளன - என்றார்.

(த-56)

## முட்கொம்பன் கிராமத்துக்கு மின் விநியோகம் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.7

கிளிநொச்சி, பூநகரி முட்கொம்பன் கிராமத்துக்கான மின்சார விநியோகம் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பூநகரிப் பிரதேச சபையின் உறுப்பினர் குகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், முட்கொம்பன் பாடசாலை அதிபர் எஸ் திலீபன், பூநகரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணசேகர, கிராம சேவையாளர் மோகனதாஸ், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் தேவாஜினி, கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சிறிதரன், மற்றும் சின்னபல்லவராயன் கட்டு, நேரடம்பன் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(த-18)

## வவுனியாவில் திருட்டுக் குற்றச்சாட்டில் சிறுவர்கள் கைது

வவுனியாவில் உள்ள இலத்திரனியல் கடையொன்றில் திருடியதாகத் தெரிவித்து இரண்டு சிறுவர்களை தாம் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவர்களிடமிருந்து இலத்திரனியல் பொருள்கள், கையடக்க தொலைபேசிகள், கையடக்க தொலைபேசி உபகரணங்கள், கணினி உதிரிப் பாகங்கள் உட்பட 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அவர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (த-402)

## வவுனியாவில் 22.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி

வவுனியா, நவ.7

வவுனியாவில் கடந்த 4ஆம் திகதி 22.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியாயில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன் மீள்குடியேறிய மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் முடிவடைந்த 24 மணித்தியாலயங்களில் வவுனியாவில் 22.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதேவேளை கடந்த முதலாம் திகதி 20.7 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(த-421)



திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயச்சூழலில் மழை வெள்ளம் தேங்கிநிற்பதன் காரணமாக தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. நாள்தோறும் பெருமளவு மக்கள் கூடிக் கலையும் இடத்தில் உணவகங்கள், பழ விற்பனை நிலையங்கள் என்பவற்றுக்கருகில் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. சிறந்த வடிகால் வசதிகளை உருவாக்கி ஆலயச் சூழலில் இருந்து மழை வெள்ளம் வழிந்தோடப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்களும் மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

## வினாசியோடைக்குச் செல்லும் வீதி சீர் கெட்ட நிலையில்



கிளிநொச்சி, நவ.7

வினாசியோடைக்குச் செல்லும் பாதை சீர்கெட்ட நிலையிலேயே உள்ளது. இந்தப் பாதையில் பயணம் செய்யும் ஆசிரியர்கள் சொல்லொணா துன்பங்களுக்கு மத்தியில் பயணம் செய்து கல்வி கற்பித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அது மட்டுமல்லாது மன்னார் வீதி யிலிருந்து 13 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமங்களான மண்ணித்தலை, வினாசி யோடை, கல்முனை கௌதாரி முனை போன்ற கிராமங்களிலிருந்து மாணவர்கள் செல்வதற்கு ஒரு பஸ் சேவை மட்டுமேயுள்ளது. இதை விட்டால் பிள்ளைகள் பாடசாலை செல்ல முடியாதுள்ளது. பாதை சீரின்மையால் பஸ் சேவையும் மழை காலங்களில் தடைப்படுகின்றது.

இப்பாதை குறித்து பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றுக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என அங்கு சென்றுவரும் ஆசிரியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனை விரைவில் புனரமைத்து சீரான போக்குவரத்துக்கு உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த)

## தெலுங்கு கற்பதற்கு உதவுங்கள்

வவுனியா, நவ. 7

தமது தாய்மொழியான தெலுங்கைக் கற்க உதவும்படி வவுனியா நொச்சிக்குளம் பகுதியில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கு சென்ற இந்தியப் பிரதித் துணைத் தூதர் எஸ்.மூர்த்தியிடமே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதித்துணைத் தூதர் கடந்த வியாழக்கிழமை வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நொச்சிக்குளம் கிராமத்துக்குச் சென்று அங்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் 43 வீடுகளைப் பார்வையிட்டார்.

மிகவும் பின்தங்கிய நிலையில் அந்தக் கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினார். இங்குள்ள மக்கள் தெலுங்கு மொழி பேசுபவர்கள். சிங்களத்தையும் அறிந்துள்ளனர். தமது தாய்மொழியான தெலுங்கை கற்க உதவும்படி அந்த மக்கள் கோரிக்கைவிடுத்தனர். (த-421)

## மோசமான நிலையில் வீதி



துணுக்காய், நவ. 7

முல்லைத்தீவு - துணுக்காயிலிருந்து அக்கராயன் செல்லும் வீதி புனரமைக்கப் படாததன் காரணமாக குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மீள் குடியேற்றம் நடைபெற்று 5 ஆண்டுகள் ஆகியும் 22 கிலோமீற்றர் தூரமுள்ள அந்த வீதியில் இதுவரை முழுமையான புனரமைப்பு இடம்பெறவில்லை. தொடங்கப்பட்ட வீதிப் புனரமைப்பு பணிகளும் அரை குறையில் காணப்படுகின்றன. துணுக்காயில் தொடங்கும் வீதி அக்கராயன் வரை செல்லுகின்றது. அந்த வீதியால் ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய பகுதி மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். மல்லாவி ஆதார மருத்துவமனை, துணுக்காய் பிரதேச செயலகம் என்பவற்றுக்குச் சென்றுவரும் இந்தப் பாதை புனரமைக்கப்படாததால் மக்கள் நாள் தோறும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

(த-18)

# மூழ்கும் கப்பலுக்குள் பாயத் தயாரில்லை

### லக்ஷ்மன் கிரியல்ல கூறுகின்றார்



கொழும்பு, நவ.7

மூழ்கும் கப்பலுக்கு பாய மாட்டேன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கட்சி தாவுதல் தொடர்பில் வெளியான செய்திகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் நோக்கில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"அரசுடன் இணைந்து கொள்ளப் போவதாக வெளியான செய்திகளில் உண்மை கிடையாது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் இணைந்து கொள்ளும் எந்த வித உத்தேசமும் எனக்கு கிடையாது. மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலுக்குள் எவரும் பாய மாட்டார்கள்.

ஆளும் கட்சிக்குள் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ளன. பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள ஆயத்தமாகி வருகின்றனர்"- என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ற)

# வழக்கு அச்சம் காரணமாகவே விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி

### முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, நவ.7

வழக்குத் தொடரப்படும் என்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றில் சட்ட விளக்கம் கோரியுள்ளார் என்று தெரிவித்துள்ளார் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவதைத் தடுக்கும் நோக்கில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே - இவ்வாறு ஜனாதிபதி சட்ட விளக்கம் கோரியுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றில் விளக்கம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு அறிவிப்பு விடுக்க முடியுமா? மற்றும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா? என்ற கேள்விகளையே அவர் எழுப்பியுள்ளார். சட்ட விளக்கம் கோரப்பட்ட இரண்டு கேள்விகளும் தனிப்பட்ட ரீதியானதே தவிர, நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் கேட்கப்படவில்லை. சட்ட விளக்கம் கோரியதன் மூலம் ஜனாதிபதி அரசியல் சாசன மீறலில் ஈடுபட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியமா என ஜனாதிபதி உச்ச நீதிமன்றில் விளக்கம் கோருவதன் மூலம், அவர் போட்டியிடத் தகுதியற்றவர் என்பது நிரூபணமாகியுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதிக்கு எதிராக ஜே.வி.பி. மனு தாக்கல்

### உயர் நீதிமன்றில் இன்று

கொழும்பு, நவ.7

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தன்னால் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியுமா என்பது தொடர்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணி இன்று வெள்ளிக்கிழமை மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவதை தனது கட்சி எதிர்ப்பதாகவும் ம.வி.முயின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இதன்படி எமது கட்சியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நீதிமன்றத்துக்கு வழங்குவதற்கான மனுவை தயார் செய்வார் என்றும் தெரிவித்தார். (ற)



ஜனாதிபதி சட்டத்தரணியும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷவால் எழுதப்பட்ட ஏழு புத்தகங்களின் வெளியீட்டு வைபவம், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த புத்தக வெளியீட்டு வைபவத்தில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (ற)

# மீனவரிடையே மோதல் நீர்கொழும்பில் பதற்றம்

கொழும்பு, நவ.7

நீர்கொழும்பில் இரு மீனவக் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் மீனவர்கள் இருவர் காயமடைந்தமையடுத்து அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனையடுத்து மேலதிக பாதுகாப்புக்காக விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரு குழுக்களுக்கும் இடையிலான மோதலில் முச்சக்கர வண்டிகள் மூன்று, இன்னும் சில வாகனங்களுக்கும் மீன்பிடி படகொன்றுக்கு தீ மூடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் காயமடைந்த மீனவர்கள் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்படும் மீன்கள் நீர்கெரழும்பு கொட்டுவை மைதானம் அருகில் உள்ள மீன் விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதற்கும், அங்குள்ள கடற்கரையோரத்தில் கருவாட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளோருக்கும், அவற்றை விற்பனை செய்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பு கடற்கரைத் தெரு - குடாப்பாடு சிறு மீன்பிடித்துறையினர் நேற்று முன்தினம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். (ற)

# ஆத்ம கௌரவம் உள்ளதால் அரசுடன் இருக்க முடியாது

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள திருத்தங்கள் செயற்படுத்தப்படும் நிலைக்கு வரவில்லை என்றால், தொடர்ந்தும் அரசில் இருக்க போவதில்லை என அந்தக் கட்சியின் செயலாளரான மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"மன்னனின் வாளால் வெட்டுப்படுவோம் என்ற பயம் இருந்தாலும், அரசியல் ரீதியான ஆபத்தை கவனத்தில் கொள்ளாது நாங்கள் எமது யோசனைகளை மக்கள் மத்திக்கு கொண்டு சென்றுள்ளோம்.

ஆத்ம கௌரவம் இருக்கும் அரசியல் அமைப்பு என்ற வகையில், எமது யோசனைகள் செயற்படுத்தப்படவில்லை என்றால், நாங்கள் அரசில் இருக்க போவதில்லை என்று ஏற்கனவே தெரிவித்து விட்டோம்.

சுமார் 5 வருடங்களாக மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கும் நிலையில், ஜனாதிபதியின் தேவைகளை நிறைவேற்ற இந்தப் பலம் பயன்படுத்தப்பட்டதே அன்றி நாட்டின் தேவைக்காக பயன்படுத்தப்படவில்லை"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பஸில் ராஜபக்ஷ திறமையானவர்

### புகழாரம் சூட்டுகிறார் ரவி கருணாநாயக்க



கொழும்பு, நச.7

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு இயந்திரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலேயே உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். "அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மிகவும் திறமையான ஒரு அமைச்சர். அவரது அமைச்சும் திறமையான பணிகளை செய்யும் அமைச்சாக உள்ளது.

பஸில் ராஜபக்ஷ திறமையான, அமைச்சராக இருந்தாலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு நான்கு பிரதியமைச்சர்கள் இருக்கின்றனர்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஆட்சியை மாற்றும் தலைவர் ரணிலே

### இப்படிக் கூறுகிறார் விக்ரமபாகு கருணாரத்ன



கொழும்பு, நவ.7

நிலவும் ஆட்சியை மாற்றும் தலைவர் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்தப் போராட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியது. எனக்கு ரணில் விக்கிரமசிங்க அவசியமில்லை. எனக்கு அவர் ஜனாதிபதியாக வந்தாலும் கூட, அவர் குறிப்பிடதக்க சேவையை தொழிலாளர்களுக்கு வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது.

**எனக்கு ரணில் விக்கிரமசிங்க அவசியமில்லை. எனக்கு அவர் ஜனாதிபதியாக வந்தாலும் கூட அவர் குறிப்பிடத்தக்க சேவையை தொழிலாளர்களுக்கு வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது.**

எப்படியிருப்பினும், இந்தத் தருணத்தில் சர்வாதிகார, சமய கடும்போக்கு, ஆட்சியை கட்டுபடுத்தக் கூடிய ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே'- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தோல்வி பயத்தில் ராஜபக்ஷவினர்

### அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

தேர்தலில் தோற்று விடுவோம் என்ற கடும் அச்சத்தில் ராஜபக்ஷவினர் இருக்கின்றனர் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"தேர்தலில் தோல்வியடைந்து விடுவோம் என்ற அச்சத்தில் இருக்கும் அரசு புலம்பெயர் தமிழருடன் ஒரு இணக்கத்துக்கு வரும் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. புலம்பெயர் தமிழர்களின் ஆதரவை பெற அரசு பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் ஒருவர் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களுக்கு பணத்தை கொடுத்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் வாக்களிப்பதை தடுப்பதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பிடிக்கவில்லையா? பார்க்க வேண்டாம்



அண்மையில் ரேஸ் குர்ரம் படத்தில் ஆபாசமாக நடித்ததாக அதிக அளவு விமர்சிக்கப்பட்டார். இது குறித்து அவர் கூறுகையில்; என்னைப் பொறுத்தவரை அந்தப் படத்தின் பாத்திரம் அப்படி. அதற்கேற்ப நடித்தேன். அது பிடிக்காவிட்டால் பார்க்காமல் போங்கள். யார் வேண்டாம் என்றது. எனக்கு என் உடல் ஒரு கோயில் மாதிரி. என்னை ஆபாசமாகப் பார்ப்பது அவர்களது கண்ணோட்டம். அவர்களுக்காக என்னை மாற்றிக் கொள்ள மாட்டேன்- என்றார்.

கதைக்கு என்ன தேவையோ அப்படித்தான் நான் நடிப்பேன். மற்றவர்களுக்காக என்னை மாற்றிக்கொள்ள முடியாது. என்று ஸ்ருதி ஹாஸன் கூறியுள்ளார்.
ஸ்ருதிஹாஸன் இன்றைக்கு இந்தியாவின் முன்னணி நடிகைகளுள் ஒருவராகிவிட்டார்.
மேலும் அவர் நிறைய சர்ச்சைகளிலும் சிக்குகின்றார். ஆனால் வெளியில் அதுபற்றி அவர் அலட்டிக் கொள்வதில்லை.
அனைத்து மொழி சினிமாவிலும் அதிகம் விரும்பப்படும் கதாநாயகியாகி விட்டார்.

## சுழற்சிப் பணியாளர்களே கவனம்



பிரான்ஸில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் சுழற்சி முறையில் பணிபுரியும் நபர்களின் ஞாபக சக்தி மற்றும் மூளை திறன் மங்குவதாக தெரியவந்துள்ளது.
பிரான்ஸில் 3 ஆயிரம் பேர் பங்கேற்ற இந்த ஆய்வின் முடிவில், சுழற்சி முறையில் பணிபுரிபவர்களின் மூளை திறனை விட தினமும் ஒரே முறையான நேரத்தில் பணிபுரியும் நபர்களின் ஞாபக சக்தி மற்றும் மூளை செயற்றிறன் அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுழற்சி முறையில் பணிபுரிபவர்களின் உடல் நிலையில் உண்ணும், உறங்கும் நேரங்கள் மாற்றமடைவதால் அவர்களுக்கு இதயம், மூளை சார்ந்த பாதிப்புகள் ஏற்படும் எனவும், சில சமயங்களில் புற்றுநோய் பாதிப்புக் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
ஆய்வின் ஒரு பகுதியாக, சுழற்சி முறையில் பணிபுரிபவர்களுக்கு நடத்தப்பட்ட அறிவாற்றல் வேகம் சார்ந்த சோதனையில் பலர் தேர்ச்சி அடையவில்லை.
இது குறித்து ஆய்வை மேற்கொண்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள் தெரிவிக்கையில்; முறையற்ற வேகங்களில் 10 ஆண்டு காலமாகப் பணிபுரிபவர்களின் அறிவாற்றல் திறன் ஆறரை ஆண்டுகள் பின்தங்கியதாக உள்ளது. காலை, நண்பகல், இரவு நேர சுழற்சி முறை வேகங்களில் பணிபுரியும் நபர்களுக்கு எவ்வாறு அறிவாற்றல் திறன் குறைகிறது என்பது குறித்த முழுமையான புரிதல் இல்லாத நிலையில், அவர்களின் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் இதற்கு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## சிங்கத்துக்கே மசாஜ்



சிங்கத்தின் பெயரைக் கேட்டால் கால் நடுங்கு பவர்களையே நாம் அதிகம் கண்டதுண்டு. ஆனால், சிங்கத்தின் பாதங்களுக்கு மசாஜ் செய்யும் நபரை நீங்கள் பார்த்ததுண்டா?
தென்னாபிரிக்க, பிரிட்டோரியாவிலுள்ள பூங்காவில் மிருகங்களை பயிற்றுவிக்கும் நபரொருவர் சிங்கத்திடம் மிக நெருங்கி பழகும் காட்சிகளடங்கிய வீடியோவொன்று இணையத்தளங்களில் வெளியாகி பலரை வியப்படைய வைத்துள்ளது.
கையில்லாத மேல் சட்டை மற்றும் அரைக் காற்சட்டை மட்டுமே அணிந்திருந்த மேற்படி நபர் சிங்கத்தின் அருகில் சென்று அதனது கால் பாதங்களை பிடித்துவிடுகிறார். சிங்கம் தரையில் புரண்டவாறும் உறுமியவாறும் காணப்படுகின்றது.
இந்த மிருககாட்சிசாலையில் இவ்வாறான 4 சிங்கங்கள் காணப்படுகின்றன. இதேவேளை, புலிகள், நரிகள் மற்றும் காட்டுப் பன்றி என்பவையும் காணப்படுகின்றன. சிங்கத்துக்கு மசாஜ் செய்யும் வீடியோவை இலட்சக்காணக்கானோர் பார்வையிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## இதையும் கொஞ்சம் படியுங்கள்

எல்லோரும் சிறிய வயதில் கிரிக்கெட் விளையாடியிருப்பார்கள். தென்னை மட்டையில் பட் செய்தும், சிலர் பணத்து பட் வாங்கியும் விளையாடியிருப்பார்கள். அப்போது ஐ.சி.சியின் கிரிக்கெட் விதிகளை மிஞ்சும் அளவுக்கு விதிகள் இருந்திருக்கும். இதில் எத்தலை விதிகள் நீங்கள் விளையாடிய கிரிக்கெட்டில் இருந்தது என்பதைப் பாருங்கள்.

1. நாணயசுழற்சியில் வெற்றி பெறுவது முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கே. அவ்வாறு நாணயச் சுழற்சியில் துடுப்பாட்டம் கிடைக்காத அணி, நாணயம் ஒழுங்காக சுழற்றப்படவில்லை என்று ஏதாவது ஒரு நொட்டைச் சாட்டைச் சொல்லும்.

2. மரத்தில் பட்டு பந்து பிடித்தாலும் அவுட்.

3. வெற்றி பெறும் அணி அடுத்த ஆட்டத்தில் முதலாவதாக துடுப்பெடுத்தாடும்.



4. பந்தை அடுத்த வளவுக்குள் அடித்தால் அவுட் என்பதோடு அடித்தவரே எடுத்துவர வேண்டும்.

5. பந்து வீச்சாளரின் உடல் பலத்தை பொறுத்தே எல்.பி.டபிள்யூ தீர்மானிக்கப்படும்.

6. துடுப்பெடுத்தாடும் போது ஆரம்பத்தில் இறங்கி துடுப்பெடுத்தாடியவர் முதலில் பந்து போட முடியாது.

7. இருட்டியதும் வேகமாக பந்து போட முடியாது.

8. முதல் பந்தில் அவுட் ஆனால் அது ரயல் போல். (நடுவுல கொஞ்சம் பக்கத்தை காணோம் படத்தின் ஆரம்ப சீனை நினைத்துப் பாருங்கள்)

9. துடுப்பெடுத்தாடும் அணியில் இருந்தே ஒரு அப்பாவி நடுவராக அனுப்பப்படுவார்.

## சொல்வதெல்லாம் பொய், மேல வைக்காத கை!

சினிமாவில் பல படங்களில் வெவ்வேறு கதாபாத்திரங்களில் நடித்தவர் லட்சுமிராமகிருஷ்ணன். ஆரோகணம், நெருங்கி வா முத்தமிடாதே ஆகிய படங்களையும் இயக்கியிருக்கிறார். அதோடு, சீ-தமிழ் தொலைக்காட்சியில் சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சியில் குடும்ப பிரச்சினைகளுக்கு பஞ்சாயத்தும் பண்ணிக்கொண்டிருக்கிறார்.
இந்த நிலையில், விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் அது, இது, எது என்ற நிகழ்ச்சியில், அவரை கலாய்ப்பது போல், சொல்வதெல்லாம் பொய் மேல வைக்காத கை என்றொரு நிகழ்ச்சியை சமீபத்தில் ஒளிபரப்பினார்கள். அதில் லட்சுமிராமகிருஷ்ணன் கெட்டப்பில் நடித்தவர், அவரை இமிடேட் செய்து நடித்ததோடு, அவரது சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியை கலாய்த்திருந்தார்கள்.
ஆனால் இந்த நிகழ்ச்சி லட்சுமி ராமகிருஷ்ணனை பெரிய அளவில் பிரபலப்படுத்தி விட்டதாம்.
அவர் எங்கு சென்றாலும், என்னம்மா இப்படி பண்றீங்களம்மா என்று அவர் பாணியில் பேசி நடித்திருந்த வசனம் பெரிய அளவில் ரீச் ஆகி விட்டதாம். அதனால் பல படங்களில் நடித்து எனக்கு கிடைக்காத பப்ளிசிட்டி இந்த ஒரு எபிசோடில் கிடைத்திருக்கிறது. இதன் மூலம் எனக்கு நிறைய ரசிகர்கள் கிடைத்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகிறாீர் லட்சுமி ராமகிருஷ் ணன். இதையடுத்து அந்த நிகழ்ச்சியில் நடித்தவர்களை சந்தித்தபோது, என்னை என்ன வேணுமானாலும் கலாய்ங்க, அது என் தனிப்பட்ட விடயம்.



ஆனால் சொல்வதெல்லாம் உண்மை ஷோவைப் பற்றி மட்டும் கலாய்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டாராம் லட்சுமி ராமகிருஷ்ணன்.

மக்களைத் எப்படித் திருத்தியமைக்கலாம்?
வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கு என்று திட்டம் போட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மக்களைத் திருத்தியமைக்க முடியாது. பொறுமையுடன் சோர்வடையாமல் சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்து அவற்றைச் சிறுகச் சிறுக மக்களிடையே புகுத்துவதன் மூலம் மக்களை திருத்தியமைக்கலாம்.
ஞானக்கதிர்

# ஸ்மார்ட் கடிகாரத்தை அறிமுகம் செய்தது மைக்ரோசொப்ட்

சில தினங்களுக்கு முன்னர் மைக்ரோசொப்ட் நிறுவனம் ஸ்மார்ட் கடிகாரம் ஒன்றை அறிமுகம் செய்தது.
இதன்மூலம் ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு போட்டியாக மைக்ரோசொப்ட் நிறுவனமும் இணைந்துள்ளது.
200 டொலர்கள் பெறுமதியான இந்தக் கடிகாரமானது 1.4 அங்குல அளவு மற்றும் 320 X 106 பட அளவு ஆகியவற்றைக் கொண்ட திரையைக் கொண்டுள்ளது.
மேலும், இதயத்துடிப்பை அறிந்து கொள்ளும் தொழில்நுட்பம், ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம், புளுடூத்4.0 ஆகியவற்றுடன் ஐ.ஓ.எஸ்., அன்ரோய்ட்- மற்றும் விண்டோஸ் இயங்கு தளங்களைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசிகளுடன் இணைத்துப் பயன்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது.




# ஐ.ஓ.எஸ்.சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டது பேஸ்புக் றூம்ஸ்



குறித்த இடங்கள் அல்லது விடயங்கள் தொடர்பாக நண்பர்களுடன் கலந்தாலோசிப்பதற்காக பேஸ் புக் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட வசதி பேஸ்புக் றூம்ஸ் ஆகும். தற்போது இதனை அப்பிளின் மொபைல் சாதனங்களில் அப்பிளிக்கேஷனாக பயன்படுத்தக்கூடிய வசதியை பேஸ்புக் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இதன்படி ஐ.ஓ.எஸ். 7.0 அல்லது அதற்கு பின்னர் வெளியான இயங்குதளத்தில் நிறுவக்கூடிய பேஸ்புக் றூம்ஸ் அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## செய்திகளை வரசிப்பதற்கான புதிய அப்பிளிக்கேஷன் அறிமுகம்




பிரபலமான செய்தி வாசிப்பு அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்த ஃபிளிப்போர்-நிறுவனம் தற்போது புதிய பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.
அதாவது சுமார் 30,000 தலைப்புக்களைக் கொண்ட செய்திகளை அறிந்துகொள்ளும் வகையில் முன்னர் வெளியிட்ட அப்பிளிக்கேஷனை மீள வடிவமைத்து அறிமுகம் செய்துள்ளது.
இதன் மூலம் நாள்தோறும் பொதுவான செய்திகள், வணிகச் செய்திகள், தொழில்நுட்பச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் உட்பட கலாசார செய்திகளையும் அறிந்துகொள்ள முடியும்.
மேலும் இதனை ஐ.ஓ.எஸ்., அன்ரோயிட் - மொபைல் சாதனங்களில் நிறுவி பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமேசான் தளம் தரும் அதிரடி வசதி

ஒன்லைன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்னணி நிறுவனமான அமேசான் ஆனது தற்போது தனது பயனர்களுக்காக மற்றுமொரு வசதியை வழங்கவுள்ளது.
இதன்படி அமேசான் பிறீமி போட்டோஸ் என்ற ஒன்லைனில் வரையறையற்ற புகைப்படங்களைச் சேமித்து வைக்கும் வசதியை பிரதம வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த வசதியை ஐ.ஓ.எஸ்., அன்ரோயிட் இயங்குதளங்களைக் கொண்ட ஸ்மார்ட் கைபேசிகள் மற்றும் டேப்லட்கள் உட்பட கணினிகளின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமேசானின் பிரதம வாடிக்கையாளராக இருக்க வேண்டும் என்பதுடன் இதற்கு வருடாந்தம் 99 டொலர்கள் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




## ண்டோஸ் 8.1 இயங்குதளத்தில் ஸ்கைப் மொழிபெயர்ப்பு வசதி

உலகின் எந்த மூலையிலும் இருக்கும் உறவுகளை இணைப்பதில் சிறந்த சேவையை வழங்கிவரும் ஸ்கைப் இல் மொழிபெயர்ப்பு எனும் புதிய வசதி தொடர்பான தகவல்கள் கடந்த காலங்களில் வெளியாகியிருந்தது.
அதாவது ஒரு மொழியில் பேசும்போது அதனை வேறொரு மொழியில் உடனடியாக மொழிபெயர்க்கும் வசதியை மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிட்டிருந்தது.
இந்த வசதி மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் விண்டோஸ் 8.1 இயங்குதளத்திலும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது. இதில் உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்பட்டு வரும் 45 வரையான மொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஆரோக்கியத்தை அளவிட்டு இறப்புத் திகதி அறிந்துகொள்ள மொபைல் அப்ளிகேஷன் அறிமுகம்

டெட்லைன் என்று அழைக்கப்படும் மொபைல் அப்ளிகேஷனை, ஆரோக்கியத்தை அளவிடும்டூலாக அறிமுகப்படுத்தியுள்ளது ஐ- போஜன் நிறுவனம். இந்த ஆப்ஸ்-ல் ஒருவரின் எடை, உயரம், உடலின் சக்கரை அளவு, இரத்த அழுத்தம் மற்றும் நடையின் அளவு குறித்த தகவல் ஆகியவற்றைப் பதிவு செய்தால் உடனே கணக்கிடப்பட்டு வாழ்நாளின் இறுதி நாளை தோராயமாக சொல்லிவிடுகிறது இந்த டெட்லைன் ஆப்ஸ்.
இது தொடர்பாக அப்பிள் நிறுவன டூல்ஸ் மேம்பாட்டாளர் கிஸ்ட் எல் எல் சி கூறுகையில்; ஒருவரின் இறப்பை யாராலும் எந்த அப்ளிகேஷனும் முன்கூட்டியே கணித்திட முடியாது. ஆனால் இந்த ஆப்ஸ் மூலம் ஒருவரின் உடல் ஆரோக்கியத்தின் தற்போதைய நிலையைக் கணித்து சொல்லிவிட முடியும். ஆனால் உடல் நலன் குறித்த தகவல்களை வைத்து தோரயமாக இறப்பு வரும் நாளை இந்த ஆப்ஸ் சொல்லிவிடுகிறது என்பதுதான் தற்போது ஆப்ஸ் பிரியர்களின் பரபரப்பாக உள்ளது.




## ஐபோன் உதவியுடன் செல்பி வீடியோக்களை எடுக்க பயன்படும் துணைச் சாதனம்

சமகாலத்தில் செல்பி புகைப்படங்கள் எடுக்கும் முறை உலகளாவிய ரீதியில் மிகவும் பிரபல்யமாகிவிட்ட நிலையில் செல்பி வீடியோ எடுக்கும் கலாசார மும் பரவ ஆரம்பித்துள்ளது.
இதனை இலக்காகக் கொண்டு பிலிம்போ எனும் துணைச் சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இவை கைப்பேசியை வேண்டிய கோணத்தில்; வேண்டிய திசையில் தாங்கி வைத்திருக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
தற்போது நிதி திரட்டல் மற்றும் விளம்பர நோக்கத்துக்காக இண்டிகோகோ தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இந்தச் சாதனத்தின் விலை ஏறத்தாழ 150 டொலர்கள் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒத்துழைக்க மறுத்துவிட்டு குறைபிடிப்பது முட்டாள்தனம்

போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செயற்பாடுகள் மீது மீண்டும் ஒரு தடவை குற்றப் பத்திரிகை வாசித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். இலங்கை விடயத்தில் ஐ.நா. பக்கச்சார்பாக நடந்து வருவதாகக் கொழும்பு அரசு தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது. அதன் தொடர்ச்சியாகவே பீரிஸின் தற்போதைய கருத்துக்களும் வெளியாகி இருக்கின்றன.

''விசாரணையாளர்கள் தாங்கள் அடைய விரும்பும் முடிவுக்கு அவசியமான தகவல்களை மாத்திரம் பெற முயலும் பக்கச்சார்பான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றனர்" என்று அவர் கூறியிருக்கிறார். விசாரணையின்போது பக்கச்சார்பின்மை மற்றும் நேர்மையுடன் தொடர்புபட்ட சில கொள்கைகளையாவது பின்பற்ற வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நாவுக்கு போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றன என்றும், ஐ.நா. விசாரணையைக் காட்டி பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்றும்கூடக் கவலைப்பட்டிருக்கிறார் அமைச்சர்.

ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக இருக்கிறது அமைச்சர் பீரிஸின் இந்தக் கருத்துக்கள். ஐக்கிய நாடுகள் சபை தனது விசாரணையை இலங்கைக்குள் நடத்துவதற்கு கொழும்பு அரசு அனுமதித்திருந்தால், அவர் கூறுகின்ற இந்த இரு விடயங்களுமே இடம்பெற்றிருக்கப் போவதில்லை. விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதித்திருந்தால், வெளிப்படையான விசாரணையை அவர்கள் நடத்தியிருப்பார்கள். கொழும்பு கூறுவதுபோல் பக்கச்சார்பு என்ற பேச்சு எழுவதற்குக்கூட இடம் ஏற்பட்டிருக்காது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாகவும், காணாமற்போனோர் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாகவும், வெளிப்படையாக முன்வந்து சாட்சியமளிக்கும் மக்கள், ஐ.நா. விசாரணையின் முன்பாகவும் சாட்சியமளித்திருப்பார்கள். அரச படையினர் மற்றும் விடுதலைப்புலிகள் என்று இரு தரப்பினருக்கு எதிரான சாட்சியங்களும் பதிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் கிட்டியிருக்கும். அதைத் தடுத்து, இந்த விடயத்தில் இடைத் தரகர் குழுக்களைச் செயற்பட வழியேற்படுத்தியது கொழும்பு அரசுதான்.

ஐ.நா. விசாரணைக்குழுவை அரசு நிராகரித்ததன் விளைவால்தான் விசாரணைக்கு சாட்சியமளிக்குமாறு தமிழர்களை ஊக்குவிக்க வேறு தரப்புகள் செயற்படவேண்டி ஏற்பட்டது. இந்த நிலைமைதான் பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றப்படுவதற்கும் (அரசு கூறுவதைப்போல) வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. எனவே இவை இரண்டுக்குமாக குற்றஞ்சாட்ட வேண்டியது கொழும்பு அரசையே தவிர, ஐ.நாவை அல்ல.

சொந்த மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு கொழும்பு அரசு நேர்மையான, உண்மையான நடவடிக்கைகளை எடுத்திருந்தால், இதில் ஐ.நா. தலையிட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. அதுபோக, போருக்குப் பின்னராவது தமிழர்கள் விடயத்தில் கரிசனையுடன், நேர்மையுடன் செயற்பட்டிருந்தாலும் இந்த நிலைமை வந்திருக்காது. எல்லாவற்றுக்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசேதான் பொறுப்பேற்க வேண்டும். தவறைத் தாங்களே செய்துகொண்டு ஐ.நாவை விமர்சிப்பது அடிமுட்டாள்தனம்.

# பலவீனமான முன் எச்சரிக்கையால் பதுளையில் உருவான பெரும் துயரம்

ராஜ்.

முன் எச்சரிக்கை விடுப்பதற்கான ஏற்பாடுகள் சரிவரச் செயற்படாதபோது இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு மரணம் மிக வேகமாக வந்துவிடுகின்றது.

கடந்த தசாப்த காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் எதிர்கொண்ட யதார்த்தம் இது. ஆனாலும் இயற்கை இடர்களால் மக்கள் பாதிக்கப்படவேண்டியதைத் தடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவர்கள் இந்தத் தவறுகளைத் தொடர்ந்தும் செய்தவண்ணமுள்ளனர்.

உடனடி ஆபத்துள்ளதை அறியாததாலும். அலட்சியம் செய்ததாலும் உண்டான இன்னொரு மாபெரும் துயரம் 29ஆம் திகதி காலை கொஸ்லந்தையிலுள்ள மீரியபெத்தவில் இடம்பெற்றுள்ளது. தலைநகர் கொழும் பிலிருந்து 260 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலைப்பகுதி இது.

தொடர்ச்சியான மலையின் பின்னர் சுமார் 2 கிலோ மீற்றர் மலைப்பகுதி அதிகாலையில் நிலமிறங்கி 66 சிறிய வீடுகளை 30 அடி ஆழமான மண்ணில் புதைந்தது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆரம்பகட்ட அறிக்கையின்படி இங்கு 300 பேர் வரை வசித்துள்ளனர். இவர்களில் சிலர் அன்று அதிகாலையில் வேலைக்குச் சென்று விட்டனர். இந்த இடர் நிகழ்ந்த வேளை அனேகமான குழந்தைகள் பாடசாலைகளில் இருந்திருக்கின்றனர்.

இந்தத் துயரம் நிகழ்ந்து 4 நாள்களுக்குப் பின்னர் 4 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், 38 பேர் காணாமற்போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 100 என அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையில் தற்போது மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சுமார் 1,800 பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் எவரும் மீண் டும் அந்த இடத்துக்குத் திரும்ப வரப்போவதில்லை.

எனினும், மண்சரிவு இந்தப் பகுதியில் எச்சரிக்கையில்லாமல் இடம்பெறவில்லை. சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னரே இந்த வீடுகள் மரணப் பொறியின் மீது அமர்ந்திருப்பதாக எச்சரிக்கப்பட்டது.

2005இல் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு இந்தப் பகுதியில் ஆராய்வுகளை மேற்கொண்டு எச்சரிக்கைகளை விடுத்திருந்தது.

நாங்கள் இந்த வீடுகள் அமைந்துள்ள பகுதி ஸ்திரமற்றது. மண்சரிவுக்கு உள்ளாகக்கூடியது என்பதைக் கண்டுபிடித்தோம். அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுமாறு ஆலோசனை வழங்கினோம் என்கிறார் அந்த அமைப்பின் பதுளையின் மத்திய மற்றும் தென்பகுதிகளுக்குப் பொறுப்பான அதிகாரி செனிவிரத்ன. மண் ணில் புதையுண்டுபோன 66 வீடுகளுக்கும் பெரும் ஆபத்துள்ளது என தாங்கள் முன்கூட்டியே எச்சரித்ததாக சில அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு 6 வருடங்களுக்குப் பின்னர் இதுபோன்ற இன்னொரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்விலும் அதேமுடிவுகளே வெளியாகின. இரண்டு தடவைகளும் மக்களை அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்றுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினோம். அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர் என்கிறார் செனிவிரத்ன.

இந்த இடர் அன்று காலை 7.10க்கு நிகழ்வதற்கு முன்னரும் ஹல்துமுல்ல பிரதேச சபைக்கு எச்சரிக்கை விடுத்தோம். சில கிராமத்தவர்களுக்கு இதனைத் தெரியப்படுத்தினோம். ஆனால், அவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறவில்லை என்கிறார்- செனிவிரத்ன.

ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், அவை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்ததும் நின்றுவிட்டன. அதற்குப் பின்னர் அவை முறையாக எடுத்துச்செல்லப்படவில்லை. ஒழுங்கமைக்கப்படாத ரீதியில் எச்சரிக்கை குறித்த செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறார் இலங்கை செஞ்சிலுவைக் குழுவின் முன் எச்சரிக் கைப் பிரிவின் முகாமையாளர் இந்து அபயரத்ன. இதுவே தற்போது நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது.

இதேவேளை- பாதிக்கப்பட்டுள்ள கிராமத்தவர்களே அபாய சமிக்ஞைகளைத் தவறவிட்டுள்ளனர். 2009 இல் இடர் முகாமைத்துவ நிலையம் (இவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான முக்கிய அரசமைப்பு) மற்றும் ஏனைய அமைப்புக்களும் இணைந்து கொஸ்லந்தை பகுதியில் மக்களுக்கு விழிப்புணர்வையூட்டும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தன.

மண்சரிவு போன்ற இடர்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்காகவும், தகவல்களைப் பரிமாறி மக்களை வெளியேற்றுவதற்காகவும் குழுக்களை அமைத்துச் செயற்படுமாறு அவ்வேளை மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர். அவசரமான நிலையில் தகவல்களைப் பரிமாறுவதற்காக ஒலிபெருக்கிகள் வழங்கப்பட்டன. மழையின் அளவை மதிப்பிடுவதற்கான சாதனங்களும் வழங்கப்பட்டன.

இதுதவிர, தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு அருகிலுள்ள பாடசாலை ஒன்றில் மழையை அளப்பதற்கான கருவி ஒன்றைப் பொருத்தியிருந்தது. ஒக்ரோபர் 29ஆம் திகதி அதிகாலைக்கு முன்னர் வரை 129 மில்லி மீற்றர் மழை பெய்திருந்ததைக் காண்பிக்கின்றது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த எவராவது அதனைப் பார்த்திருந்தால் தமக்குள்ள ஆபத்தை உணர்ந்திருக்கலாம்.

எனினும், எவரும் அபாய எச்சரிக்கையைப் பார்க்கவில்லை; அறிய வில்லை. இதனால் மண்சரிந்து வீழ்ந்த போது என்ன



நடக்கின்றது என்பதைக் கூட அறியமுடியாதவர்களாக அதற்குள் அவர்கள் சிக்கிக்கொண்டனர்.

உண்மையான துயரம் என்ன வென்றால், அவர்கள் வேறு இடங்களுக் குச் செல்வதற்குப் போதிய அவகாசமிருந்தது. எச்சரிப்பதற்கும் அவர்களை குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லுமாறு கேட்பதற்கும் நேரமிருந்தது என்கிறார் - இலங்கை செஞ்சிலுவைக் குழுவின் முன் எச்சரிக்கைப் பிரிவின் முகாமையாளர் இந்து அபயரத்ன.

### முன் எச்சரிக்கைகளில் உள்ள குறைபாடுகள்

உடனடி அபாயமுள்ள பகுதிகளில் ஏன் இத்தனை பேர் தங்கியிருந்தனர்? நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் முன்னால் உள்ள முக்கிய கேள்வியாக இது காணப்படுகின்றது.

இந்தப் பேரழிவுக்குப் பின்னர் முன் எச்சரிக்கை செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. உள்ளூர் மக்களுக்கு முன் எச்சரிக்கைகளை வழங்குவதற்கும், பரப்புவதற்கும், அவர்களை வெளியேற்றுவதற்கும், இது குறித்த ஒத்திகைகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை முன்னெடுப்பதற்கும் உரிய அமைப்பொன்று இல்லாதமை இவ்வாறான பெரிய உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் மக்களை வெளியேற்றுமாறு தெளிவான உத்தரவுகள் வழங்கப்படவில்லை என ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் இலங் கையின் ஏனைய பகுதிகளில் இவ்வாறான ஒத்திகைகள் இடம்பெறுவது வழமையாகியுள்ளது.

நாட்டின் 9 மாகாணங்களிலும் இடர்முகாமைத்துவப் பிரிவுகள் காணப்படுகின்றன. அவர்களுக்கு உள்ளூர் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, பொலிஸாரும் படையினரும் எச்சரிக்கைகளைப் பரப்புதல் மற்றும் மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். 2012இல் ஆழிப்பேரலை எச்சரிக்கை ஒன்று விடப்பட்டவேளை இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறை இடர் முகாமைத்துவப் பிரிவினால் ஒத்திகைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், மீரியபெத்தவில் இது இடம்பெறவில்லை.

மண்சரிவு இடம்பெறுவதற்கு ஒரு வார காலத்துக்கு முன்னரும் 23ஆம் திகதி பதுளையின் ஆறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டால் என்ன செய்வது என்ற ஒத்திகை இடம்பெற்றுள்ளது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக மீரியபெத்தவில் இது இடம்பெறவில்லை.

இங்கு அவ்வாறன திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. ஒருவருக்கும் எங்கு செல்வது, எப்படிச் செல்வது என் பது தெரியவில்லை. மிக முக்கியமாக அதற்குத் தலைமை தாங்குவதற்கு எவரும் இருக்கவில்லை- என்கிறார் அதிகாரி ஒருவர். அரச அமைப்பொன்று முன் எச்சரிக்கை செய்தி களை அனுப்புவதற்கும், மக்களை வெளியேற்றுவதற்குமான திட்டமொன்றை வைத்திருந்திருக்க வேண்டும் என்றும் - அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான பொறிமுறைகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப் படுகின்றன எனக் குறிப்பிடும் அவர், தங்களுடைய தொண்டர்கள் இணைந்து பணியாற்றுகின்றனர் என்கின்றார். இது மிகவும் சவாலான திட்டம். ஆனால், இதனை இலங்கை வெற்றிகரமாகப் பரீட்சித்து பார்த்துள்ளது; பயனளித்துள்ளது என்கிறார் அவர்.

மண்சரிவு நிகழக்கூடிய பகுதிகளில் வாழும் மக்களின் சமூக பொருளாதார நிலையை கணக்கில் எடுக்காமல் விட்ட தும் கூட இந்தப் பகுதிக்கான இடர் தடுப்புத் திட்டத்தில் காணப்பட்ட முக்கிய பலவீனமாகும்.

இந்த மக்கள் அருகிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்த்து மிகக்குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள். மண்சரிவால் அழிந்துபோனவற்றை வீடுகள் எனக் குறிப்பிட முடியாது. அவை ஓர் அறை, நீண்டலயன்கள் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

# நெற்செய்கையில் புதிய இனம்

## அறிமுகமும் புதிய தொழில்நுட்பமும்

பொ. அற்புதச்சந்திரன்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், மன்னார்.

(நேற்றைய தொடர்ச்சி)

பசுந்தாட் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு சணல் விதைகள் 6 கிலோ வீதமும் கிளிசிறிடியா தடிகள் 100வீதமும் மொத்தம் 100 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மத்திய விவசாய அமைச்சின் நிதிமூலத்தின் சேதன பசளை பாவனையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் நெற்செய்கையில் 500 முன் மாதிரித் துண்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் ஓர் ஏக்கருக்காக நான்கு சில்லு உழவு இயந்திர அளவில் மாட்டெரு விநியோகிக்கப்படுகிறது. இந்த ஆண்டு சிறு போகத்தில் இரணை இலுப்பைக் குளம், இபாலம்பிட்டி, விடத்தல்தீவு விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 400 பயனாளிகளுக்கான முன்மாதிரித்துண்டங்கள் காலபோகத்தில் எஞ்சிய பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



மன்னார் மாவட்டத்தில் கூட்டெரு தயாரித்து அவற்றை பயன்படுத்தும் முகமாக 2000 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 25 கிலோ பொசுப்பேற்றும் 3.5 கிலோ கறுப்பு பொலித்தீனும் வழங்கபப்பட்டுள்ளது. கூட்டெரு தயாரிப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புக்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### பசளைப் பிரயோகம்

மண்ணையும் தாவரங்களையும் பகுப்பாய்வு செய்து குறிப்பிட்ட இடத்துக்குத் தேவையான பசளைகளை மாத்திரம் இடும்போது குறைந்தளவிலான பசளைகளுடன் உச்ச அளவான விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியும். மண்ணைப் பகுப்பாய்வு செய்யும் போது நெற் பயிரை பாதிக்கும் ஏனைய பிரச்சினைகளையும் இனம் காணலாம். எனவே உயர் விளைச்சலை பெறுவதற்கு விவசாயிகள் தமது வயல் மண்ணை பகுப்பாய்வு செய்து அதற்கேற்ப உரமிடப் பழகிக் கொள்ள வேண்டும்.

மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியம் 2012 இன் நிதியீட்டத்தில் உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் 200 மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் அறிக்கைகளும். அத்துடன் இவ்வருட ஆரம்பத்தில் மத்திய அமைச்சின் நிதியீட்டத்துடன் 40 மண்மாதிரிகளும் பகுப் பாய்வு செய்யப்பட்டு அதன் அறிக்கைகளும் மேலும் மன்னார் தீவில் DRR திட்டத்தின் கீழ் வேள்ல்ட் விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 48 மண் மாதிரிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கப்பாலும் விடத்தல்தீவு விவசாய போதனாசிரியா பிரிவில் ஈச்சளவக்கை, சன்னார் , காயாநகர் கிராமங்களில் 53 மண்மாதிரிகள் ZOA நிறுவனத்தின் நிதியுதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதற்கான பரிந்துரைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மண்பகுப்பாய்வு மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் அருகிலுள்ள விவசாய போதனாசிரியரை நாடி ஒரு மண் மாதிரிக்கு 290 ரூபா வீதம் செலுத்தி நீங்களும் இந்தச்சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.

### வினைத்திறனான களைக் கட்டுப்பாடு

நெற் செய்கையில் களை கட்டுப்பாடானது எமது மாவட்டத்தில் மட்டுமல்லாமல நாடளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மாவட்ட விவசாய குழுக் கூட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன கூட்டங்கள் விவசாயிகளின் பயிற்சி வகுப்புக்கள் போன்றவற்றில் நெற்செய்கையாளாகளால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் முகமாக கடந்த சிறுபோகம் 2013இலும் காலபோகம் 2013/2014 இலும் மாவட்டத்தில் பல இடங்களிலும் தற்போது பாவனையிலுள்ள களைநாசினிகளின் வினைத் திறனை அறிந்து கொள்வதற்காக செய்முறை விளக்கங்கள் விவசாயிகளின் பங்களிப்புடன் அவர்கள் முன்னிலையிலேயே பரீட்சிக்கப்பட்டது. இதன் பெறுபேறாக விவசாயத் திணைக்களத் தின் பரிந்துரையுடன் லேபலில் காணப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் களை நாசினியை விசிறும் போது புற்கள் மற்றும் அகன்ற இலைகள் கட்டுப்படுத்தப் பட்டன. கோரை இன களைகளே தற்போது ப ந்துரை செய்யப்பட்டுள்ள களைநாசினிக எ ல் கட்டுப்படுத்தப்படவில்லை என அவ த ரிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைபாடுகள் ப ரி விவசாயத் திணைக்களத்தின் பீடை ர னிகள் பதிவாளருக்கு சுட்டிக்காட்டப்பட்ட த பிரகாரம் கோரைகளை கட்டப்படுத்த எ இரண்டு களைநாசினிகள் மிக விரை வா ரிந்துரை செய்யப்படவுள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியத்தின் மாவட்டத்தில் நெல் உற்பத்தி திறனை ஏக்கருக்கு 200 புசல் அறுவடை என அதிகரிக்கும் நோக்குடன் கண்ட முன்மாதிரி செய்கைத் துண்டங்கள் 10 இடங்களில் முன்னெடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்துக்காக பதிவு செய்யப்பட்ட விதைநெல்லான பிஜி.360 (கீரீ சம்பா)03 புசல் வீதமும் நொமினி களை நாசினி 100மில். லீ. நாகசல்பேற்று 02 கிலோ கிராம் நெல் உமியை பகுதியாக கரியாக்கும் உபசரணம் தலா ஒவ்வொன்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**நெற்செய்கையில் 500 முன் மாதிரித் துண்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் ஓர் ஏக்கருக்காக நான்கு சில்லு உழவு இயந்திர அளவில் மாட்டெரு விநி யோகிக்கப்படுகிறது. இந்த ஆண்டு சிறு போகத்தில் இரணை இலுப்பைக் குளம், இபாலம்பிட்டி, விடத்தல்தீவு விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.**

### அரிசி ஏற்றுமதி வலயம்

இலங்கை தீவானது 2011ஆம் ஆண்டுடன் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. தற்பொழுது விளைவிக்கப்படும் மேலதிகமான அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கோடு. வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் குறிப்பிட்ட திட்டத்தை நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அரிசி ஏற்றுமதிக்காக வெள்ளை நிற நீண்ட உருண்டையான 3½ மாத வயதுடைய பிஜி11-65 இனமும் பாரம்பரிய இனமான பச்சை பெருமாளும் சுவந்தலும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. விவசாய அபிவிருத்தியின் பங்காளர்களாகிய நீங்கள் மாவட்டத்தில் நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனையும் அதிகரிப்பதற்கு வேண்டிய அனைத்து தொழில் நுட்பங்களையும் நெற்செய்கையில் புகுத்தி வெற்றிகரமான பயிர்ச்செய்கையை மேற்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

(முற்றும்)

## இது மரநடுகை மாதம்



### கன்றுகள் தேர்வு

ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை வயதுடைய நேராக வளர்ந்த நல்ல கன்றுகளை தேர்ந்தெடுக்க வேண்டும்.

### குழி எடுத்தல் எப்படி?

3 மீற்றரிலிருந்து 4 மீற்றர் இடைவெளி தூரத்தில் 1 அடி விட்டம் 2 அடி ஆழத்திற்கு குழி எடுக்க வேண்டும். எடுத்த மண் குழிக்குள் சரியாவண்ணம் சற்றுத் தள்ளிப் போடவேண்டும்.

அந்த மண் சில நாட்களுக்கு அப்படியே வெளியில் இருக்கட்டும். அதில் உள்ள கற்களையும், கூழாங்கற்களையும் நீக்கி அதோடு 3இல் 1 பங்கு மக்கிய சாணிஉரம் சேர்க்கவேண்டும்.

### மரக்கன்று நடும் நாள்

பருவ மழைக்காலத்தில் மழை பெய்யும் ஒரு நாளையோ அல்லது மேகமூட்டமான ஒரு நாளையோ தேர்ந்தெடுத்து முதல் மழைக்குப் பிறகு நடுகை செய்வது நல்லது.

### சரியாக நடுதல் எப்படி?

நாற்றுப் பண்ணைக்ளில் இருந்து நாற்றைக் கொண்டுவந்து சேகரிக்க வேண்டும். அப்போது நாற்றுக்களை கவனமாக கையாளவேண்டும்.

தண்டைப் பிடித்து தூக்காமல் பையின் அடிப்பாகத்தைப் பிடித்து தூக்குவது நன்று. நடவேண்டிய இடத்துக்கு நாற்றுக்களை கொண்டு வந்த பிறகு நேரத்தை வீணாக்க வேண்டாம்.

வெளியில் இருக்கும் மண்ணில் சிறிதளவு குழிக்குள் தள்ளவேண்டும்.

வேர்களை சுற்றியிருக்கும் மண்பிடிப்பு உதிர்ந்துவிடாமல் பொலிதின் பைகளைக் கிழித்தோ அல்லது மண் தொட்டிகளை உடைத்தோ குழியில் வைக்க வேண்டும்.

மீதமுள்ள மண்ணைக் குழிக்குள் போட்டுத் தள்ளி வேரைச் சுற்றி மண்ணை இறுக்கவும். இதனால் நாற்று வளையாமல் நேராக நிமிர்ந்து வளரும். மழைத் தண்ணீரும் அதிகம் தேங்காது.

தண்ணீர் விடத்தோதாக கன்றைச் சுற்றி புள்ளம் இருந்தால் நன்று. சரிவான பகுதி எனில் மழை நீர் சேகரிப்பு குழிகளை பிறை வடிவில் கன்றுக்கு முன்பும் பின்பும் ஏற்படுத்தலாம்.

### கவனம்

ஈரமண்ணில் செடியின் வேர்கள் அழுந்திப் பொருந்தியிருக்க வேண்டும்.

ஈரமண்ணில் இருந்து வேர்கள் வெளியே தெரிந்தாலும், வேரைச் சுற்றியிருக்கும் மண் உதிர்ந்தாலும் கன்றுகள் காய்ந்து விடும் வாய்ப்பு உண்டு.

நாற்றை அதிக ஆழத்தில் வைத்து நட்டாலும் அது காய்ந்து கருகிவிடும் என்பது நினைவில் இருக்கட்டும். வேர்கள் வெளியே தெரியும்படி நீட்டிக்கொண்டிருந்தால் அந்த நாற்றுகள் வளராது.

வேர்கள் மடங்கி இருக்கும் வகையில் நட்டு விட்டால் நாற்று வாடி உயிரிழந்து விடும். வளைந்த நாற்றுகள் நேராக வளராது.

முதல் கோடை கலத்தில் நாற்றுக்கு தினமும் தண்ணீர் விட வேண்டும். இல்லாவிட்டால் உயிரிழக்க வாய்ப்புகள் அதிகம்.



## செல்வாக்கு மிக்க தலைவர்களில் 15 ஆவது இடத்தில் பிரதமர் மோடி



டில்லி, நவ.7
உலகின் செல்வாக்கு மிக்க தலைவர்கள் வரிசையில் மோடிக்கு 15 ஆவது இடம் கிடைத்துள்ளது.
அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'போபர்ஸ்' பத்திரிகை ஒவ்வொரு ஆண்டும் புகழ் பெற்ற மனிதர்களை தெரிவு செய்து அவர்களின் செல்வாக்கு மற்றும் புகழ் போன்ற பல பிற விதிகளின் அடிப்படையில் வரிசைப் படுத்தி வருகிறது. இதற்காக உலகம் முழுவதிலும் இருந்து 72 தலைவர்கள் பல்வேறு பிரிவு களில் இருந்து தெரிவு செய் யப்பட்டனர்.
இந்த வரிசையில் ரஷ்ய ஜனாதிபதி முதலிடத்தையும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இரண்டாவது இடத்தையும், சீன ஜனாதிபதி ஷின்ஜின்பிங் 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். (ரி)

# மீனவர்களைக் காக்க பட்டினிப்போர் ஆரம்பம்

### 13 மாவட்ட மீனவர்கள் போராட்டத்தில் குதிப்பு



சென்னை, நவ.7
தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனையை விதித்ததைக் கண்டித்து, மாநிலம் முழுவதும் 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று காலவரையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லாங்லெட் ஆகிய 5 மீனவர்கள் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படை யினரால் சிறைப்பிடிக்கப் பட்டனர். பின்னர் போதைப் பொருள் கடத்தியதாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.
இந்த வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களையும் சேர்த்து 8 பேருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
அந்தத் தீர்ப்பைக் கண்டித்து மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டமும், பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர் போராட்டங்களையும் தமிழகம் முழுவதும் நடத்தி வருகின்றனர்.
அதன் தொடர்ச்சியாக, 13 தமிழக கடலோர மாவட்ட மீனவர்கள் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.
இராமேஸ்வரம் தீவு, தங்கச்சி மடத்தில் நடைபெற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் 2,000 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டத்தில் தங்கச்சிமடம் ஊராட்சி மன்றத் தலைவர் ஞானசீலன் தலைமை தாங்கினார். முன் னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அப்பா துரை, மானாம துரை சட்ட மன்ற உறுப்பினர் குணசேகரன், மீனவப் பிரநிதி கள் ராயப்பன், அருள், சேசு, எம்ரிட், சந்தியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில், 'இலங்கை உயர் நீதிமன்றம் தமிழக மீனவர்கள் 5 பேருக்கு அளித் திருக்கும் தூக்குத் தண்ட னையை நிறுத்தி வைக்க வேண்டும், இலங்கைக் கடற்படையினரால் கடந்த 5 மாதங்களில் கைப்பற்றப்பட்ட 82 விசைப் படகுகளை விடு விக்க வேண்டும், யாழ்ப் பாணம் சிறையில் உள்ள 24 மீனவர்களை விடுதலைசெய்யவேண்டும், இந்திய - இலங்கை இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர முடிவு காண வேண்டும்' உள்ளிட்ட கோரிக்கைகள் வலியு றுத்தப்பட்டன.

#### பிரதமர் மோடிக்கு எச்சரிக்கை

பிரதமர் நரேந்திர மோடி மீனவர் பிரச்சினை குறித்து தமது நிலைப்பாட்டை அறிவித்து, இலங்கை அரசுக்கு மீனவர்களின் தூக்குத் தண்டனையை நிறுத்த நெருக்குதல் கொடுக்கத் தவறினால் தமிழக மீனவப் பிரதிநிதிகளின் அவசரக் கூட்டத்தை இராமேஸ்வரத்தில் கூட்டி, நாடாளுமன்ற முற்று கைப் போராட்டம் அறிவிக்கப் படும் என்று இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் மீனவப் பிரநிதிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

#### 7 ஆவது நாளாக வேலை நிறுத்தம்


ஏழாவது நாளாக தமிழகம் முழுவதும் கடலோர மாவட்டங்களில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டி ருப்பதால் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ் வாதா ரத்தை இழந்துள்ளனர். இத னால் 30 கோடி ரூபா வுக்கும் மேல் அந்நிய செல வாணி இழப்பும் ஏற்பட்டுள்ளது. (வ)

## இலங்கை அரசைக் கண்டித்து தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுக

### இந்திய மீனவப் பிரதிநிதிகள் கோரிக்கை

சென்னை, நவ.7
தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை உயர் நீதிமன்றம் மூலம் சாவுத் தண் டனை வழங்கிய இலங்கை அரசைக் கண்டித்து சட்ட சபையில் அவசரக் கூட்டத் தைக் கூட்டி தீர்மானம் நிறை வேற்ற வேண்டும் என்று மீனவப் பிரநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதுதொடர்பில் இராமேஸ் வர மீனவப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாவது:
தமிழக மீனவர்கள் மீது போதைப் பொருள் கடத்தியதாக, பொய் யான வழக்குப் புனைந்து இலங்கை நீதிமன்றத்தில் வழக்குத் நடைபெற்று வந்தது. இறுதியில் இலங்கை உயர் நீதிமன்றத்தால் தமிழக மீனவர்கள் 5 பேருக் கும் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.
தமிழக அரசு, மீனவர்களின் தண்டனையை முற்றிலுமாக நீக்கச் செய்து அவர்களை விரைவில் மீட்டுத் தரும் என்று மீனவர்கள் உறுதி யாக நம்புகின்றனர் என்றும் தமிழக சட்டசபை யின் அவச ரக் கூட்டத்தை கூட்டி மத்திய அரசு போர்க் கால நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழக மீனவர்களின் வாழ்வாதா ரத்தை முடக்க நினைக்கும் இலங்கை அரசைக் கண்டிக் கும் வகையில் மிகக் கடுமை யான வாசகங்கள் அடங்கிய தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்"- என்றார். (ரி)

## ஓராண்டை நிறைவு செய்தது மங்கள் யான்




இந்திய விண்வெளித்துறையின் மைல் கல்லான மங்கள்யான் விண்ணில் ஏவப்பட்டு நேற்று முன் தினத்துடன் ஓராண்டை நிறைவு செய்துள்ளது.
சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படுகிற செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்காக இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட மங்கள்யான், கடந்த ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. 1337 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக் கோளில் மார்ஸ் கலர் கமரா, தெர்மல் இன்ஃப்ரா ரெட் இமேஜிங் ஸ்பெக்ட்ரோ மீற்றர், மீத்தேன் சென்சார் உள்ளிட்ட சாதனங்கள் பொருத்தப்பட்டுள் ளன. விண்ணில் ஏவப்பட்டதிலிருந்து 9 மாதங்களில் 65 கோடி கிலோ மீற்றர் பணயம் செய்து, கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையில் மங்கள்யான் இணைந்தது.
தற்போது மங்கள்யான் செவ்வாய்க்கிரகத்தின் 2 நிலாக்களின் முழுமையான உருவம், செவ்வாய் கிரகத்தின் முழுவட்டத் தோற்றம் ஆகியவற்றைப் படம் பிடித்து பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.
மங்கள்யான் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு நேற்று முன் தினத்துடன் வெற்றிகரமாக ஓராண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது.
வளர்ந்த நாடுகளின் விண்கலங்கள் முதல் முயற்சியில் செவ்வாய்க்கிரகத்தை எட்ட முடியாமல் போயிருந்த நிலையில், முதல் முயற்சியிலேயே இந்தியா இந்த சாதனையை படைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# டில்லி சட்டசபையை கலைக்க உத்தரவு

### தேர்தல் பணியில் ஆணையகம் தீவிரம்



டில்லி, நவ.7
டில்லியில் முடக்கி வைக்கப் பட்டுள்ள சட்டசபையைக் கலைக்க ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உத்தரவிட்டார்.
அதையடுத்து, வெற்றிடமாகவுள்ள கிருஷ்ணாநகர், மெஹ்ரோலி, துக்ளகாபாத் ஆகிய 3 தொகுதிகளுக்கும் எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்துவதாக அறிவித்திருந்த இடைத்தேர்தலை தலைமைத் தேர்தல் ஆணையகம் நீக்கியது. மேலும் டில்லிக்கு அடுத்த சில மாதங்களில் தேர்தல் நடத்தும் நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையகம் ஆரம்பித் துள்ளது.
முன்னதாக, ஜம்மு - காஷ்மீர், ஜார்க்கண்ட் ஆகிய மாநில சட்டசபைகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்தப்படும் தேர்தலுடன் சேர்த்து டில்லியில் வெற்றிடமாகவுள்ள 3 தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடத்தும் அறிவிப்பை தேர்தல் ஆணையகம் வெளியிட்டது. இதில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் புதன்கிழமை என்றும் ஆணையகம் தெரிவித்தது. இந்தநிலையில், டில்லியில் முடக்கி வைக்கப்பட்டிருந்த சட்டசபைக்கு தேர்தல் நடத்தாமல் ஆட்சி அமைக்கும் கடைசி முயற்சியை துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங் மேற்கொண்டார். அதன்படி பா.ஜ.க., ஆம் ஆத்மி கட்சி, காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களை அழைத்து அவர் ஆலோசனை நடத்தினார். ஆனால், பெரும்பான்மை பலம் இல்லாத நிலையில் ஆட்சி அமைக்க பா.ஜ.க., ஆம் ஆத்மி ஆகிய இரு கட்சிகளும் ஆர்வம் காட்டவில்லை. அதேசமயம், இந்த இரு கட்சிகளுக்கும் ஆதரவு அளிக்க முடியாது என்றும் காங்கிரஸ் கட்சி தெரிவித்தது. அதையடுத்து, டில்லியில் தேர்தல் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கும் மத்திய உள்துறைக்கும் நஜீப் ஜங் அறிக்கை அனுப்பினார்.
அதை மத்திய அமைச் சரவையும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் ஏற்றுக் கொண்டதை அடுத்து, டில்லி சட்டசபையைக் கலைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
அதைத்தொடர்ந்து, மொத்தம் 70 தொகுதிகள் கொண்ட டில்லி சட்டசபைக்கு அடுத்த ஒரு மாதத்தில் தேர்தல் நடத்தும் வாய்ப்புகளை ஆராயும் பணிகளில் தேர்தல் ஆணையகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (வ-ரி)

## மன்மோகனுக்கு மோடி பாராட்டு



ஜப்பான் அரசின் உயரிய விருதான 'தி கிராண்ட் கார்டன் ஒப் தி ஓர்டர் ஒப் தி பவுலோவ்னியா பிளவரஸ்' என்ற விருது பெற்றுள்ள முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டுத் தெரிவித் துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில்: ஜப்பான் நாட்டின் உயரிய விருதை மன்மோகன் சிங் பெற்றுள்ள செய்தி மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். (ரி)

# கிளிக்கு வயது 100

சிட்னி, நவ.7

ஆஸ்திரேலியாவுக்கு உட்பட்ட டாஸ்மானியா தீவில் உள்ள வனவிலங்குகள் சரணாலயத்தில் 100 வயதான ஒரு கிளி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக அந்தக் கிளிக்கு சரணாலய ஊழியர்கள் பிறந்த நாள் கொண்டாடினார்கள். 100 என்ற வடிவத்தில் உருவாக்கப்பட்ட கேக்கில், மூன்று மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து, அதை அந்தக் கிளிக்குப் பரிசாக அளித்துள்ளனர்.



எல்லாவற்றுக்கும் மேலாக, பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்திடம் இருந்து அந்த கிளிக்கு வாழ்த்துச் செய்தி வந்துள்ளது.

பொதுவாக, இந்த வகையைச் சேர்ந்த கிளிகள், வனத்தில் இருந்தால் 40 ஆண்டுகளும், சரணாலயத்தில் பராமரிக்கப்பட்டால் 70 ஆண்டுகளும்தான் அதிகபட்சமாக வாழும். ஆனால், இந்தக் கிளி அதையும் தாண்டி, 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. (வ)



காம்போடியாவில் ஆண்டுதோறும் தண்ணீர்த் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினமும் விமரிசையாக நடைபெற்றது தண்ணீர்த் திருவிழா. (வ)

## இஸ்ரேல் இராணுவம் மீது மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

இஸ்ரேல் - காஸா போரின் போது, இஸ்ரேல் இராணுவம் பொதுமக்களின் உயிரையும் பொருட்படுத்தாமல் தாக்குதல் நடத்தியதாக சர்வதேச பொது மன்னிப்பு சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு ஆதாரமாக எட்டு நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டியுள்ள ஆம்னெஸ்ட்டி அமைப்பு, எச்சரிக்கை வழங்காமலேயே இஸ்ரேல் இராணுவம் பொதுமக்களது வீடுகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், பெரிய பரல் வெடிகுண்டுகளை வீசி ஒரு வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் கொன்றதாகவும் தெரிவித்துள்ளது. (வ)

# நியூஸிலாந்தில் ஒதுங்கிய திமிங்கிலங்கள் இறந்தன



வெலிங்டன், நவ.7

நியூஸிலாந்து கடற்கரையில் கரையொதுங்கிய 22 பைலட் ரக திமிங்கிலங்கள் மீண்டும் கடலுக்குச் செல்ல இயலாமல் உயிரிழந்துள்ளன.

ஒஹிவா துறைமுகப் பகுதியில் கரையொதுங்கிய சுமார் 21 திமிங்கிலங்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டு மீண்டும் கடலுக்குள் கொண்டு சென்று விட்டனர். ஆனால், கடலின் ஆழத்துக்குத் திமிங்கிலங்களால் செல்ல முடியாததால் அவை கூட்டத்தோடு உயிரிழந்தன. இதனால் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இதுவரை கரையொதுங்கி உயிரிழந்த திமிங்கிலங்களின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது.

கரையொதுங்கும் திமிங்கிலங்களை மீட்கும் தன்னார்வக் குழுவைச் சேர்ந்த டாரென் க்ரோவர் இது குறித்துத் தெரிவிக்கையில்; 'மீண்டும் கடலுக்குள் விடப்பட்ட திமிங்கிலங்கள் கடலின் ஆழமான பகுதிக்குச் சென்றுவிடும் என்ற எங்களின் நம்பிக்கை வீணாகி விட்டது. இது கடலுக்குள் திமிங்கிலங்களை வெற்றிகரமாக அனுப்பியதற்கு கிடைத்துள்ள வருத்தமான முடிவு.

அழகான இந்தத் திமிங்கிலங்கள் அவற்றின் இயற்கையான சூழலில் இருந்து வெளியே வந்த பிறகு ஒவ்வொரு நிமிடமும் அவற்றுக்கு வேதனையாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்' என்று- கூறியுள்ளார்.

இதேவேளை நியூஸிலாந்தில் கூட்டம் கூட்டமாக திமிங்கிலங்கள் கரையொதுங்கி உயிரிழப்பது வழக்கமாகியுள்ள நிலையில், இதற்கான சரியான காரணம் குறித்து தெளிவான புரிதல் ஏற்படவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர் என்பது - குறிப்பிடத்தக்கது. (வ)

# சரிகிறது செல்வாக்கு

நியூயோர்க், நவ.7

அமெரிக்காவில் செனட் சபையைக் குடியரசுக் கட்சி கைப்பற்றி உள்ளதால், ஒபாமாவின் செல்வாக்கு சரியத் தொடங்கி உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.



அமெரிக்க செனட் சபைக்கும், மாகாண ஆளுநர், மாகாண பிரதிநிதிகளுக்கான பதவிகளுக்கும் இடைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் வெளியிடப் பட்டன. வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அடிப்படையில் , அந்தநாட்டு செனட் சபையில் அதிக இடங்களைக் குடியரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

அந்தக் கட்சி சார்பில் தெற்கு கரோலினா மாகாண ஆளுநராகப் போட்டியிட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலே மீண்டும் ஆளுநர் பதவியைக் கைப்பற்றியுள்ளார்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒபாமாவின் பதவிக் காலம் முடிவடைய இன்னமும் இரண்டு வருடங்கள் உள்ள நிலையில், குடியரசுக் கட்சி அதிக இடங்களை கைப்பற்றியிருப்பதன் மூலம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமாவுக்கு மிகக் கடுமையான போட்டி இருக்கும் என்று தெரிய வருகிறது.

தேர்தல் முடிவுகளின்படி செனட் சபையில் குடியரசு கட்சிக்கு 52 இடங்களும், ஒபாமாவின் ஜனநாயக கட்சிக்கு 45 இடங்களும் கிடைத்துள்ளன. இதன்மூலம் செனட் சபையை அமெரிக்காவின் மிகப் பழைமையான கட்சியான குடியரசுக் கட்சி கைப்பற்றியுள்ளமை - குறிப்பிடத்தக்கது. (வ)

# தலாய்லாமாவின் ஆதரவாளர்களுக்கு சீனா அதிகாரிகள் கடும் எச்சரிக்கை

சீனாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட திபெத் புத்த மத ஆன்மிகத் தலைவரான தலாய்லாமாவுக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படும் என சீன அரச அதிகாரிகள் எச்சரித்துள்ளதாக பீஜிங் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக தலாய்லாமாவுக்கு விசுவாசமாக உள்ள சீன கம்யூனிஸக் கட்சியின் உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவர் என்று மூத்த அரச அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

கட்சிகளின் உட்துறைக் கண்காணிப்பகத்தின் தலைவரே டொங்சொங் ஆங்கில மொழியிலான கம்யூனிஸக் கட்சியின் செய்திப் பத்திரிகையான 'குளோபல் டைம்ஸ்' பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில்; திபெத் அதிகாரிகள் பிரிவினைவாதிகளை இல்லாது ஒழிக்கவும் சமூக ஸ்திரத் தன்மையைக் கொண்டு நடத்தவும் கவனம் செலுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத் துள்ளார். மறுபுறம் 'த பீப் பிள்ஸ் டெய்லி' என்ற இன்னொரு உள் நாட்டுப் பத்திரிகையில் திபெத் கட்சித் தலைவர் சென் குவாங்குவோ புதன்கிழமை 14 ஆவது தலாய் லா மாவைப் பின்பற்றுபவர்களைக் கடுமையாக எச்சரித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. சீன எதிர்ப்பு வலுத்ததால் 1950 ஆம் ஆண்டு 14 ஆவது தலாய் லாமா திபெத்தில் இருந்து தப்பிச் சென்று இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## எபோலா பாதிப்பு சியாரா லியோனில் அதிகம்

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் எபோலா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஆபிரிக்காவைச் சேர்ந்த தன்னார்வ அமைப்பொன்று நடத்திய ஆய்வில் நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் 2 மாதங்களுக்கு முன்பு இருந்ததைவிட ஒன்பது மடங்கு வேகமாக எபோலா வைரஸ் பரவி வருவதாகத் தெரிய வந்துள்ளது.

நாட்டின் தலைநகரிலும் எபோலாவின் பாதிப்பு அதிகரித்து வரும் நேரத்தில் வடக்குப் பகுதி நகராத்தில் இந்த வைரஸின் பாதிப்பு குறைந்து வருவதாகவும், அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களைப் புதைக்கும் நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவ்ணம், லைபீரியாவில் வைரஸ் தாக்கம் குறைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

உலக அளவில் இதுவரை 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ள உலக சுகாதார நிறுவனம், சுமார் 5 ஆயிரம் பேர்வரை உயிரிழந்துள்ளாதகவும் தெரிவித்துள்ளது. (வ)

# அமெரிக்கத் தூதருக்கு பாக். அழைப்பாணை

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் தீவிரவாதிகளை மறைமுகமாகப் பயன்படுத்துகிறது என்றும் - வலுவான இந்திய ராணுவத்தை எதிர் கொள்ள தீவிரவாதத்தை பாகிஸ்தான் பினாமியாகக் கொண்டுள்ளது என்றும்- பென்டகன் தாக்கல் செய்துள்ள அறிக்கையை 'ஆதாரமற்றது' என்று கூறி பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதருக்கு அந்தநாட்டு அரசு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன், அறிக்கை ஒன்றை அளித்துள்ளது. அந்த அறிக்கையில்,

பாகிஸ்தானில் இயங்கி வருகிற தீவிரவாதிகள் இந்தியா, ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றனர்.

இது ஆப்கானிஸ்தானுக்கு கேடாகவும், பிராந்திய ஸ்திரத் தன்மைக்குத் தீங்காகவும் அமைகிறது. ஆப்கானிஸ்தானில் செல்வாக்கை இழந்த நிலையில், தீவிரவாதிகளை அங்கு பாகிஸ்தான், மறைமுகமாகப் பயன்படுத்துகிறது.

இதேபோன்று, வலுவான இந்திய ராணுவத்தை எதிர் கொள்வதற்குத் தீவிரவாதிகளை மறைமுகமாகப் பயன்படுத்துகிறது.

இந்தியாவில் பிரதமராக நரேந்திர மோடி பதவி ஏற்பதற்கு 3 நாள்களுக்கு முன்பாக ஆப்கானிஸ்தானில் ஹெராத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் தாக்குதலுக்கு ஆளானது. அங்கு ஆயுதம் ஏந்திய 4 தீவிரவாதிகள் கடும் தாக்குதல்கள் நடத்தினர். பிரதமர் மோடி இந்து தேசியவாத, குழுக்களுக்கு நெருக்கமானவர் என்ற எண்ணத்தில், அவர் பதவி ஏற்பு நேரத்தில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன. என்று - தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான், தீவிரவாதிகளை மறைமுகமாகப் பயன்படுத்துகிறது என அமெரிக்கா பகிரங்கமாக குற்றஞ்சாட்டியது. இந்தநிலையில் பென்டகன் அறிக்கை குறித்து தனது கவலையை வெளிப்படுத்த அமெரிக்கத் தூதருக்கு பாகிஸ்தான் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

மேலும், கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் இவை தேவையற்ற கருத்துக்கள் என்று தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் இதுகுறித்துப் பேசுகையில், தீவிரவாதத்தை ஒழிக்க அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளித்துவரும் நிலையில், ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான், தீவிரவாதிகளை மறைமுகமாகப் பயன்படுத்துகிறது என்றும் - வலுவான இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள தீவிரவாதத்தை பாகிஸ்தான் பினாமியாகக் கொண்டுள்ளது என்றும் - பென்டகன் ஆதாரமற்ற அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது என்று- குறிப்பிட்டுள்ளார். (வ)

# மனிதக் குடலிலிருந்து உயிருடன் மீனை அகற்றிய மருத்துவர்கள்



பிரேசில் நாட்டில் நபர் ஒருவரின் குடலில் இருந்து 2 அடி நீளமுள்ள மீன் ஒன்று அறுவைச் சிகிச்சை மூலம் உயிருடன் அகற்றப்பட்டுள்ளது.

பிரேசிலின் லான்ரினா பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரது உடலை மருத்துவ பரிசோதனைக்காக ஸ்கான் செய்தபோது. அவரது குடல் பகுதியில் நன்கு வளர்ச்சியடைந்த மீனொன்று இருந்தது தெரியவந்தது.

அந்த மீன் அறுவைச் சிகிச்சை மூலம் உயிரோடு வெளியேற்றப்பட்டது. எப்படிச் சென்றிருக்கலாம் என்று மருத்துவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

அறுவைச் சிகிச்சையின்போது. உடன் இருந்த மருத்துவர்கள் அதனை கானொலி எடுத்து வெளியிட்டுள்ளனர்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின் குணமடைந்த அந்த நபர், தனக்குச் செய்யப் பட்ட அறுவை சிகிச்சை தனது அனுமதி இல்லாமல் படமாக்கப்பட்டதாகவும், அந்த கானொலி இணையத்தில் பதிவேற்றப்பட்டதாகவும் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

அதையடுத்து முறையான அனுமதி இல்லாமல் அறுவைச் சிகிச்சையை படமாக்கியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | 3 | | | | 2 |
| 7 | 4 | | | 6 | 5 | 3 | | |
| 9 | 6 | | | | 8 | | | |
| | | 7 | | 4 | 9 | 1 | | 6 |
| 6 | 2 | | | | | | 4 | 8 |
| 4 | | 1 | 6 | 8 | | 2 | | |
| | | | 3 | | | | 2 | 4 |
| | | 6 | 4 | 7 | | | 3 | 9 |
| 3 | | | | 5 | 2 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 7 | 8 | 9 | 6 | 5 | 1 | 4 |
| 1 | 8 | 5 | 4 | 7 | 2 | 3 | 9 | 6 |
| 4 | 6 | 9 | 1 | 5 | 3 | 8 | 7 | 2 |
| 8 | 7 | 2 | 5 | 3 | 4 | 9 | 6 | 1 |
| 9 | 1 | 3 | 7 | 6 | 8 | 2 | 4 | 5 |
| 5 | 4 | 6 | 9 | 2 | 1 | 7 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 2 | 4 | 7 | 1 | 5 | 3 |
| 3 | 5 | 1 | 6 | 8 | 9 | 4 | 2 | 7 |
| 7 | 2 | 4 | 3 | 1 | 5 | 6 | 8 | 9 |

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....
## சிந்தனையாளராகுங்கள்



காலம் செல்லச் செல்ல ஒவ்வொரு நாளும் வாழ்க்கைச் சிக்கல்கள் ஆழ்ந்தும் அகன்றும் சென்று கொண்டிருக்கின்றன. வேதாந்த உண்மைகள் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட அந்த நாளிலே வாழ்க்கையின் உண்மையும் சாரமும் எல்லா உயிர்களின் ஒற்றுமை என்று போதிக்கப்பட்டது. ஓர் அணு உலகத்தில் உள்ள எல்லா அணுக்களையும் இழுக்காமல் பிரபஞ்சத்தில் செல்ல முடியாது. உலகம் முழுவதும் விழிப்போடிராது விடின் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படாது. எந்தப் பிரச்சினைக்குமான தீர்வை நாட்டின் அடிப்படையிலோ மற்ற எந்த குறுகிய அடிப்படைகளிலோ தீர்க்க முடியாது. ஒவ்வொரு நாளும் தெளிவாகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு கொள்கையும் உலகம் முழுவதும் அடையும்படி பரந்ததாகவே இருக்க வேண்டும். ஒவ்வோர் அசைவும் மனித சமுதாயம் முழுவதையும் மூடிக்கொள்ளுமளவு வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். அல்லது வாழ்க்கை முழுவதும் உலகத்தின் எல்லைவரை பரவ வேண்டும். நம்முடைய பார்வையையும், நம்முடைய செயலின் அளவையும், மிகக்குறுக்கிக்கொண்டால் அந்த நாடு இழிவான நிலைக்கு செல்லும். மிக மிக உன்னதமான மூளையும் மனிதனைச் சுற்றியிருந்த மகத்தான இயற்கைச் சுழல்களும் அவனை இயல்பாகவே தனக்குள்ளேயே மூழ்குகின்ற சிந்தனையாளனாகவே மாற்றின. மூளையின் மகத்தான சக்தி எதற்கும் ஒப்பிடமுடியாதது. ஒவ்வொரு நாட்டினதும் வளர்ச்சி அந்நாட்டிலுள்ள அனைவரினதும் மூளையின் சக்தியால்தான் தீர்மானிக்கப்படுகிறது. அது உலகப் பொருள்களை ஆராய்ச் செய்கிறது. இதுவே மகத்தான செயல்களுக்கும் நல்ல விளைவுகளுக்கும் காரணமாக விளங்குகிறது. இதுவே தேசிய அறிவை வளர்க்க உதவுகிறது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: பல்வேறு விதமான வேலைகளையும் பொறுப்புகளையும் ஏற்பீர்கள். இனிக் கவலை வேண்டாம். புதிய வழிமுறைகளில் நூதனமாக காரியம் சாதிக்க பொறுமையாக அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள்.



**இடபம்**: உயர் படிப்புக்களை நீங்கள் விரும்பும் துறையில் தொடரலாம். கலை மற்றும் நுண் கலைத் துறைகளைத் தேர்ந்தெடுத்தால் சிறந்து விளங்கலாம். சற்று வருத்தமான மனநிலை இருக்கும். பொறுமை தேவை.



**மிதுனம்**: எதிர்கால நோக்கங்களை கருத்தில் கொண்டு உழைக்கத் தயாராகி விடுவீர்கள். உங்களின் பொறுமையான செயற்பாடுகள் நல்ல பலனை அளிக்கும். திடீர் கலகங்களை சந்திக்க வேண்டியிருக்கும். பேச்சில் மிகுந்த எச்சரிக்கை தேவை.



**கடகம்**: குடும்பப் பிரச்சினைகளை மனதில் கொண்டு வியாபாரம், அலுவலக இடங்களில் அதை வெளிப்படுத்த வேண்டாம். பெரிய மனிதர்களின் தொடர்புகளால் வியாபாரத்தில் முதலீடுகள் செய்து மேன்மை பெறலாம். பொறுமை தேவை.



**சிங்கம்**: உங்களது பிள்ளைகளுக்கு நல்ல வேலை கிடைக்கும். நீங்களும் அரசின் உதவிகள் கிடைக் கப் பெறுவீர்கள். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பிரச்சினைகளைப் பேசித்தீர்த்துக் கொள்வது நல்லது.



**கன்னி**: பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள நேரும். சொத்துப் பிரச்சினைகள் இருந்தால் ஆரம்பத்தில் முன்கூட்டியே சரி செய்துவிடுங்கள். உங்களுடைய குணம் உங்களைப் பிரபலமடையச் செய்யும்.



**துலாம்**: பிரயாணங்களில் முழு எச்சரிக்கை தேவை. குழந்தைகளின் பெற்றோர் அடிக்கடி சந்தித்து குடும்பச் சூழ்நிலை குறித்துச் சொல்லி, அவர்கள் தவறான வழிகளில் செல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.



**விருச்சிகம்**: திறமைகள் வெளிப்படும். உறவினர்களின் அர்த்தமற்ற எதிர்ப்புகளால் பட்ட கஷ்டங்கள் நீங்கும். நீங்கள் விரும்பியபடி வாழ்க்கைத் துணை அமையும். ஸ்திர சொத்துக்களை வாங்குவதிலும் விற்பதிலும் பிரச்சினைகள் வரக்கூடும்.



**தனுசு**: நல்ல தன்னம்பிக்கையுடன் திடமான மனதும் இருக்கும். யோகா, தியானங்களில் மனதைச் செலுத்துவது நல்ல பலன் தரும். மிகுந்த பலமுள்ளவராகவும் அனைத்துப் போட்டிகளிலும் ஜெயிப்பவராகவும் இருப்பீர்கள்.



**மகரம்**: செலவுகளைக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய நேரம் இது. சகோதர சகோதரிகள் உதவுவார்கள். கூட்டுக் குடும்பமாக மகிழ்ச்சியாக இருக்கலாம். தங்களைப் பிரிந்து படிப்புக்காக வெளியில் செல்ல வேண்டி இருக்கும்.



**கும்பம்**: மூத்த சகோதரர்களின் உதவியுடன் அனைத்து பிரச்சினைகளும் தீரும். அதிகாரிகள் சற்றே எதிர்பார்ப்புடன் காணப்படுவார்கள். அலுவலக வேலைகளில் முதன்மையானவர் என்று பெயரெடுக்கலாம்.



**மீனம்**: எந்த அலுவலக வழக்கு விவகாரங்களிலும் ஈடுபடாதீர்கள். பிரச்சினை வரலாம். அலுவலக அலைச்சல் அதிகமாகும். ஆய்வுகளுக்கு தங்களின் உதவி தேவைப்படும். தங்களின் திறமை மேலோங்கி நற்பெயர் பெறுவீர்கள்.

## நாளை

**ஐப்பசி-22 சனிக்கிழமை | 08.11.2014**

திதி: துதியை பி.இ.03.12 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.04.08 வரை

சுபநேரம்:03.05-04.35 வரை
இராகுகாலம்:09.05-10.35 வரை

# தனு, ஜனா அசத்தலால் மானிப்பாய் இந்து சம்பியன்

## 19 வயது ஆண்கள் பாடசாலை உதைபந்தாட்டத்தில்





தனுசன் ஜனார்த்தன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி 19 வயதுப் பிரிவில் பாடசாலை மட்ட மாவட்டச் சம்பியன் ஆனது மானிப்பாய் இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட அணி.

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய ஆண்கள் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் காலிறுதி அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து இடம்பெற்றன.

இறுதியாட்டத்தில் யாழ். மத்தியகல்லூரிஅணியைஎதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. பலம் பெருத்திய இரண்டு அணிகளும்இறுதியாட்டத்தில்மோதிக் கொண்டதால் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக இருந்தது. இரண்டு அணியினரும் கோல் அடிப்பதற்குக் கடுமையாக மோதினர்.

ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துவின் வீரன் தனுசன் தனக்கு கிடைந்த பந்தினை இலாவகமாக ஆடி கோலாக மாற்றினார். பதிலுக்கு யாழ். மத்திய கல்லூரி அணியினர் எதிர் அணியின் கோல் பரப்பை முற்றுகையிட்டுத் தாக்கினர். ஆனால் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. கிடைத்த ஓரிரு சந்தர்ப்பங்களையும் தவறவிட்டனர்.

ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துவின் மைந்தன் ஜனார்த்தனன் அணியின் இரண்டாவது கோலினை அடித்தார். இடைவேளையின் பின்னர் மானிப்பாய் இந்து அதிகளவு தற்காப்பு ஆட்டத்தில் இறங்கியது. மத்திய கல்லூரி வீரர்கள் முன்னேறி விளையாடிய போதும் காப்பரண்களைத் தாண்டி முன்னேறுவது சிரமமாக இருந்தது. அதையும் தாண்டி 32 ஆவது நிமிடத்தில் மத்தியின் மைந்தன் மிதுன் தனது அணியின் முதல் கோலினை அடித்தார். அதுவே இறுதி கோலாகவும் இருந்தது. ஆட்ட நேரமுடிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில்வென்றுசம்பியன்ஆனாது. சிறந்த முன்கள வீரனாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தனுசன் தெரிவானார். சிறந்த பின்கள வீரானாக யாழ். மத்திய கல்லூரியின் டினோசன் தெரிவானார். தொடரின் சிறந்த கோல் காப்பாளரக செ‌ன். பற்றிக்ஸ் கல்லூரியின் பிருந்தாபன் தெரிவானார்.

**பற்றிக்ஸ்'க்கு மூன்றாமிடம்**

தொடரின் மூன்றாம் இடத்தை செ‌ன். பற்றிக்ஸ் கல்லூரி அணி பெற்றது. பற்றிக்ஸ் கல்லூரி நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்தாடியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்தி 'சேம் சைட் கோல்' அடித்து கோல் கணக்கை ஆரம்பித்தது. பற்றிக்ஸ் வீரன் சுபோசன் அடித்த பந்தை நெல்லியடி மத்தி வீரன் தடுக்க முற்பட்டபோது காலில் பட்ட பந்து கோல் கம்பத்தினுள் சீறியது. பற்றிக்ஸ் வீரன் யக்சன் கிடைந்த சந்தர்ப்பத்தினை நன்கு பயன்படுத்தி தனது அணியின் இரண்டாவது கோலினை அடித்தார். இடைவேளைக்குப் பின்னர் ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் பற்றிக்ஸ் வீரன் எசல்ராஜ் அணியின் 3ஆவது கோலை அடித்து வெற்றியை உறுதிப்படுத்தினார்.

**அரையிறுதி ஆட்டங்கள்**

அரையிறுதியாட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.

செ‌ன். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான அரையிறுதியாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. பின்னர் வழங்கப்பட்ட சமநிலை தகர்ப்பு உதைகளில் மத்திய கல்லூரி அணி கூடுதல் கோல்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இரு அணிகளுமே பலம் மிக்கவை என்பதனால் ஆட்டம் விறுவிறுப்பானதாக இருந்தது. மத்திய கல்லூரி வீரன் சயந்தன் முதல் கோலினை அடித்தார். இடைவேளை வரை வேறு கோல்கள் அடிக்கப்படவில்லை. மத்திய கல்லூரி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகிய போதும் கோல்கள் ஏதும் அடிக்கப்படுவதாக இல்லை. ஆட்டம் முடிவதற்கு 2 நிமிடங்களே இருக்கையில் பற்றிக்ஸ் வீரன் எசல்ராஜ் அபாரமாக ஆடி கோல் அடித்தார். இதனால் மத்தியின் வெற்றிக் கனவு தகர்ந்தது. வெற்றி தோல்விக்காக 11 சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அவற்றில் 9 வாய்ப்புகளை கோல்களாக்கி மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. பற்றிக்ஸால் 7 வாய்ப்புகளையே கோல்களாக்க முடிந்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான இரண்டாவது அரையிறுதியாட்டதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் கடுமையாக மோதிக் கொண்டனர் என்றாலும் இரண்டாவது பாதியில் அத்தனை விறுவிறுப்பு இருக்கவில்லை. முதல் பாதியிலேயே மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரன் தனுன் வெற்றிக் கோலினை அடித்தார். ஆட்டம் முடியும் வரை பதில் கோலை நெல்லியடி மத்தியால் அடிக்க முடியவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் உப்புச்சப்பற்ற மோதலாக இருந்தது. முடிவில் மானிப்பாய் இந்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

**காலிறுதி ஆட்டங்கள்**

முன்னதாக காலிறுதியாட்டங்கள் இடம்பெற்றன. அவற்றில் செ‌ன்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி அணிகள் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது காலிறுதியாட்டத்தில் செ‌ன். பற்றிக்ஸ் கல்லூரி அணியைஎதிர்த்து இளவாலை செ‌ன். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளுமே பலம் பெருத்தியவை. ஆட்டம் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இருந்தது. ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் செ‌ன்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் எசல்ராஜும் 53ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் வீரன் கனீஸ்ரனும் கோலக்களை அடித்தனர். ஆட்டம் சமநிலைப் பட்டதால் தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. செ‌ன். பற்றிக்ஸ் அணி நான்கு சந்தர்ப்பங்களையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள ஹென்றிஸ் இரு வாய்ப்புகளைத் தவறவிட்டது.

மற்றொரு காலிறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிஅடுத்தடுத்து கோல்களை அடித்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணியை இலகுவாக வீழ்த்தியது. ஆட்டம் ஆரம்பித்த உடனேயே மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தியது. விதுஷன் 2ஆவது நிமிடத்தில் கோலடித்தார். தனுஷண் 21 நிடமிடத்தில் பந்தைக் கம்பங்களுக்குள் தள்ளினார். மீண்டும் யனார்த்தனன் 31 ஆவது நிமிடத்திலும் சஜீவன் 40 ஆவது நிமிடத்திலும் அகிலன் 46 ஆவது நிமிடத்திலும் தனுஷன் 59 ஆவது நிமிடத்திலும் மாறி மாறி கோலடித்தனர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கோல் எதனையும் அடிக்கவில்லை.

ஏனைய இரு காலிறுதியாட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றன.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் வசவிளான் மத்திய மகா வித்தியலாய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கும் மகாஜனக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(உ-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்.இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்கள் கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளன.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து செ‌ன். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதும்.

மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் இரண்டவது ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து செ‌ன். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (உ-23)

## தாச்சிப் போட்டிக்கு அங்கீகாரம் வழங்கியது மாகாண சபை

யாழ்ப்பாணம், நவ.7

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான தாச்சிக்கு வடக்கு மாகாண சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் முதன் முறையாக தாச்சிப் போட்டியும் சேர்க்கப்பட்டுள்ளது.

தாச்சி விளையாட்டை அங்கீகரித்து அதனை வளர்க்க வேண்டும் என்று பிரதேச செயலக ரீதியாக மாவட்ட, மாகாண ரீதியாக அதனை விளையாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் வடமாகாண சபையிடம் வலியுறுத்தியிருந்தது.

சபை பதவியேற்றதும் கல்வி, விளையாட்டு அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் விளையாட்டு இணைப்பாளர் இ.ஆனோல்ட் ஆகியோரைச் சந்தித்த சங்க உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து முதற்கட்டமாக வடமாகாண அமைச்சுக்களின் கீழ் வரும் திணைக்களங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டியில் முதன்முதலாக தாச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதல்முறையாக வடக்கு மாகாண அரசிலே நடைபெற இருக்கும் இத் தாச்சிப்போட்டியிலே மாகாண சபை உத்தியோகத்தர்களின் 12 கழகங்கள் மோதவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-288)

## ஆளுநர்கிண்ண உதைபந்தாட்டம்

கரணவாய், நவ.7

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தெரிவுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் வடமராட்சி லீக்கிற்கு உட்பட்ட சுமார் 24 அணிகள் பங்குபற்றவுள்ளன.

இந்தப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதியும், இறுதியாட்டங்கள் 12 ஆம் திகதியும்இடம்பெறவுள்ளன.

சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியில்பங்கு பற்றும் அணிகளை குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளார். (த-108)

## கொழும்பு செல்கிறது ஹென்றியரசர் அணி

யாழ்ப்பாணம், நவ. 7

கொழும்பு செ‌ன். ஜோசப் கல்லூரி வருடாந்தம் நடத்தும் 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. மேற்படி போட்டியில் பங்கு பற்றுவதற்காக இளவாலை செ‌ன். ஹென்றியரசர் கல்லூரி அணி இன்று கொழும்பு பயணமாகின்றது. (உ-23)

# அணியின் வெற்றியே கோஹ்லியின் குறி




இந்திய அணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பது மட்டுமே எனது குறிக்கோள் என இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லி கூறியுள்ளார்.
இவர் நேற்று முன் தினம் தனது 26ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இந்த பிறந்த நாள் விழாவில் அணியின் சக வீரர்கள் கலந்து கொண்டனர்.
2008ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்த கோஹ்லி இதுவரை 142 ஒரு நாள் போட்டிகளில் 20 சதங்கள் உள்பட 5901 ஓட்டங்களும், 29 டெஸ்டில் 6 சதத்துடன் 1855 ஓட்டங்களும், ரி20 கிரிக்கெட்டில் 28 ஆட்டங்களில் 972 ஓட்டங்களும் குவித்துள்ளார்.
மேலும் இந்த முறை தனது பிறந்த நாளை விராட் கோஹ்லி பொறுப்புடன் ஹோட்டல் அறையில் கேக் வெட்டிக் கொண்டாடினார்.
பிறந்தநாளையொட்டி இணையத் தளம் ஒன்றுக்கு விராட் கோஹ்லி அளித்துள்ள பேட்டியில், எனது தேசத்திற்காக ஏதாவது சிறப்புச் சேர்க்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம்.
நான் எங்கு இருக்கிறேன், என்ன சாதிக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு சராசரி கிரிக்கெட் வீரராக இருக்க விரும்பவில்லை. இந்திய அணியில் இவரும் விளையாடினார் என்று சாதாரணமாக நினைவு கூரப்படுவதைநான்விரும்பவில்லை. தொடர்ந்து ஓட்டங்கள் குவிப்பதால் மெத்தனமாக இருக்கமாட்டேன். எனது வாழ்க்கையில் மெத்தனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அணியை வெற்றி பெற வைக்கவேண்டும் என்பது தான் எனது ஒரே குறிக்கோள். அந்த உணர்வுக்குத்தான் நான் ஆட்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார். (த)

## அண்டர்சன் இல்லை

இலங்கைக்கு எதிரான தொடரில் இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அண்டர்சன் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பங்கேற்கமாட்டார் என நேற்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது. இலங்கை அணியுடனான 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்கிறது. இதில் முதல் ஒருநாள் போட்டி வரும் 26 ஆம் திகதி கொழும்பில் தொடங்குகின்றது. அண்டர்சன் இங்கிலாந்து அணியின் முக்கிய வீரர் என்பதால் அவர் இல்லாதமை இங்கிலாந்து அணிக்கு பின்னடைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அண்டர்சன் இதுவரை ஒருநாள் போட்டிகளில் 400 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சகீரின் கிரிக்கெட் வாழ்வுக்கும் ஆப்பு வைக்க முயன்ற சப்பல்

சப்பல், எனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்தார் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் குற்றம் சாட்டியுள்ளார்.
சச்சின் தனது சுயசரிதையான 'பிளேயிங் இட் மை வே' என்ற புத்தகத்தில் 2007 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக டிராவிட்டை அணித் தலைவர் பதவியிலிருந்து நீக்க கிரேக் சப்பல் முயற்சித்தார் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ளார்.
இந்நிலையில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் கூறுகையில், சப்பல் பயிற்சியாளராக இருந்த காலம் இந்திய கிரிக்கெட்டின் மோசமான இருண்ட காலம். அவர் எனது கிரிக்கெட் வாழ்க்கையை முடிக்க நினைத்தார். சப்பல் மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் மனப்பான்மை கொண்டவர். அவர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டதும் என்னைப் பார்த்து, நான் பயிற்சியாளராக இருக்கும் வரை இந்திய அணிக்காக நீங்கள் விளையாட முடியாது என்றார்.
நான் அணிக்குத் திரும்புவதை அவர் 3 முதல் 4 மாதங்கள் வரை தள்ளிப்போட்டார். இருப்பினும் அவரது முயற்சியை முறியடித்து 2006ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் அணிக்குத் திரும்பினேன் என்று கூறியுள்ளார். (த)



சகீர்கான்

## ஆஸி. மீது தென்னாபிரிக்கா பெரு வெற்றி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 20/20 கிரிக்கெட் போட்டியில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது தென்னாபிரிக்கா.
அடிலெய்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியில் தலைவர் ஆரோன் பிஞ்ச் 14, கமரூன் வைட் 24, பென் டங்க் 2, ரியார்டன் 4 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். அதையடுத்து வாட்சனுடன் இணைந்தார் பக்னர். அந்த ஜோடி அதிரடியாக ஆட ஆஸ்திரேலியாவின் ஓட்டம் உயர்ந்தது. வாட்சன் 47 ஓட்டங்களில் (36 பந்துகள்) ஆட்டமிழந்தார். பக்னர் ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் 41 ஓட்டங்கள் சேர்க்க, 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 144 ஓட்டங்கள் குவித்தது ஆஸ்திரேலியா.
பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணியில் ஹென்ரிக்ஸ் டக் அவுட்டாக, டி கொக்குடன் இணைந்தார் ரொசாவ். அதிரடியாக ஆடிய ரொசாவ் 32 பந்துகளில் அரைச்சத மடிக்க, 11.3 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. ரொசாவ் 50 பந்துகளில் 78 ஓட்டங்கள் குவித்து வெளியேற, டி கொக் 46 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார். தென்னாபிரிக்கா 19 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது. டுமினி 6, மில்லர் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (த)






## புவனேஷ்வர் குமாருக்கு சர்வதேச மக்கள் விருது

எல்.ஜி சர்வதேச மக்கள் விருதை இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் வென்றுள்ளார். 2014ஆம் ஆண்டுக்கான எல்.ஜி சர்வதேச மக்கள் விருதுப் பட்டியலில் 5 வீரர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.
இங்கிலாந்து மகளிர் அணியின் அணித்தலைவி சார்லோட் எட்வர்ட்ஸ், அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன், இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் ஆகியோர் அதில் இடம் பிடித்திருந்தனர்.
இதற்கான வாக்களிப்பு கடந்த மாதம் 30ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் இங்கிலாந்துத் தொடரில் அசத்திய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் அதிக வாக்குகளைப் பெற்று மக்கள் விருதினை வென்றார்.
இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின், தற்போதைய அணித்தலைவர் டோனி ஆகியோர்களைத் தொடர்ந்து 3ஆவது இந்தியராக புவனேஷ்வர் குமார் இந்த விருதை வென்றுள்ளார். (த)

## தொடர்ச்சிகள்

### ஆளுநரால்

உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன், 'நெல்சிப்' திட்டத்தில் 100 மில்லியன் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

யாழ்.மாவட்டத்துக்கான நெல்சிப் திட்டப் பொறியியலாளராக ஸ்ரெஜிலதரன் என்பவர் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது தந்தை மற்றும் இவரது நண்பராக வுள்ள இன்னொரு பொறியியலாளரான தீபரூப னும் இணைந்து ஸ்கார்லெட் என்ற பெயரில் ஒப்பந்த நிறுவனத்தை நடத்திவருகின்றனர்.

வவுனியா மாவட்ட சிங்கள பிரதேச சபைக்கான, 'நெல்சிப்' திட்ட வேலைக்கான ஒப்பந்த கோர லின் போது குறித்த நிறுவனமும் விண்ணப் பித்துள்ளது.

இதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைமைப் பொறியியலாளராக ஸ்ரெஜிலத ரனே இருந்துள்ளார். பெறுகை முறைமை உபவிதிகளின் கீழ், ஒப்பந்தத்துக்கு விண்ணப் பிப்பவர்களது உறவினர்கள் மதிப்பீட்டுக் குழுவில் இருக்க முடியாது.

பணி இடை நிறுத்தம்

இதனையும் மீறி ஸ்ரெஜிலதரன் இருந்தமை தற்போது முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டது. அதற்க மைய குறித்த பொறியியலாளர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

குறித்த பொறியியலாளரின் தந்தையின் பெய ரில் இயங்கிய நிறுவனம், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேச சபைகளிலும், உப ஒப்பந் தத்தை எடுத்து மேற்கொண்டுள்ளது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்து டன் ஒப்பந்தங்களின் போது, சந்தை மதிப்பீட்டுப் பெறுமதியைவிட அதிகளவிலான பெறுமதிக்கு கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட் டுள்ளது என்ற குற்றச்சாட்டும் முன்வைக் கப்பட்டுள்ளது.

விசாரணை நிறுத்தம்

இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியால், இருவர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட் டிருந்தது. குறித்த விசாரணைக்குழுவின் பணிகள் முடிவடைவதற்கு முன்பாகவே அந்தக் குழு இடைநிறுத்தப்பட்டு ள்ளது.

புதிய விசாரணைக்குழு உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் தலைமையில் அமைக்கப் படவுள்ளது. அத்துடன் உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் முதலமைச்சரே இதனை மேற் பார்வை செய்யவுள்ளார். உலக வங்கியினூ டாக நெல்சிப் திட்டத்துக்கு நிதி வழங்கப்படுகின் றது. இந்த நிதி பொருளாதார அபிவிருத்தி அமைச் சினூடாகவே விடுவிக்கப்படுகின்றது. எனவே இந்த விசாரணைக் குழுவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சை சேர்ந்த ஒருவரையும் முதலமைச்சரே நியமிப்பார் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியால், முதல மைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-5)

### வடக்கின்

கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நிவாரண சேகரிப்பு நடவடிக்கைகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரணப் பொருள்களை இன்று அல்லது நாளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கு வதற்கு வடக்கு மாகாண சபை முன்னர் திட்டமிட்டிருந்தது.

இருப்பினும் தற்போது அதனை அடுத்த வார இறுதியில் வழங்க முடிவு செய்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகளவிலான நிவாரணப் பொருள்கள் வந்து சேர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அவற்றை தற்போது கையளிக்க வேண்டிய தில்லை எனவும், சிறிது நாள்களின் பின்னர் அந்த மக்களுக்கு அவை தேவைப்படும் போது வழங்கலாம் என்றும் முடிவு செய்யப்பட் டுள்ளது. மேலும் தற்போது அங்கு நிவாரண நடவடிக்கைகள் அனைத்தையும் இராணுவத் தினரே முன்னெடுத்து வருகின்றனர். இதனால் தற்போது அங்கு நிவாரணத்தை வழங்காமல் எதிர்வரும் 16 ஆம் திகதியளவில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# இந்தியா அபார வெற்றி

சர்வதேச ஒரு நாள் போட்டியின் நடப்புச் சம்பியனாக இந்திய அணியும் சர்வதேச 20/20 போட்டியின் நடப்புச் சம்பியனாக இலங்கை அணியும் இருக்கின்ற நிலையில் சம்பியன் களுக்கிடையிலான தொடர் என வர்ணிக்கப் படும் இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடை யிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற் றைய தினம் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் மட்டுமே வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டில்சான் மற்றும் பெரேரா தொடக்கத்திலேயே தடுமாறத் தொடங்கினர். முதல் ஓவர் இறுதியில் அணியின் ஓட்டம் 4 ஆக இருந்த வேளையில் இலங்கை அணி யின் முதல் இலக்கை குசெல்பெரேரா எந்தவிதமான ஓட்டத்தையும் பெறாது (6பந்து களில்) யாதேவ்வின் பந்தில் ஆட்டம் இழந்தார். சற்று அதிரடியாக துடுப்பெடுத்தா டிய டில்சான் 10.3 பந்துப் பரிமாற்றதில் அணியின் ஓட்டம் 55 ஆக இருந்தபோது 7 நான்குகள் அடங்கலாக 35(30) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜெயவர்த்ன 4(11) ஓட்டங்களை மாத்திரமே பெற்று அஸ்வினின் சுழலில் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து வந்த மத்தியூஸ் சங்காவுடன் இணைந்து 4வது இலக்குக்கான இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பெற அணியின் ஓட்டம் 32.2 பந்துப் பரிமாற்றத்தில் 154ஆக இருந்தபோது 61(86) ஓட்டங்களுடன் சங்கா யாதவ்வின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து களமிறங்கிய பிரசன்னா 13(14) ஓட்டங்களுடனும் பிரிஜஞ்யன 1(2) ஓட்டத்துடனும் திஸரபெரேரா 10(11) ஓட்டங்களுடனும் றன்திவ் 10 (13) ஓட்டங்க ளுடனும் ஏமாற்றினர். இறுதிவரை ஆட்டமிழக் காது சிறப்பாக செயற்பட்ட மத்தியூஸ் 92(101) ஓட்டங்க ளையும் பிரசாத் 30(28) ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 18 ஓட் டங்கள் கிடைக்கப்பெற இலங்கையணி 50 பந் துப் பரி மாற்மாற்றங்கள் நிறைவில் 8 இலக்கை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக அக்சர் பட் டேல் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 39 ஓட் டங்க ளுக்கு 2 இலக்கையும் அஸ்வின் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 49 ஓட்டங்களுக்கு 2 இலக்கையும் யாதவ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 54 ஓட்டங்களுக்கு 2 இலக்கையும் ஜடேயா 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 64 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர்.

275 ஓட்டங்களை பெற்றால் வெற்றி எனும் இலக்கை விரட்டுவதற்காக பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய ரஹானே மற்றும் தவான் ஆரம்பத்தி லிருந்து இந்திய அணிக்கு சிறந்த தொடக்கத்தை கொடுக்கத் தவறினர். 6.3 பந்துப்பரிமாற்றங்களில் அணியின் ஓட்டம் 18 ஆக இருந்தபோது முதல் இலக்காக ரஹானே 8(19) பிரசாத்தின் பந்தில் வெளியேறி னார். தொடர்ந்து வந்த ராயுடு தவா னுடன் இணைந்து சிறப்பாக ஆட இந்தியஅணி வலுவான நிலைக்குச்சென்றது. 26.4 பந்துப் பரிமாற்றங்களில் அணியின்ஓட்டம்140ஆகஇருந்த போது தவான் 79(80) ஓட்டங்ளுடன் வெளியே றினார். கோஹ்லி49(44) அதிரடியாகஆடிஇந்தியா வின் வெற்றியை உறுதிப்படுத்த இறுதிவரை ஆட்டமிழக்காது சிறப்பாக ஆடிய ராயுடு121(118) சதம்கடந்து 44வது பந்துப்பரிமாற்றங்களில் வெற் றிக்கு வித்திட்டார். பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரசன்னா 7.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 53 ஓட்டங்ளுக்கு 3 இலக்கையும் பிரசாத் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 51 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர். 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் 2:0 என இந்தியா முன்னிலை பெற்றுள்ளது

(ரி)

**காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கம்**
**நீர்வேலி**

பதிவு இல J/1017

**விற்பனை நிலையத் திறப்பு விழா**

காலம் : 07.11.2014 நண்பகல் 12.00 மணி
பிரதம விருந்தினர் : திரு. V.K. அருந்தவநாதன் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை பணிப்பாளர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிர்வாகம்**

(53748)(10.6)

**காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கம், நீர்வேலி.**

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலட்சுமி தில்லைநாயகம்



(வேலணை-சிற்பனை)

வட்டாரம் 06, வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வட்டாரம் 07, வேலணை மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி மகாலட்சுமி தில்லைநாயகம் நேற்று (06.11. 2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(க.திருச்செல்வம்- 021 222 1561)

(53849)
(10.6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பு

உசனைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பு நேற்று (06.11.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும், செங்க மலத்தின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், துரைராசா மற்றும் குணமணி ஆகியோரின் தாயும், புவனேஸ்வரி, சரஸ் வதி காலஞ்சென்ற இளையதம்பி ஆகியோரின் மாமியும், மனோ கரன் செல்வரஞ்சினி (சுவிஸ்), இராசேஸ்வரன் ரஜனி (லண்டன்), திலகேஸ்வரன் (அம்புலன்ஸ் சாரதி, கிளிநொச்சி வைத்தியசாலை), நவநீதவல்லி (மேற்பார்வையாளர் வைத்தியசாலை, பளை), கிருபா கரன் நந்தினி (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் சகிலா (கனடா), கேதீஸ் வரன் சசிகலா (பிரான்ஸ்), மதுராகரன் (ஆசிரியர், கிளிநொச்சி இந்துக் கல்லூரி), கோமதி (விடத்தற் பளை கமலாசனி வித்தியாலயம்), பூலோகநாதன் தர்சினி, சேகர் குணசீத்தா, குணதாசன் நித்திய கலா, விமலேஸ்வரன் குணமாலா, சிவராசா குணறீற்றா, குணசீலன், றஞ்சி (லண்டன்) ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள்- குணமணி,
பேரன்- மதுராகரன்.

உசன், மிருசுவில். (C47296)(10.6)

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை யோகானந்தன்



செம்மணிவீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு சாவகச் சேரியை நீண்டகால வதிவிட மாகவும், காந்திகிராமம் கோணா வில் கிளிநொச்சியை தற் போதைய வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை யோகா னந்தன் 03.11.2014 அன்று கால மானார்.

அன்னார் காசிப்பிள்ளை-செல்லம் தம்பதியரின் இளைய புத்திரனும், இராசமணி மற்றும் யோகலட்சுமியின் அன்புக் கண வரும், காலஞ்சென்ற சிவபால ரட்ணம் (ஓய்வுபெற்ற தபால திபர்), காலஞ்சென்ற சிவபால சுந்தரலிங்கம் (வழக்கறிஞர், ஜே.பி.யு.எம், கிளிநொச்சி), மகேஸ்வர மூர்த்தி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழகமலர், கோமளா தேவி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியேரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லதில் நடைபெற்று, ஊற்றுப்புலம் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கிளிநொச்சி. (47922)(10)

## இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் கூட்டம்

போரதீவுப்பற்று, நவ.7

இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடகீழ் பருவ பெயர்ச்சி மழை ஆரம்பித்து விட்டதனால், போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் எதிர்வரும் டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பெரும் வெள்ள இடர் ஏற்படுமாக இருந்தால், அவற்றுக்குத் தேவையான உரிய முன்னாயத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும், போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் வருடாந்தம் மழை காலங்களில் இலகுவாக வெள்ளத்தில் மூழ்கும் வேத்துச்சேனை, பட்டாபுரம் ஆகிய இரு கிராமங்களும் இந்த வருடமும் வெள்ள இடரினால் பாதிப்புறும் நிலையில் பொது மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுதல், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பான தங்குமிடவசதி, உணவு, முதலுதவி, மருத்துவ வசதிகள் போன்ற பல விடயங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை இராணுவத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரிக்கேடியர் கே.எச். பி.பி.பெர்ணாந்து, வெல்லா வெளிபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எச்.சி.பி. வெலஹெதர, மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ உதவி யாளர் த.துஷியந்தன் மற்றும் ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொலிஸ், விசேட அதிரடிப்படை, இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-10)

# ஜேர்மனின் நியூரம்பேர்க் - கல்முனை மாநகர சபைகள் இடையே உடன்பாடு

கல்முனை, நவ.7

கல்முனைப் பிராந்தியத்தின் நவீன அபிவிருத்தித் திட்டங்களை இலக்காகக் கொண்டு கல்முனை மாநகர சபையை ஜேர்மன் நியூரம்பேர்க் மாநகர சபையுடன்இணைக்கும்இரட்டை நகர புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை நியுரம்பேர்க் நகரில் இடம்பெற்றுள்ளது. இதில் நியுரம்பேர்க் மாநகர முதல்வர் டாக்டர் கிளமன்ஸ் ஜிசெல் மற்றும் கல்முனை மாநகர முதல்வர் எம்.நிஸாம் காரியப்பர் ஆகியோர் கைச்சாத்திட்டு ஆவணங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

கல்முனை மாநகர பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வர்த்தகம், கல்வி, கலாசாரம், சமூக, பொருளாதார மற்றும் விளையாட்டுத் துறைகளின் முன்னேற்றம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த இரட்டை நகர இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு ஜேர்மன் பயணமாகியிருந்தார்.

கல்முனை நகரமானது ஒரு வெளிநாட்டு நகரம் ஒ்ன்றுடன் இரட்டை நகர இணைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டமை கல்முனையின் வரலாற்றில் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

நியூரம்பேர்க் நகரமானது ஜேர்மனியில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சமூக, பொருளாதார துறைகளில் தன்னிறைவுகண்ட, அனைத்து வளங்களும் நிறைந்த ஒரு விசாலமான- செல்வந்த நகரம் என்பதும் இங்கு சுட்டிக் காட்டத் தக்கதாகும். இந்த இரட்டை நகர ஒப்பந்தத்தின் மூலம் கல்முனை மாநகர பிரதேசங்களின் உட்கட்டமைப்பு, வர்த்தகம், கல்வி, கலாசாரம், சமூக, பொருளாதார மற்றும் விளையாட்டுத் துறைகளின் நவீன அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி, வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு ஜேர்மன் நாட்டின் நியுரம்பேர்க் மாநகர சபை முன்வந்துள்ளது என்று கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த இரட்டை நகர இணைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பங்களிப்புச்செய்தகிழக்குமாகாண சபையின் மு.கா. குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீலுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் முதல்வர் குறிப் பிட்டார். (த-31-10)



அதிகஷ்டப் பிரதேசத்தில் உள்ள மட்டக்களப்பு நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயத்தின் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதி அமைச்சர் பிரபா கணேசன் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார். (த-10)

## வீதி விஸ்தரிப்பு

பழைய மட்டக்களப்பு -கல்முனை வீதியின் வீதி விஸ்தரிப்பு பணிகளின் முதற்கட்டமாக கடந்த திங்கட்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் பொறியியலாளர் மற்றும் அதிகாரிகளினால் அளவையிடும் பணிகள்ஆரப்பிக்கப்பட்டுள்ளன.

பழைய மட்டக்களப்பு -கல்முனை- காத்தான்குடி ஊர் வீதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.எஸ். எம்.சியாட் உட்பட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் ,தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த வீதி இரண்டு வழி போக்குவரத்து செய்யக் கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளதோடு, மேலதிகமாக சைக்கிளில் மற்றும் பாதசாரிகள் நடந்தும் செல்லக்கூடிய வகையில் ஒரு வழியும், வடிகானும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## சிறைக் கைதிகளுக்கு கைத்தொழில் பயிற்சி

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையிலுள்ள சிறைக்கைதிகளுக்கு கடந்த திங்கட் கிழமை பிரம்புக் கைத்தொழில் பயிற்சி ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது.

பாரம்பரியக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலைகள் பேரவையின் அனுசரணையுடன் சிறைச்சாலைகள்புனரமைப்புதிணைக்களத்தால், இந்தத் தொழிற் பயிற்சி ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்காக 131 கைதிகள் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து தெரிவாகியுள்ளதுடன், முதற்கட்டமாக 15 கைதிகளுக்கு இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது, ஏற்கெனவே தொழிற் பயிற்சியை முடித்த 02 கைதிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் புனரமைப்பு ஆணையாளர் டி.ஜெயசிங்க, மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.வி.ஐ.பிரியங்க, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.தவராஜா, மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம், சிறைச்சாலைகள் நலன்புரி அமைப்பின் தலைவர் மருத்துவர் கே.கருணாகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த சிறைச்சாலைகள் புனரமைப்பு ஆணையாளர் டி.ஜெயசிங்க, கைதிகள் சிறைச்சாலையிலிருந்து வெளியேறும்போது வாழ்வாதாரத்துடன் வெளியேற வேண்டும் என்பதற்காக தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை சிறந்தமுறையில் பயன்படுத்தி தொழிற் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார். (த-10)

## வந்தாறுமூலையில் இடர் ஒத்திகை

வந்தாறுமூலை, நவ.7

இடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வந்தாறுமூலை மேற்கு கிராமத்தில் திங்கட்கிழமை கிராம மட்ட இடர் ஒத்திகை நடைபெற்றது.

மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து 'ஹன்டிகப் இன்டர்நஷனல்' என்ற அரச சார்பற்ற அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. வந்தாறுமூலை கணேசா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த இடர் ஒத்திகை நிகழ்வில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 850 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டனர்.

இதில் இலங்கை இராணுவ அதிகாரிகள், மட்டக்களப்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், கிராம சேவையாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். இதன்போது இடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுதல், முதலுதவி மற்றும் இடைத்தங்கல் முகாம்களை எவ்வாறு மேற்கொள்வது என்பன தொடர்பான பல விளக்கங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

சர்வதேச இடர் குறைப்பு தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)


## மரண அறிவித்தல்

### திருமதி லெட்சுமி சரவணமுத்து



யாழ். அனலைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லெட்சுமி சரவணமுத்து 03-11-2014 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சிவகாமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்து (கௌரி பேக்கறி, அனலைதீவு) அவர்களின் அன்பு மனைவியும், விவேகானந்தன் (ஜேர்மனி), விஜயாம்பாள் (கனடா), காலஞ் சென்ற யோகராசா, யோகராணி(ஜேர்மனி), குகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தர்ம லிங்கம், அருணாச்சலம் மற்றும் நடராஜா(கனடா), உமையவதி (கனடா), தயாபரராஜா(ஜேர்மனி), பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி (ஜேர்மனி), கோபாலு(கனடா), பத்மநாதன்(ஜேர்மனி), ஞானேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் (கந்தையா), அம்பிகா மற்றும் புவனேஸ்வரி, சோமசேகரம்பிள்ளை, விமலேஸ்வரி, கைலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செந்தூரன், மயூரன், மதுரா, பிரதீப், திவாகர், சுகுமாரி, தரணீஸ்வரன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

| | | | | |
|---|---|---|---|---|
| கோபாலு | கனடா | தினேஷ் | கனடா | |
| தொலைபேசி: | +19056839894 | தொலைபேசி: | +16474045433 | தகவல்: |
| குகன் | கனடா | விவேகானந்தன் | ஜேர்மனி | பிள்ளைகள். |
| செல்லிடப்பேசி: | +16478550600 | தொலைபேசி: | +496205189690 | (53836) |


## வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உருளைக்கிழங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு கடந்த திங்கட்கிழமை திவிநெகும (வாழ்வின் எழுச்சி) அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒருதொகுதி உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டன.

வெல்லாவெளியில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி காரியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது போரதீவுப்பற்று பிரதேசத்தின் 43 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட 7 ஆயிரத்து 595 குடும்பங்களுக்கு தலா 2 கிலோ கிராம் படி 15ஆயிரத்து 190 கிலோகிராம் உருளைக் கிழங்குகள் வழங்கப்பட்டதாக போரதீவுப்பற்று பிரதேசத்தின் வாழ்வின் எழுச்சி திணைக் களத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் க.உதயகுமார் கூறினார்.

இந்த நிகழ்வில் போரதீவுப்பற்று பிரதேச வாழ்வின் எழுச்சித்திட்ட முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார் மற்றும் திவநெகும உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். (த-31-10)


## 09 ஆம் ஆண்டு நினைவு



### பிலேந்திரன் ஜேம்ஸ்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 18.08.1936 | 07.11.2005 |

ஆண்டுகள் ஒன்பது சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலா.

11/A, சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை..

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53537)(3.6.3)

ELTC
ஆங்கில மொழி போதனாக் கல்லூரி வழங்கும்
DIPLOMA IN
PRE-SCHOOL & PRIMARY TEACHING
Duration: 01Year
Lectures: Saturdays & Sundays
கற்கைநெறி முடிவில் சர்வதேச பாடசாலையில் பயிற்சி வழங்கப்படும்
கற்கைநெறி ஆரம்பம் 08-11-2014 9.am
ENGLISH LANGUAGE TEACHING COLLEGE
TEACHERS TRAINING CENTRE
133,A9 ROAD, KACHCHERI,
JAFFNA.TP: 077 074 3131

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம்



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம் நேற்று (06.11.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், திலகேஸ்வரி, திலகரூபன், திலகசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், குகதாஸ் (மோகன்-திருநெல்வேலி, சிவன் வீதி.), செல்வந்தி (பருத்தித்துறை), சுயாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், யதுசன், கஜவர்த்தனன், நிவேதிகா, தீபிகா, செல்வகரன், குகதரன், பவிதரன், தரணிகா, வைஸ்ணவி, சாகித்தியா, தாமிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள அவரது மருமகன் (மோகன்) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, சிவன் வீதி,
திருநெல்வேலி.
(53846) (10.6)
தகவல்:
இ. மோகன் (மருமகன்)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சுந்தரலிங்கம்



(ஓய்வுபெற்ற முகாமையாளர் இ.போ.ச. காரைநகர் ஏப்போ.)

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 122, உதயநகர் கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (06.11.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதம்-பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகைவாசன் (பொறியியலாளர்), லோகேஸ்வரன் (ஆசிரியர், கிளி/திருவையாறு ம.வி), கிருஷ்ணகாந்தி (ஆசிரியை, கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்), சதீஸ்வரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், நிமி, சுனித்திரா, அரியதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனும், லோகலீலாவதி (காலி), மனோரஞ்சிதம் (கனடா), ரஞ்சிதமலர் (திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.), விஜயராசா, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அபிரா, அகலிகா, கவின்கா, வித்தகன், ஆதித்தன், ஹருஸ்மன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது உதயநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 122, உதயநகர்,
கிளிநொச்சி.
(47921) (10.6)
தகவல்:
குடும்பத்தினர்.

# சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.7

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரால் சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த கருத்தரங்கில் ஆரோக்கிய வாழ்வு, ஆரோக்கிய உணவு முறை, ஆரோக்கியமான உடல் நிறை பேணுகை, தொற்றா நோய்களின் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு முறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைய இருக்கின்றது. அன்றைய தினத்தில் கற்பித்தலுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், சுகாதார துறையினர்கள் மற்றும் ஆர்வமுடைய பொதுமக்கள் அனைவரையும் இதில் கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர். (த)

**தேவை** புடைவை கடைக்கு பெண் விற்பனையாளர் தேவை. பழக விரும்புபவர்கள் அல்லது அனுபவமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
த. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ்
21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 3086 894
(53843) (10.6)

# ஆள்கள் தேவை

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்க உள்ள கணினிக் கல்வி நிலையத்துக்கு MS-Office, Internet & E-mail கற்பிக்கக் கூடிய ஆண்கள் மற்றும் Computer Lab பார்க்கக் கூடிய பெண்கள் தேவை. வேறு பாடங்கள் மற்றும் கணினி கற்பித்த அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் சுயவிவரக் கோவையினை 14.11.2014 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல:5023
C/o. உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(53842) (10.6)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி செந்தி சுதாகர்
அவர்களின் அன்பு மாமன்
**நாகலிங்கம் நவரத்தினம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், வலிகாமம் தெ.க, கோப்பாய்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலம்பெயர்ந்தோர் உதவியளிப்பு

கரணவாய், நவ.07

கடந்த கால போர் இடர்களால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு மத்தியிலும் கல்வி கற்று பல்கலைக் கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் புலம் பெயர் நோர்வேயில் வசிக்கும் உறவுகளால் கல்வி ஊக்குவிப்புக்காக ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா பணம் வழங்கப் பட்டுள்ளது.

மன்னார், கைதடி போன்ற பகுதிகளிலிருந்து நோர்வேயில் வசிக்கும் இரு உறவுகளினாலேயே கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 7 மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும், திருகோணமலையில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்த நிதியானது உரிய மாணவர்களுக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசாவினால் கையளிக்கப்பட்டது.

(த-108)

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி மார்க்கண்டு



யாழ். இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மார்க்கண்டு கடந்த 05.11.2014 புதன் கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவ ரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு. மார்க்கண்டு (கணவர்)
பிள்ளைகள் : மா.சிவஞானம் (R.D.D)
(வீதி அபிவிருத்தி திணைக்களம்)
மா.சிவப்பிரமம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
(53840) (10.6)

# கண்ணீர் காணிக்கை



நேற்று (06.11.2014) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது சங்கத் தலைவர்

## வேலாயுதர் சொர்ணலிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியங்காடு.
(53841) (10.6)
ஞானபாஸ்கரோதய
சங்கம்

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி கெங்கராசா



நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி கெங்கராசா நேற்று (06.11.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கெங்கராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகேசு-கண்மணி தம் பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் ருக்குமணி தம்பதியரின் மருமகளும், தம்பிராசா, மகேஸ்வரன், யோகேஸ்வரி (கொலண்ட்), சதானந்தன்,சத்தியேஸ்வரன் (பிரான்ஸ்), துரைராசா, கோமதி ஆகியோரின் சகோதரியும், விசாலினி, தினேசன் (பிரான்ஸ்), பிரசாந், அர்ச்சுன் ஆகியோரின் தாயும், ரஜனிகாந், கேதாரணி ஆகியோரின் மாமியும், சுலக்ஸன், ஓவியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப ஒரு மணிக்கு நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(53845) (10.6)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வேலாயுதர் சொர்ணலிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், தலைவர்-ஞானபாஸ்கரோதய சங்கம்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நில அளவையாளரும், ஞானபாஸ்கரோதய சங்க தலைவருமான வேலாயுதர் சொர்ணலிங்கம் நேற்று (06.11.2014) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை-செல் லம்மா தம்பதியரின் பேரனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதர்- சிவபாக்கியம் தம்பதியரின் மகனும், இந்துமதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் மருமகனும், Dr.சூரியகுமார் (UK), காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் இராஜசூரியர், சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மோசஸ் மரியதாசன் (திட்டப்பணிப்பாளர் NRRP C7 RDA, Jaffna.), Dr.சாந்தினி(UK), கோமதி (UK), நளினி (UK), திவாகரன் (UK) ஆகியோரின் மைத்துனரும், சுஜீதன், கார்த்திகா, சாய்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.காண்டீபன், Dr.பிரசாந்தன், Dr.காயத்திரி, கிறிசாந், பிரியங்கா, மிலெனி சிறிசாந்தி, பிரீத்தா, ரனிஸ்கா ஆகியோரின் மாமனும், சோபிசாந், ஹம்சாயினி, சதுர்சன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

151, G.P.S வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
(53839)(10.6)
தகவல்:
குடும்பத்தினர்.
021 2230 128

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி நவமணி பத்மநாதன்



பருத்தித்துறை, புலோலி மத்தி, கந்தஉடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி பத்மநாதன் 05.11.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவி யும் காலஞ்சென்ற மகாலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (நில அளவைத் திணைக்களம்), சிரோன்மணி, இராமசாமி (ஓய்வூதியர் வடமராட்சி கல்வி வலயம்) ஆகியோரின் சகோதரியும், ஜெயக்குமாரி (கொழும்பு), கமலகுமாரி, இராசேந்திரம் (டென்மார்க்), யோகேந்திரன் (டென்மார்க்), ஞானேந்திரன் (முன்னாள் ஊழியர் அஞ்சல் அலுவலகம், பருத்தித்துறை), காலஞ்சென்ற சிவகுமாரி ஆகியோரின் தாயாரும், பாலசுப்பிரமணியம் (ஓய்வூதியர் R.D.A), ஆனந்தராணி (டென்மார்க்), சுஜாதா (டென்மார்க்), யமுனா ஆகியோரின் மாமியும், கஸ்தூரி (டென்மார்க்), வர்ணஜா (டென் மார்க்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மட மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

கந்தஉடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி, பருத்தித்துறை.
(C/17296)(10.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### உயர்

றத்தின் சட்ட வியாக் கியானமே இறுதி முடிவைத் தீர்மா னிக்கும் என்றும் அவர் தெரிவித் தார்.

"18 ஆவது திருத்தச் சட்டத்துக் கமைய மேலும் ஒரு தவணைக் காலத்திற்காக தேர்தல் ஒன்றின் மூலமாக ஜனாதிபதிப் பத விக் காக மக்களின் ஆணையைக் கோரும் எனது நோக் கத்தை பிரகட னப்படுத்துவதற்கு ஏதேனும் தடைகள் உள்ளனவா? 18 ஆவது திருத்தத்தின் மூலம் மாற்றம்செய்யப்பட்ட அரசமைப் பின் ஏற்பாடுகளுக்கு அமை வாக நடப்பு ஜனாதிபதி என்ற வகையில் நான் 18 ஆவது திருத் தத்தை மேற்கொண்ட தினத்தில் ஜனாதிபதிக்கான இரண்டா வது தவணைக்காலத்தை வகித்துக் கொண்டிருந்தமை யானது மேலு மொரு தவணைக் காலத்திற்கு தேர்ந் தெடுக்கப்படு வதற்கு ஏதேனும் தடை யாக அமையுமா?" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் உயர்நீதிமன்றத்திடம் சட்ட விளக்கம் கோரியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து 'உத யனிடம் கருத்து வெளி யிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜே தாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்த வை வருமாறு,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் மூன்றா வது முறை போட்டியிட முடியாது என்றும், இரண்டாவது பதவிக் காலம் முடிவடை வதற்கு முன் னர் தேர்தலொன்றுக்கு செல்ல முடியாது என்றும் நாம் ஏற்க னவே சுட்டிக்காட்டியிருந் தோம். இவ் வாறான நிலையில், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீ திமன்றத் திடம் விளக்கம் கோரி யுள்ளார்.

இலங்கையின் நீதித்துறை சுயா தீனம் குறித்து மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர். நீதித்துறை சுயாதீனத்தை இல்லாதொழிக் கும் 18 ஆவது திருத்தச்சட்டத்துக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித் தோம். 17 ஆவது திருத்தச்சட்டத்தை மீள நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம். எது எவ் வாறிருப்பினும், உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தமது சட்ட விளக்கத்தை வழங்கி யதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஐக் கிய தேசியக்கட்சித்தீர்மானிக்கும். கட்சித் தலைவர் உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்து நட வடிக்கை எடுப்போம் - என் றார்.

### இடுப்பில்

ஒருவர் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலக புலனாய்வா ளர்களால் யாழ். பண்ணை யில் வைத்து நேற்று மதியம் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சாவகச்சேரியைச் சேர்ந்த இரண்டுபேரும் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவருமாக 3 பேரும் குறித்த ஒட்டோவில் சென்றுள் ளனர். அவர்கள் யாழ்.பண்ணை யில் பயணித்துக் கொண்டிருக் கும்போது அவர்களை இடைம றித்தபோதே தென்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் தப்பியோடி விட்டார். ஏனையவர்களைச் சோதனையிட்டபோதே அவர் கள் தமது இடுப்பில் 50 பைக்கெற் றுகள் வீதம் இருவரும் 100 பைக்கெற்றுகளை தம்வசம் வைத்துக் கொண்டு பயணித் துள்ளமை தெரியவந்தது. அவற் றின் பெறுமதி சுமார் 50 ஆயி ரம் ரூபா என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

அவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ சாரதி அவர்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் களுக்கு அவை எங்கிருந்து கிடைத்தன என்பது இதுவரை தெரியவில்லை. தப்பியோடிய தென்பகுதி நபர் தொடர்பில் எது வும் தெரியவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர். அவர்கள் மூவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### ஆளும்

செய்திகளை வெளியிட்டிருந் தன. இந்தியப் பெருந்தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரும் போது பருத்தித்துறையில் உள்ள மகாத்மா காந்தி சிலையையும் பார்ப்பார்கள்.

கடந்த மூன்று வருடகாலத் துக்குள் பருத்தித்துறை நகரம் பெரிய முன்னேற்றம் அடைந் துள்ளதாகக் கேள்விப்படுகின் றேன். எதிர்காலத்தில் மேலும் முன்னேறி ஒரு முன்னோடி நகரமாக பருத்தித்துறை நகரம் விளங்கவேண்டும். அனைவ ரும் ஒற்றுமையாக இருந்து பருத்தித்துறை நகர் முன் னேற வாழ்த்துகின்றேன்- என்றார்.

மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் சி.திருவாகரன் சிறப்புரையாற்றுகையில்

பருத்தித்துறை நகரின் வளர்ச் சியையும் அழிவையும் நான் நேரில் கண்டுள்ளேன். நான் ஆறாம் வகுப்பு படித்த காலத்தில் பருத்தித்துறை பொதுநூலகத் தைப் பயன்படுத்தியுள்ளேன். தற்போது நூலகம் புதிய கட்டட மாக மாறியுள்ளது மகிழ்ச்சி அளிக்கின்றது. தற்போது பருத் தத்துறை நகரம் உன்னத நிலையைநோக்கிச்செல்கின்றது. பொதுநூலகங்களைப் பயன் படுத்தும் மக்களின் தொகை அதிகரிக்கவேண்டும் என்பதற் காகவே வாசிப்பு மாத நிகழ்வு நடத்தப்பட்டு வாசிப்புப் பழக் கம் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின் றது. சபைத்தலைவர் விடுத்த கோரிக்கைகள் தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். நிறைவேற்றக்கூடிய அனைத் தையும் செய்துதருவோம்- என்றார்.

இந்திய பிரதித் தூதுவர் ஒரு தொகுதி நூல்களைப் பருத்தித் துறை பொதுநூலகத்துக்கென சபைத் தலைவர் சபா ரவீந்தி ரனிடம் கையளித்தார்.

தேசிய வாசிப்பு மாதப் போட்டி அறநெறிப்பாடசாலை தேசிய மாவட்ட மட்ட மாணவர்கள், தேசிய கபடி,கராட்டிச் சாதனை யாளர்கள், முன்பள்ளி ஆசிரியை கள், சபைத் உத்தியோகத்தர் கள் சிறுவர் மகளிர், முதியோர், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளுக்கான பரிசில் வழங்க லும் கௌரவிப்புகளும் அங்கு இடம்பெற்றன. சாதனையாளர் களுக்கு நகர பிதா விருதும் வழங்கப்பட்டன. சிறுவர்க ளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (த-173)

### பகிரங்க

ஜனாதிபதி மஹிந்தவின் இந்த விளக்கம் தொடர்பில் சிரேஷ்ட சட்டத்த ரணி என்ற ரீதியில் தங்கள் கருத்து என்னவென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பி னர் சுமந்திரனிடம் நேற்று 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிப தித் தேர்தலில் போட் டியிட முடியாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சட்டவாதங்களை முன் வைத் திருந்தார். இலங்கை சட்டத்தர ணிகள் சங்கத்தினரும் இந்த ஜனாதி பதி மூன்றாவது முறை யாகவும் தேர்த லில் போட்டியிட முடியாது என்று கார ணங்க ளைக் கூறியிருந்தனர்.

இவ்வாறு பல தரப்பினரின் சட்ட வியாக்கியானங்கள் வெளி வந்துள்ள நிலையில், மூன்றா வது தடவையாகவும் தான் தேர் தலில் போட்டியிடத் தடை ஏதும் உள்ளதா? என்று உயர்நீதிமன் றத்தின் விளக்கத்தை நாடியுள் ளார் ஜனாதிபதி மஹிந்த.

நாட்டின் அரசமைப்பு தொடர் பான விடயங்கள் நீதிமன்றத் தில் பகிரங்க அமர்வில் விவாதிக் கப்படுவது வழக் கம். எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உயர்நீதிமன்றத்திடம் தற் போது கேட்டுள்ள விளக்கமும் அவ்வாறு நடைபெறவேண் டும். அதைவிடுத்துநீதிமன்றத்தின் மூடிய கதவுகளுக்குப் பின்னால் இரகசியமாக விசாரணை கள், கலந்துரையாடல்கள் நடை பெற்று எழுத்துமூலம் அறிக்கை சமர்ப்பிக் கப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது" - என்றார்.

### இளம்

இதேவேளை, மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த பரம லிங்கம் ஸ்ரீகரன்(வயது-51) என்பவர் கடந்த இரண்டாம் திகதி மருத்துவ சிகிச்சைக்கா கச் சாவகச்சேரி மருத்துவம னையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதாகவும் அங்கிருந்து அவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரது உறவினர்களால் சாவ கச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

### விடுதிகளில்

டனர். அந்த வேளையில் இந்த 5 பேரையும் கைது செய்த தாகத் தெரிவிக்கப்பட்டது. குறித்த பெண்ணை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (த-9)

### அதிபர்கள்

களை வினைத்திறன் மிக்க வர்களாக்கவும் கல்வித் தராத ரத்தின் அடிப்படைத் தகுதி நிலைக்கு உயர்நிலை பெற வைக்கவும் உதவுபவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் களே. அத்தகையவர்களுக்கு சிறப்பான முக்கியத்துவம் வழங் குவதற்குப் பதிலாக புறமொதுக் கப்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

எனவே நாட்டின் எதிர்கால முதலீடாக அமையும் மனித வளத்தை மேம்படுத்த உதவும் தரப்பினரான ஆசிரி யர்கள் மற்றும் அதிபர்களுக்கு அவர்களது சேவைக் காலத் தில் 20 வருடங்களைப் பூர்த்தி செய்தநாள் முதல் 15 ஆயிரம் ரூபாவை விசேட தொழிற்ப டியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிக ளிடம் கேட்டபோது: ஆசிரியர் கள், அதிபர்களுக்கான குறித்த கொடுப்பனவு தொடர்பில் சுற் றறிக்கை எதுவும் வரவில்லை. அது கிடைத்த பின்னரே விளக்கம் தெரியவரும் என்று தெரிவித்தனர். (த-4)

### தீர்வைப்

லிலே ஒரு நாட்டை குறித்த விதத் தில் கொண்டு செலுத்து வதற்கு பல நூற்றாண்டு கால மாக வன் அழுத்தமே பயன் பாட்டில் இருந்திருக்கிறது. வன் அழுத்தம் என்பது ஆயுத பலம் மற்றும் பணபலத்தை உள்ளடக் கியதாகும்.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடியும்வரை உலகஅரசியலிலே வன் அழுத்தம் முக்கியமான தாக இருந்தது. அதாவது ஒன்றை அடைவதற்குப் படைபலத்தை உபயோகிக்க வேண்டும் அல் லது பண பலத்தினை உபயோ கிக்க வேண்டும். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின் னர், விசேடமாக ஐ.நா. உரு வாக்கப்பட்ட 1950ஆம் ஆண் டுக்குப் பின்னர் இந்த நிலை மாற்றமடைய ஆரம்பித்தது.

இரண்டாம் உலக யுத்தம் முடி வுடன் மென்வலுவின் பயன்பாடு ஆரம்பமானது. படைபலத்தா லும் பண பலத்தாலும் சாதிக்க முடிந்ததை இந்த மென் தீவி ரம் ஊடாகவும் சாதிக்க முடிந் தது. இதற்கு உதாரணங்கள் பலவுண்டு.

தலாய்லாமா தலைமையி லான திபெத்திய மக்களின் போராட்டம், கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கின் போராட்டம், அதற்கு முன்னர் இந்தியாவில் காந்தியின் சுதந் திரப் போராட்டம், தென்னாபி ரிக்காவிலே கறுப்பின மக்க ளின் விடுதலைக்காக நெல்சன் மண்டேலா நடத்திய போராட்டம் எல்லாமே மென்தீவிரத்திற் கான உதாரணங்கள். நெல்சன் மண்டேலா முதலில் வன்தீவிரத் தைப் பின்பற்றினாலும் பின்னர் மென் தீவிரம் மூலமாகவே தனது மக்களுக்கான உரி மையை வென்றெடுத்தார்.

இந்த மென் தீவிரத்திடம் ஆயு தங்கள் இல்லை, பண பலம் இல்லை. ஆனால் மென் தீவி ரத்தைக் கையாள்பவர்களின் இலக்கு நியாயமானது, நீதி யானது. அதை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளும்போது அதற்கு உலகளவில் ஆதரவு கிடைக் கின்றது. தலாய்லாமா, லூதர் கிங், நெல்சன் மண்டேலா என எல்லோருடைய போராட்டத்தி லும் அதுதான் நடந்தது. மென் தீவிரத்துக்கு உலகெங்கும் இருந்து தார்மீக ஆதரவு கிடைக்கும்.

உதாரணங்கள் நமக்கும் பொருந்தும். இன்றைய அரசி யல் சூழ்நிலையிலே மென்தீ விரம்தான் எமக்கும் பொருத்த மானது. இப்போதிருக்கும் களச்சூழலிலே வன்வலுவுக்கு - வன் தீவிரத்துக்கு இடமே யில்லை என்று சொல்ல நான் தயங்கவில்லை. இதுதான் யதார்த் தம். இன்று எம்மிடத்தில் ஆயுதங்கள் இல்லை. பண பலமும் கிடையாது. இல்லா ததை இருக்கிறது என்று பகல்கனவு காண்பது முட்டாள் தனமான செயல்.

வன்தீவிரத்தின் மூலம் தமிழர் களின் சரித்திரத்திலே எந்த வொரு முன்னேற்றமும் ஏற்பட வேயில்லை என்று நான் சொல் லமாட்டேன். வன்தீவிரத் திற்குச் செல்வதற்கு எடுக்கப் பட்ட முடிவையும் தவறென்று சொல்லமாட்டேன். அன்றி ருந்தநிலையில் அந்த முடிவுஎடுக் கப்பட்டது. அதைத் தவறென்று நான் சொல்ல வரவில்லை. அந்த முடிவின் அடிப்படையில் எமக்காக தம்மை மாய்த்துக் கொண்டவர்கள் ஏராளம் பேர். அவர்கள் எமது நினைவுகளி லேயே தங்கள் உயிரை மாய்த் தவர்கள். அந்தச் செயற்பாடு எங்கள் சரித்திரத்தில் கொச்சைப் படுத்த முடியாதது. போற்றப்பட வேண்டியதொன்று.

ஆனால், இன்றைக்கு - 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் - எம்மிடம் வன்வலு இல்லை. அப்படிப்பட்ட நிலையில் எமது போராட்டத்தை எப்படித் தொடரப் போகிறோம்? உரிமையை எப்படி வென்றெடுக்கப்போகி றோம்? இன்றைய அரசியலில் மென்வலுதான் எம்மிடம் உள்ள ஆயுதம். வன்வலு எம்மி டம் இல்லை. இல்லாததை இருக்கி றது என்கிற மாயையை உரு வாக்குவது எமது இனத்தின் சுதந்திரத்திற்கோ முன்னேற் றத்துக்கோ பொருத்தமான தாக இல்லை. காலச் சூழலுக்கு ஏற்ப மென்வலுவைத்தான் நாம் பயன்படுத்த வேண்டும். உலகம் மதிக்கும் தலைவரை நாம் கொண்டிருக்கிறோம் என் பது இந்த சுழலிலும் எமக்கிருக் கும் சாதகம். எனவே தலைவர் சம்பந்தன் தலைமையில் மென் தீவிரத்தைப் பயன்படுத்தி நாம் உரிமையை வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும். அதைத் தான் செய்து கொண்டிருக் கிறோம். இந்த நாட்டின் ஆட் சியாளர்களிடம் மனமாற்றத்தை நேரடியாக ஏற்படுத்தக்கூடிய மென்வலு எம்மிடம் இல்லை. எனவே எமது மென்தீவிரத் தின் மூலமாக, வன்வலு உள்ள நாடுகளை வளைத்து அவற்றி னூடாக ஆட்சியாளர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்கிறோம். அதுதான் இப் போதைக்கு இருக்கும் ஒரே வழி. அதனைப் பலப்படுத்தும் வகையில் தமிழர்கள் ஒன்றி ணைந்து கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்த வேண் டும். தமிழர்களின் நியாயத்தை ஏற்று ஏனையவர்களும் தார் மீக ஆதரவு தரும் நிலைமை யை உருவாக்கவேண்டும் - என்றார். (உ-ரி.9)

### கருத்துச்

பது தொடர்பில் உயர்நீதி மன்றத்தின் நிலைப்பாட்டை எதிர்வரும் 10 ஆம் திக திக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்திடம் நேற்றுமுன் தினம் விளக்கம் கோரியிருந்தார்.

ஜனாதிபதியின் மேற்படி தீர் மானம் தொடர்பில் எம்மிடம் நேற்று கருத்து வெளியிட்ட போதே சட்டத்தர ணிகள் சங் கத்தின் தலைவர் உபுல ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித் தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ மூன் றாவது முறை போட்டியிடலாமா? முடியாதா? என்பது அவரது தனிநபர் பிரச்சினையாகும். இதற்கு அவர் தனது சட்டத்தர ணிகள் குழாமைக் கொண்டு ஆராய்ந்திருக்க வேண்டும். ஆனால், அவர் இது தொடர் பில் உயர்நீதிமன்றத்திடம் சட்ட விளக்கம் கோரியுள்ளார் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர் பான அரசின் உத்தியோக பூர்வ அறிவிப்பு இதுவரையில் வெளியிடப்படவில்லை. அத் துடன், ஜனாதிபதியின் இரண்டா வது பதவிக்காலம் முடிவடை வதற்கு இன்னும் இரண்டு வ ருடங்கள் உள்ளன (19.11.2016). இவ்வாறான நிலையில், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை இவ்வளவு அவ சரமாக கோரி யுள்ளதன் அவசியத்தை எம் மால் புரிந்துகொள்ள முடிய வில்லை எனறும் சந்தேகம் வெளியிட்டார் சட்டத்தரணி கள் சங்கத்தின் தலைவர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றா வது முறை போட்டியிடுவது தொடர்பிலும், இரண் டாவது பதவிக் காலத்தின் 4 வருடங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன் னரும் தேர்தலை நடத்துவது தொடர்பில் பல தரப்பினரும் கருத்து வெளியிட்டு வருகின்ற னர். இந்த நிலையில், இவர்க ளது கருத்து வெளியிடும் சுதந்திரத்தை இல்லாதொழிக் கும் வகையிலேயே இந்தச் செயல் அமைந்துள்ளது - என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ற-சி)

### முள்ளிக்குளம்

முள்ளிக்குளத்திலுள்ள கடற் படையினரின் முகாமை அகற்றி அதில் மக்கள் மீள்குடியமர்வ தற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்று 2012 ஆம் ஆண்டு வழங்கிய வாக்குறு தியை மீளவும் ஆயர் நினைவூட் டினார். அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷ, முள்ளிக்கு ளம் பகுதி யில் அமைந்துள்ள கடற்படை முகாம் அகற்றப்பட மாட்டாது என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார். இருப்பி னும் பிரதான முகாமைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகள் விடுவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனூ டாக, முள்ளிக்குளம் மக்கள் தமது கடற்றொழில் நடவடிக்கைக்கு இலகுவாகச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் முள்ளிக்குளம் கடற் படை முகாம் காரணமாக காணி களை இழக்கும் மக்களுக்கு அரை ஏக்கர் வீதம் தற்போது மாற்றிடத்தில் காணிகள் வழங் கப்பட்டுள்ளன. அந்தக் காணிக ளில் நிரந்தர வீடுகள் அமைப் பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளார் என்றும் தெரியவருகின் றது. (ற-5)

### ஆளுநரின்

மதி பெறப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளு நரால் அனுப்பப்பட்டிருந்த அறி வித்தல், வடக்கு மாகாண சபை அமர்வில் அவைத்தலைவ ரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், தனது தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தி யாவுக்குச் செல்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜி. ஏ.சந்திரசிறியின் அனு மதியைப் பெற்றுக் கொண்டுள் ளார். இதே போன்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்க ளான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங் கம் ஆகியோர் வெளிநாட்டுச் செல்வதற்கு வடக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி கோரியுள்ள னர்.

திருமதி அனந்தி சசிதரன் மலேசி யாவுக்குச் செல்வதற்கும், எம்.கே.சிவாஜிலிங்கம் அமெ ரிக்காவுக்குச் செல்வதற் குமே ஆளுநரிடம் அனுமதி கோரி யுள்ளனர். இவர்களுக் கான அனுமதியை இதுவரை யில் வழங்காத ஆளுநர், வடக்கு மாகாண அவைத் தலை வரிடம் இவர்களது பயணத் துக்கான அனுமதிக்கு பரிந் துரை செய்து அனுப்புமாறு கோரியுள்ளார். (ற-5)

# அம்பாறையில் தமிழர்களின் காணிகளை அபகரிக்க முயற்சி

அம்பாறை, நவ.7
அம்பாறை மாவட்டத்தில் புதிய வளத்தாப்பிட்டி தமிழ்க் கிராமத்தில் அகழ்வாராய்ச்சிஎன்றபெயரில் காணிகளை அபகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.
குறித்த கிராமத்துக்கு நேற்று முன்தினம் மாலை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கிராம சேவை அதிகாரி ஆகியோர் சென்றுள்ளனர்.
அங்குள்ள பழவெளி கிராமத்தின் சிவனாலயத்தைச் சுற்றியுள்ள கிணறு, வீடுகள் அனைத்தையும் சுற்றி அவர்கள் எல்லைக் கற்கள் நட்டனர்.
இந்த நிலையில், பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் அவ்விடத்தில் கூடியிருப்பதாகவும் தங்களுடைய காணிகளுக்கு எல்லைகள் இடப்படுவதாகவும் மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரனுக்கு மக்கள் அறிவித்ததை அடுத்து, அந்தப்பிரதேசத்துக்குமாகாண சபை உறுப்பினர் உடனடியாக பயணம் செய்தார். அங்கு நின்றிருந்த அகழ்வாராய்ச்சி உத்தியோகத்தர்களுடன் இது தொடர்பாக முரண்பட்டதுடன், இராணுவம் மற்றும் பொலிஸாரிடமும் கடும் கண்டனம் தெரிவித்தார்.
அங்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ.புஸ்பராஜாவும் சென்றிருந்தார்.
சம்மாந்துறை பிரதேச செயலாளர் மன்சூரிடம் தொடர்பு கொண்ட இராஜேஸ்வரன் அத்துமீறல் குறித்துக் கேட்ட போது, "நாம் அரச அதிபரிடம் கூறியுள்ளோம்.அது வர்த்தமானிப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டது என்றார் அவர்.
தொல்பொருள் திணைக் களத்திலிருந்து வந்த பெண் உயர் அதிகாரியிடம் அது பற்றிக் கேட்ட போது, இது விடயத்தை பேசித்தீர்த்துக் கொள்ளலாம். தற்போது எமது பணியைச் செய்யவிடுங்கள் என்று கூறியதாக தெரிவிக்கப் படுகிறது.
இந்த விடயம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகளிடம் மாகாண சபை உறுப்பினர் அறிவித்துள்ளதாக கூறியதுடன் ஏழை மக்களின் நிலங்களை சூறையாடுவதை அனுமதிக்க முடியாது என் றும் அவர் தெரிவித்தார். (வ)





தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தியும், இலங்கை அரசை கண்டித்தும், நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (வ)

# இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடை வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

டில்லி, நவ.7
விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்து சட்ட விரோத அமைப்பாகக் கருதி தடையை நீடிக்க வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் முன்னிலையான சட்டத் தரணி யோகேஷ் கன்னா வாதிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் மீதான தடை வழக்கின் இறுதி விசாரணை முடிவடைந்ததைஅடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடையை மத்திய அரசு அவ்வப்போது நீடித்து வரு கிறது.
அந்தத் தடை சரியா என் பதை விசாரிக்குமாறு நீதிபதி ஜி.பி. மிட்டல் தலைமையிலான சட்ட விரோத செயல்கள் தடுப்பு தீர்ப்பாயத்துக்கு டில்லி உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.
இந்த தீர்ப்பாயத்தின் இறுதிக் கட்ட விசாரணை நேற்று முன்தினம் டில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி ஜி.பி.மிட்டல் தலைமையில் நடைபெற்றது.
மத்திய அரசின் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சஞ்ஜீவ் ஜெயின் தன்னுடைய வாதத்தில், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இந்தியாவில் இன்னமும் தொடர்ந்து வருகின்றன என்று உளவுத் துறையின் தகவல்கள் கிடைத்து வருகின்றன. இது இந்திய இறையாண்மைக்கும், அமைதிக்கும் ஊறு விளைவிப்பதாக அமையும். விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து அந்த அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கூடாது என்றார்.
தமிழக அரசு சார்பில் முன்னிலையாகிய சட்டத் தரணி யோகேஷ் கன்னா தன்னுடைய வாதத்தில்,
விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவாக இந்தியாவில் சில குழுக்கள் செயற்பட்டன. இதனால், அவற்றின் உறுப்பினர்கள் மீது சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2012, மே 14 தொடக்கம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலர் மீது வெடிமருந்து சட்டங்களின் கீழும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
விடுதலைப்புலிகளுக்கு சாதகமாகவும், அவர்களின் தனி ஈழம் குறித்த கோரிக்கையை ஆதரித்தும் இணையத்தளம் மூலம்வெளிநாடுகளில்வாழும் இலங்கைதமிழர்கள் சிலர் பரப்புரை செய்து வருகின்றனர். அவர்கள், இலங்கையில் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க இந்திய அரசே காரணம் என்றும் குறிப்பிட்டு வருகின்றனர்.
இத்தகைய பரப்புரைகளால் இந்தியாவில் உள்ள மிக முக்கிய பிரமுகர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, பிரிவினையைத் தூண்டும் இதுபோன்ற குழுக்களை ஊக்குவிக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்து சட்ட விரோத அமைப்பாகக் கருதி தடையை நீடிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார். (வ)

## சிறுமிக்கு சூடுவைத்த பெண்

திருமலை,நவ.7
திருகோணமலை, லிங்கநகர் பகுதியில் சிறுமியொருத்திக்கு இரும்புக் கம்பியால் சூடு வைத்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சிறுமியின் சிறிய தாயாரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
10 ரூபா பணத்தைத் திருப்பிக் கொடுக்காதமைக்காக சிறுமிக்கு சூடு வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சம்பவத்தில் காயமடைந்த சிறுமி தற்போது திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதுடன், கைதான பெண்ணை நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (வ)

## பொன்சேகாவின் உதவிகளை ஏற்க மறுத்த அதிகாரிகள்

கொழும்பு, நவ.7
முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா, கொஸ்லந்த மீரிய பெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக இடம் பெயர்ந்த மக்களை நேரில் சென்று பார்வையிட்டார்.
அங்கு அவர்கள் கொண்டு சென்ற உதவிப் பொருள்களை விநியோகிக்க அதிகாரிகள் இடமளிக்கவில்லை. அத்துடன் அவற்றை பொறுப்பேற்கவும் அதிகாரிகள் மறுத்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## குற்றங்களும் கைதுகளும்

தென்மராட்சி

### வசமாக மாட்டினார் தவசிகுள வாசி

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த தவசிகுளம் வாசியொருவரைக் கைது செய்தனர் கொடிகாமம் பொலி ஸார். அவரைச் சாவகச்சேரி நீதிமன்றில் முற் படுத்தியபோது மூன்று மாத சிறைத்தண்டனையும் 50ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.
குறித்த நபர் ஏற்கனவே நான்கு தடவைகள் நீதிமன்றால் தண்டிக்கப்பட்டவர் என்பதைப் பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து குறித்த நபருக்கு மூன்று மாத சிறைத் தண்டனையும் 50ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.[வ—9]

தென்மராட்சி

### சமிக்ஞையை மீறிச்சென்றவரை விரட்டிச்சென்று பிடித்த பொலிஸார்

வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகனச் சாரதிகள் இருவருக்கு செவ்வாய்க்கிழமை சாவ கச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.
வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்றை நிறுத்து மாறு போக்குவரத்துப் பொலிஸார் சமிக்ஞை செய்தபோது அதனை நிறுத்தாமல் சென்றதால் அவரைத் துரத்திப் பிடித்தனர் பொலிஸார்.
குறித்த நபரை சோதனையிட்டபோது சாரதிய அனுமதிப்பத்திரமில்லாமலும் மது போதையிலும் அவர் இருந்ததைக் கண்டறிந்தனர்.
அவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 13ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். காப்புறுதிப்பத்திரம் இல்லாமல் விபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் வாகனத்தை செலுத்திய மற்றொரு சாரதிக்கு 10ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [வ—9]

தென்மராட்சி

### பொலிஸார் மீது தகாத வார்த்தைப் பிரயோகம்

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரொருவரை விடுவிக்கக்கோரி பொலிஸ் நிலையத்துக்கு மதுபோதையில் வந்த 26 வயதுடைய இளைஞரொருவர் பொலிஸாரை தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளார். இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை இரவு பளையில் இடம்பெற்றது. குறித்த இளைஞரைக் கைது செய்த பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்காக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது பரிசோதனையில் ஈடுபட்ட மருத்து வரையும் அவர் தகாத வார்த்தை களால் ஏசியுள்ளார். அந்த இளை ஞரை திங்கட்கிழமை பளைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அழைத்துச் சென்றனர். [வ—9]

கிளிநொச்சி

### ஆலயம் இடிக்கப்பட்டு சிலை திருட்டு

பூநகரி, வேரவில் கிராமத்திலுள்ள கண்ணகி அம்மன் ஆலயம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை உடைக்கப்பட்டு அங்கிருந்த அம்மன் சிலை திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக ஜெயபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [வ—18]

### இந்தியப் பிரஜை கைது

கொழும்பு, நவ.7
குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டதிட்டங்களை மீறி, பொகவந்தலாவை, செ்ன்.விஜயன்ஸ் தோட்டத்தில் தங்கியிருந்த இந்தியப்பிரஜையொருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இந்தியப்பிரஜையை ஹட்டன் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். [வ]



### கசிப்புடன் ஒருவர் சிக்கினார்

கிளிநொச்சி, நவ.7
2 போத்தல் கசிப்புடன் நபரொருவர் கிளிநொச்சி தொண்டமான் நகர்ப் பகுதியில் வைத்து திங்கட்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். குறித்த நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது மேற்படி நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் நீதிவான். [வ—18]

# முஸ்லிம்களும் மாட்டை உண்ணக் கூடாது

## யாழ்ப்பாணத்தில் கூறினார் சோபித தேரர்

யாழ்ப்பாணம், நவ. 7

பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதங்கள் மாடுகளைக் கொல்லக் கூடாது என்றும் அதை உண்ணக்கூடாதென்றும் சொல்கின்றன. அதேபோன்று முஸ்லிம் மக்களும் மாடுகளை உண்ணக் கூடாது. ஏனெனில் மாட்டின் பாலை அவர்கள் குடிப்பதனால், அதனை உண்ணக் கூடாது என ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓமல்பே சோபித தேரர் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 மாடுகள் நேற்றைய தினம் இராணுவத்தினரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு யாழ். முற்றவெளியில், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொல்லுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட மாடுகளையே நாம் மீட்டுப் பராமரித்து இன்று உங்களுக்கு வழங்குகின்றோம். இவற்றை நீங்கள் நன்றாகப் பராமரிக்கவேண்டும். இதனை நீங்கள் வைத்து ஒழுங்காகப் பராமரிக்கின்றீர்கள் என்பதை நானே நேரடியாக வந்து பார்ப்பேன். 30 வருடமாக நடந்த போர் நீங்கி இன்று நான் உங்களைச் சந்திக்கின்றேன். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினருக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். நாம் பசுமாட்டை மட்டும் இன்று உங்களுக்கு வழங்கவில்லை. அதனுடன் ஊடாகச் சமாதானத்தையும் - சகோதரத்துவத்தையும் உங்களுக்கு வழங்குகின்றோம். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததும் நான் 8 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை, யாழ்ப்பாண நூலகத்துக்கு வழங்கியிருந்தேன். இந்தச் சமாதானம் கிடைப்பதற்காக நாங்கள் பல படையினரின் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றோம். அவ்வாறு எமக்குக் கிடைத்த சமாதானம் நீண்ட காலத்துக்கு நீடிக்க வேண்டும் - என்றார். (த-5)



யாழ்மாவட்டத்தில் உள்ள 100 பயனாளிகளுக்கு நேற்று யாழ். முற்றவெளியில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 பசுக்கள் கையளிக்கப்பட்டன. இந்தப் பசுக்களை ஹெல உறுமய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் கையளித்தார். (த-21)

### தேவை

- பலாலி வீதி, திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதியிலும்
- கே.கே.எஸ் வீதி - கொக்குவில் பகுதியிலும்
- நல்லூரடியிலும்

4 தொடக்கம் 5 பரப்புக் காணி உடனடியாகத் தேவை.

(இடைத்தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு: 077 354 8552 (63835)(7.8.3)

### விக்னா

கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2015, 2016

வர்த்தகப் பிரிவு

பொருளியல் M.C.சுதாகரன்
கணக்கீடு M.R.ரோஜிந்தன்
வணிகக்கல்வி S.முகுந்தன்

ஆரம்பம்: 08.11.2014 (சனி) 11.AM

20 வருட அனுபவம் வாய்ந்த கூட்டணியில் வணிகப் பிரிவு மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## ஜீ.ஜீ பிறந்த தின நிகழ்வு நாளை

சட்டமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 113 ஆவது பிறந்ததின நிகழ்வு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உருவச்சிலை அமைந்துள்ள குருநகரில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்து பிறந்ததினம் நினைவு கூரப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான அ.விநாயக மூர்த்தி இந்த நிகழ்வுக்கான அழைப்பை விடுத்துள்ளார். (த-135)

### போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்

22ஆம் 23ஆம் திகதி நடைபெறவுள்ள
சங்க நிலைக்கள
பரீட்சைகளுக்கு
சனி, ஞாயிறு
10.00-4.00 மணிவரை

30ஆம் திகதி நடைபெறவுள்ள
தொழில்நுட்பக்கல்லூரி போதனாசிரியர்
பரீட்சைக்கு
சனி, ஞாயிறு
10.00-4.00 மணிவரை

SLAS முகாமைத்துவ உதவியாளர் வினைத்திறன் பரீட்சைகளுக்கான வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றன.

தொடர்பு: 075 416 4564.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

- மலேசியாவில் படிக்க பகுதிநேரமாக 60000/= வரை உழைக்க O/L மட்டும் போதும்.
- சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் பறக்க 100% விசா உறுதிப்பாடு.
- அனைத்து நாடுகளுக்கும் Visit Visa, மறுக்கப்பட்ட விசா, Student visa ஆலோசனை.
- ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
இல. 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

(53844)(10.6)

ரொமான்ஸ் இரகசியங்கள்

கணவன் மனைவிக்கிடையில்

இருக்க வேண்டிய புரிந்துணர்வுகள், விட்டுக்கொடுப்புக்கள், ஒத்தாசைகள் போன்றவற்றை உதாரண உவமேயங்களுடன் நயம்பட தொடராக ஒவ்வொரு தலைப்புக்களில் வாசித்து அறிந்து இல்லறத்தை இனிதாக்க

புதுமணத் தம்பதிகளுக்கான ஒரு அறிவியல் பரிசு

நல்லதொரு குடும்பம்

OLIARAZI மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
ඔලිඅරසි

தற்போது நவம்பர் மாத சஞ்சிகை விற்பனையில்





இல்லறம் சிறக்க பல நல்லறப் பண்புகளை உள்ளடக்கி வெளிவருகின்றது.
நல்லதொரு குடும்பத்தை உருவாக்க இன்றே ஒரு ஒளிஅரசியை வாங்கிடுங்கள்..
சஞ்சிகையை சகல பத்திரிகை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்...

தொடர்புகளுக்கு:
யாழ். - 0776569617 / 077 1945812
கொழும்பு - 0718 628379 / 011 5737592

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.